இ. ஜ. வெளியீடு-2.

# DAUGHTER INDIA.

## (IN TAMIL)

# பாரத குமாரி

அல்லது

## இந்திய ஸ்திரீகள்

## விபசாரியா-பிசாசா?

இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ மதங்களின்
ஆராய்ச்சிக் குவியல்.

இது எழுதியது
"பள்ளு-பறையர்" ஆசிரியர்
குலாம்.

"ராஜ ரசம்" கம்பெனி,
பொன்மலை, திருச்சி

...ம.] 1932. [விலை எட்டணா.

..., மேலகல்கண்டார்கோட்டை, பொன்மலை, திருச்சி

36

715
N32
17074

# பாரத குமாரி

பாரத குமாரிகளாகிய நம் ஸ்திரீ ரத்தினங்கள்,

"பெரும்பாலும் விபசார தோஷமுள்ளவர்கள்"
"பொய்யைப்போல் அபரிசுத்தமுள்ளவர்களாயிருக்கிறார்கள்."

"பொய்யின் மகள்"
"சமாதானத்தின் விரோதி"
"வீட்டுக்கு வேண்டிய நரகம்"
"தேளின் விஷம்"
"பிசாசு"

என்று, அடுக்கடுக்காக (நம் சகோதரிகளைப்பற்றி) நம் பண்டைய நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. இதைக்கண்டு நம் சகோதரிகள் நடுக்கிடுவார்கள். நம் சகோதரர்களும்—நவீனமனப்பான்மையுடையவர்கள் இவ்வாக்கியங்களைக்கண்டு நடுநடுங்குவார்கள். உண்மையே! ஆனால் இங்கு உண்மையை மட்டும் வெளியிடுகின்றோம். நம் சகோதரிகள் விபசார தோஷமுள்ளவர்கள் தானா? பிசாசின் கருவியா?—என்பதை நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். ஆராய ஆராய, நம் சகோதரிகளின் அந்தஸ்து வெகு கேவலமானதாகவே கூறப்பட்டுவந்திருக்கின்றன என்பது விளங்கும்.

நம் சகோதரிகள், முக்கியமாக மூன்று வகையினராய் இருக்கக்காண்கின்றோம். அவை இந்து, கிறிஸ்து, முஸ்லீம் என்ற மூவகையினதாகும். இவற்றுள் முதலாவதாக இந்து ஸ்திரிகளைப்பற்றிக் கவனிப்போம்.

# ஹிந்து மதம்

301.423

ஹிந்து மதம் போதிப்பதென்ன? ஹிந்து மதம் புராதின மானது. நமது தாய் தேசத்தில் முக்கியமாக கோடிக்கு மேலான ஸ்திரீகளைக்கொண்டது இந்து சமூகம். இச்சமூகம் தன் பெண் மணிகளைப்பற்றி என்ன கூறுகின்றதென்பதை முதலில் கவனிப் போம்.

ஹிந்து சட்டங்களுக்கு முக்கிய ஆதாரமாயுள்ளன:– 1. சுருதி (தேவர்களெனப்படுவோர்களின் வாக்குகள்.) 2. ஸ்மிருதி—(பண் டையரிஷி–மஹான்களின் மூலமாக வந்த பரம்பரைச் சம்பிரதாயங் கள்.) 3. பழக்க வழக்கங்கள்.

ஒரு ஹிந்து கனவான், ‘ஹிந்து மதத்தில் பெண்களின் அந்த ஸ்து’ என்ற தலையங்கத்தின்கீழ் வெளியிட்ட விஷயத்தின் சாராம் சத்தைமட்டும் இங்கு குறிப்பிட்டால், நாம் எடுத்துக்கொண்ட விஷ யத்திற்குப் போதுமானதாக இருக்கும். இவர், அறிவுள்ள இந்துக் களின் பார்வைக்கென்று இதை வெளியிட்டுள்ளார். இவர் தன் சமூக ஸ்திரீ ஜாதியின் கேவல நிலைமையைப்பற்றி ஆலோசித்து, அவர்களைப்பரிதாப நிலையிலிருந்து மீட்கவேண்டுமென வெகு விநய மாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

ஆரம்பத்தில், ஹிந்துச்சட்டம், ஹிந்துப்பண்டிதர்களின் உத வியைக்கொண்டு, வெள்ளைக்கார நீதிபதிகளால் வழங்கப்பட்டு வந் தது. இவ்வழக்கம், அதாவது—இந்துப்பண்டிதர்களின் உதவியை க்கொண்டு, இந்துச் சட்டம் வழங்கிவந்த பழக்கம், 1868ம் ஆண்டில் நீக்கப்பட்டு விட்டது. பிறகு நீதிபதிகள் தாங்களே தங்கள் ஆராய் ச்சிக்குத் தோன்றியவாறு சட்ட வியாக்கியானம் செய்து வந்தனர். அப்படியே இப்பொழுதும் நடந்து நியாயம் வழங்கப்படுகின்றது.

பிரின்சிபால் முல்லாவின் "ஹிந்துலா" விலிருந்தும், டாக்டர் கௌரின் "ஹிந்துக்கோடி" விருந்தும், "மனு" முதலிய ஹிந்து தர்ம நூல்களிலிருந்தும், சில குறிப்புகளை மட்டும் கீழே வரையப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து, ஹிந்துச் சட்ட திட்டங்கள் ஸ்திரீ ஜாதியினரை எவ்வளவு கடினமாக அடிமைத்தனத்தில் ஆழ்த்தி வைத்து வருகின்றதென்பது தெள்ளென விளங்காமற் போகாது. சொந்த வியாக்கியானம் செய்யாமல் குறிப்புகளைமட்டும் எடுத்தெழுதினால் போதும் என்று கருதுகின்றேன். இங்கே, இந்து மதத்தினரின் பழக்க வழக்கங்களை எடுத்தெழுதி அதைக் கொண்டு, இந்து மதத்தை இகழும் உத்தேசமில்லை. ஒவ்வோர் மதத்தினரும் தங்கள் தங்கள் மதக்கோட்பாடுகளை விட்டு வெகுதூரம் நீங்கி, தங்கள் அறியாமைக் கேற்ற விஷயங்களையே மதமாகக்கொண்டு நடந்து வருவதால் தங்கள் மதத்திற்கே இழிவைச் சுமத்தி விடுகின்றார்கள். ஆனால், அது போன்ற அநாச்சாரங்களை ஆதாரமாகக் கொள்ள இங்கு உத்தேசமில்லை. மத சட்ட திட்டங்களையே ஆதாரமாகக்கொண்டு ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் பெண்மணிகளுக்கு எப்படிப்பட்ட அந்தஸ்தை அளித்திருக்கின்றார்கள் என்பதை விளக்குவாம்.

Y15
N82

# ஸ்திரீகளின் அந்தஸ்து.

---

ஸ்மிருதிரிஷி நாரதர்,

> "கடன் வாங்கிய பணம் முதலியவற்றைக் கொடுக்கத்தவறியவன், தன் மறு பிறவியில் யாருக்குக் கடன் பட்டானே அவன் வீட்டில் ஓர் அடிமை, ஊழியன் ஸ்திரீ அல்லது நாற்கால் பிரயாணியாகப்பிறப்பான்"

என்று கூறிப்போயிருக்கின்றார்.

இதனுல் வெள்ளேயாக விளங்குவது என்ன? நாய்—மாடு—பன்றி ஆகியவற்றிற்குச் சமமாக ஸ்திரீ ஜாதியைக் கருதப்படுகின்றது. மேலும் சுமார் 10-கோடிக்கு மேலான இந்து ஸ்திரிகள் எல்லாம், முன் ஜன்மத்தில் வாங்கியகடன் முதலியவைகளைக் கொடுக்கத் தவறியவர்களென்று ஆகின்றது.

> "மனைவிக்கும் மகளுக்கும் அடிமைக்கும் சொத்து பாத்யதை கிடையாது. அவர்கள் பெறுவதெல்லாம், அவர்கள் யாரைச் சேர்ந்தவர்களோ அவருடையனவாகும்"

என்று, வேதங்களை அநுசரித்து சட்டங்கள் செய்தவரும், அவருடைய சட்டங்களைத் தர்மநூலாகக்கருதி ஹிந்துக்கள் தங்களுடைய பெரிய நியாயவாதியென பூஜித்து வருபவருமான மனு மஹாராஜ் (8.416) கூறியிருக்கின்றார்.

சுந்தரகாண்டம்—5. இராமாயணம் என்ற கிரந்தத்தில்,

> "பேரிகைகள், குடியானவர்கள், தாழ்ந்தவர்கள், மிருகங்கள், ஸ்திரீகள் முதலானவர்களை ஆயுதபலத்தால் அடக்கி வைத்திருக்க வேண்டும்"

என்று கூறப்பட்டிருக்கின்றது. இங்கே உயிரற்ற பொருளுடன் ஸ்திரீகளைப் பாவித்து, காலின் அடியில் வைத்து நசுக்கிக் கொண்டிருக்கும்படி ஆண்களுக்குப் போதிக்கப் படுகின்றது. மேலும், மனு 11-2-3 ல்,

"ஸ்திரீகளை இரவும் பகலும் தங்கள் சுற்றத்தார்களின் உதவியை நாடி நிற்கவேண்டிய ஸ்திதியில் வைத்திருக்கவேண்டும்.........ஸ்திரீ சுயேச்சையுள்ளவளாயிருப்பதற்கு அருகதையுள்ளவள் அல்லள்"

என்றும் கூறுகின்றார். இதற்குமேல் வேறு ஆதாரங்கள் குறிக்க வேண்டிய அவசியமே இராதென்று கருதுகின்றேன். ஆனால் நம் சகோதரிகள், தங்களுடைய அந்தஸ்தைப்பற்றித் தெரிந்துகொண்டு என்னென்ன விதமாய் சட்ட திட்டங்கள் மூலம் நடந்து கொள்ள வேண்டுமென்று, பெரியோர்களும் சட்ட நிபுணர்களும் நிபந்தனைகள் ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்கள் என்பதை விளக்க இன்னும் சிலகுறிப்புகளை எடுத்துக்காட்டுவோம். மேலும் மனுகூறுகிறார் :—

"எவனிடம் தன் மகளை அவளுடைய தந்தை ஒப்படைத்து விட்டானோ, அவனையே அவள் கௌரவிக்கட்டும். அவன் அந்நிய ஸ்திரீயைக் காதலித்து வந்தாலும், மூர்க்கமாக நடந்து கொண்டாலும் கெட்ட குணங்கள் உடையவனேனும், கணவனை நற்குண முடைய மனைவி கடவுளாக வணங்கி வர வேண்டும்."

என்று 5-154 ல் கூறப்பட்டிருக்கின்றது. இதனால் விளங்குவதென்ன? தன் தகப்பன் கண்மூடித் தனமாகவோ, சுயநலங் கருதியோ, தன் குமாரியை ஒரு அருகதையற்ற, துர்க்குணம் நிறைந்த விபசார புருஷனுக்குக் கொடுத்து விட்டால், அவள் சகல கஷ்ட நஷ்ட துன்பங்களுக்கும் அவமானங்களுக்கும் அடங்கியிருக்க வேண்டியிருக்கின்றது. மேலும், அக்கொடும்பாவியாகிய மனுஷனைக் கடவுளாகக் கருதி வணங்கிவர வேண்டும். மனித இயற்கை, சுயேச்சையை விரும்புவது! மனு விவரித்த அவலட்சண புருஷனைக் கௌரவம் செய்

யும் பொருட்டு, மனைவி புருஷனுடைய துர்ச்செயல்களுக்கு இணங்காவிடிலோ அல்லது மாறுபட்டாலோ, அவள் தன் பதிவிரதா தர்மத்திலிருந்து நீங்கியவளாகின்றாள். என்னே, நீதி இது! தற்காலத்திய நம் சகோதரிகள் இதை ஒரு விநாடியேனும் ஏற்றுக்கொள்வார்களா? ஏற்றுக்கொள்ளும்படி எந்த அறிவுள்ள ஆண்மகனும் கூறத் தைரியங் கொள்வானா? அப்படி வற்புறுத்துவதும் நியாயமாகுமா? பகுத்தறிவுக்கு ஏற்குமா?

மேலும் மனு கூறுகின்றார்:— மனைவி எவ்வளவு பதிவிரதா தர்மமும், நற்குண நற்செய்கைகளும் உடையவளாயிருப்பினும்,

"மணம் செய்து கொள்ளும் ஒரு ஸ்திரீ என்ன குணங்கள் அமையப் பெற்றவளாய் இருந்த போதிலும், சமுத்திரத்தில் கலக்கும் நதியைப் போலவே தன்னுடைய கணவனின் குணாதிசயங்களையே பெறுகிறாள்"

என்று 9–20 ல் கூறிப்போயிருக்கின்றார். இதை விளக்கவேண்டிய அவசியமில்லை.

இப்பொழுது, பௌதாயனர் என்னும் சட்ட நிபுண ரிஷி கூறியவைகளில் இரண்டொன்றைக் குறிப்பிடுவோம்:—

"யாதொரு மனிதனும் ஸ்திரீகளுக்காவது, அடிமைகளுக்காவது, குழந்தைகளுக்காவது கடன் கொடுக்காதிருக்கட்டும்"

என்றும்,

"ஸ்திரீகளுக்கு அறிவென்பதில்லை. அவர்கள் சொத்துக்களுக்குப் பாத்தியதை யுள்ளவர்களாவதற்கு லாயக்கில்லை"

என்றும் கூறியிருக்கின்றார்.

மேலே குறிப்பிட்டவைகளில் இருந்து, இந்து சகோதரிகள் தங்கள் அந்தஸ்து என்ன வென்பதையும், தாங்கள் ஏதாவது ஓர்வித

சுயேச்சையை அநுபவிப்பதாகக் கருதினல், அது தங்கள் மதச் சட்டதிட்டங்களுக்கு முரண்பட்ட சுயேச்சை யென்று தெரிந்து கொள்வார்களாக.

மத சுயேச்சை விஷத்தில் ஸ்திரீகளுக்கு எவ்வித அந்தஸ்துமில்லே. அவர்கள் யாதொரு யாகம், விரதம், வேண்டுதல் முதலியன செய்ய சுயேச்சை இல்லே. அவர்கள் மோட்சமடைய வேண்டுமாளுல், புருஷன் எவனுயினும் அயோக்கியனுயினும், அவனுக்கு அடிமையாக நடந்து கொள்ள வேண்டுமாம். அதனுலேயே அவர்கள் மோட்சமடையலாமாம். மனு தன் 5—155ல் அடியிற் காணுமாறு கூறிவிட்டார்.

> "புருஷர்கள் செய்து வருபவைகளைத் தவிர, ஸ்திரீயாக யாதோரு யாகம், வேண்டுதல், விரதம் செய்வது கூடாது. மனைவி புருஷனுக்குப் படிந்து நடந்தால் அதனுலேயே மோட்சலோகம் அடைவாள்."

---


# பள்ளூ பறையர்.

ஓர் சீர்திருத்த நூல்.

(2-ம் பதிப்பு)

ஒன்றரை அணு தபால் தலை அனுப்பினல் ஒரு புத்தகம் உங்களிடம் ஓடிவரும்.

விலாசம்:—

ராஜரசம் கம்பெனி,

பொன்மலை,

(மதராஸ்—தேன் இந்தியா.)

# விவாக விஷயங்கள்.

ஒரு ஹிந்து எத்தனை மனைவியர்களையும் மணந்து கொள்ளக்கூடும். கட்டுப்பாடு ஒன்றும் கிடையாது (செக்ஷன் 348). ஆனால் ஒரு ஸ்திரீ தன் புருடனைத்தவிர வேறெவனையும் மணக்கமுடியாது (செ—349). புருஷன் இறந்த பிறகும் விதவா விவாகம் என்பது தடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அச்சட்டம் 1856—ஆம் வருஷ 15—ஆவது ஆக்கிடின் படி விதவா விவாகம் அநுமதிக்கப்பட்டது. இந்த ஆங்கிலேய சட்டப்படியே இப்பொழுது நம் தேசத்தில் இந்துக்களில் தைரியமுடையவர்கள் தங்கள் விதவைகளை மறு விவாகம் செய்து கொடுத்து வருகின்றனர். ஆனால் இவர்கள் ஜாதிக்கட்டுப்பாட்டின் கொரோத்திற்கு ஆளாகாமல் இல்லை. தெய்வீக சட்டத்திற்கு முன் ராஜீய சட்டம் தலையெடுக்க முடியவில்லை.

ஹிந்துவிவாகம், ஒரு தெய்வீகமான விஷயமாகக்கருதப்படுகின்றது. ஆனால் ஆண்களைப் பொருத்தமட்டிலும் அது உண்மையல்ல. ஆண்கள், தம் மனைவியை எக்காரணமுமின்றி எப்பொழுதும் நீக்கிவிடவோ, விவாக ரத்து செய்யவோ சட்டமிருக்கின்றது. ஆனால் மனைவி ஒருக்காலும் அப்படிச் செய்ய முடியாது.

அடியிற் கண்ட காரணங்களுக்கென்றும் புருஷன் தன் மனைவியை நீக்கி விடலாம் என்று சட்ட நிபுணராகிய ரிஷி பௌதாயனர், சட்டம் இயற்றி யிருக்கின்றார் :—

> “ பத்தாவது வருஷத்திலும் மக்களைப் பெறாதவளைக் கணவன் விலக்கி விடட்டும்.”

என்றும்,

> “ பெண்குழந்தைகளாகப் பெறுபவளைப் பன்னிரண்டாம் வருஷத்திலும், எவளுடைய குழந்தைகளெல்லாம் மரித்து வருகின்றனவோ அவளைப் பதினைந்தாம் வருஷத்திலும் நிராகரிக்கட்டும் ”

என்றும் கட்டளை இட்டிருக்கின்றார். இங்கே, மனைவியை என் நீக்கிவிடச்சொல்லுகின்றார், என்பதுதான் விளங்கவில்லை. நீக்கிவிட்டால் மனைவியின் கதி என்ன ஆவது? "அவளையும் வைத்துக்கொண்டு, மற்றொருவளை மணந்துக்கொள் என்றிருந்தால் அறிவுடைய போதனையாக இருந்திருக்கும்.

ஆனால், "சண்டையிடுபவளை உடனே தள்ளி விடவேண்டும்" என்று கடினமான கட்டளை இடுகின்றார் பௌதாயன ரிஷி. அடிக்கடி சண்டையிடும் மனைவியால் குடும்பத்தில் சந்துஷ்டியிராதென்றல்லவோ அவளை உடனே நீக்கி விடு என்கிறார். அதே விதமாக, அடிக்கடி சண்டையிடும்—அயோக்கியமும் கொடூரமும் உள்ள புருஷனை மனைவியானவள் நீக்க சட்டம் இயற்றியிருந்தால், அழகாக இருந்திருக்கும். ஆனால், புருஷன் எப்படிப்பட்ட பாதகனாயினும், படுபாவியாயினும் அவனைத் தெய்வமாகக் கொள்ளவேண்டுமென்று மனைவிக்குக்கட்டளையிட்டிருப்பது தான், சர்வசாதாரண அறிவாளிக்கும் விளங்காத ஒரு விந்தையாக இருக்கின்றது. அறிவு பெற்ற நம் சகோதரிகள் இதைக் கண்டு நடுங்காமல் என் செய்வார்கள்.

ஹிந்துவாகிய ஒரு தாயாருக்கு தன் மகளைத் தன் பிரியத்திற்கேற்ற ஒருவனுக்கு மணம் முடித்து வைக்க பாத்தியதையே இல்லையெனலாம். முதலாவதாக தகப்பன்; தகப்பனில்லாவிட்டால் தாய்க்கு உரிமையில்லை; ஆனால், தகப்பனுக்குத் தகப்பன் உரிமை பெற்றவனவன்; மூன்றாவதாகச் சகோதரன்; நான்காவதாகத் தகப்பன் வழியைச் சேர்ந்த இதர பந்துக்கள். இவர்கள் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் தாய்க்குப் பாத்தியதை—கடைசியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்திரீதன சம்பந்தமாகத் திட்டமாக இந்து சட்டங்களில் ஒன்றும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் வக்கீல்கள், ஸ்திரீதன சம்பந்தமான வழக்குகளில் அடிக்கடி அடிதடிகள் செய்து கொள்ளுகின்றனர் என்று டாக்டர் கௌர் சொல்லி வருகின்றார்.

ஜீவனாம்சம் சம்பந்தமாகப் பார்த்தாலும், பெண்ணின் நிலை கேவலமானதாக இருக்கின்றது. செக்—475 ல்,

"ஒரு கைம்பெண்ணின் ஜீவனும்சம் உடன் படிக்கையினுலாவது அல்லது கோர்ட்டின் டிக்ரியினுலாவது நிர்ணயிக்கப்பட்டால் அன்றி, இறந்த புருஷனின் சொத்துக்களைப் பாதிக்காது. எனவே, ஒரு விதவை ஜீவனும் சத்தை அடைவ தேன்பது திட்டமாக நிர்ணயிக்கப்படாததாகும்."

செ–424 ன் படி,

"கைம்பெண்ணின் பாத்தியதை என்ற பாத்தியதைதான், கைம்பெண்ணுக்கு அவளுடைய புருஷனின் சொத்துக்களின் மீது உண்டு. அவளுக்குக் கிடைத்துள்ள சொத்துக்களின் வரும்படியைத்தான் அவள் அநுபவிக்கலாம். ஆனுல் அச்சொத்தை விற்பனை செய்துவிட அவளுக்கு அதிகாரமில்லை."

செக்ஷன் 142–144 களின் படி,

"அவள் (அக்"கைம்பெண்") இறந்த பிறகு அவளுடைய வாரிஸ்களுக்கு அச்சொத்து சேர்வதில்லை. ஆனுல், அவளுடைய புருஷனின் வாரிஸ்களையே (பின்பாத்யதை உள்ளவர்களுக்கு) சேரும்"

ஆனுல், "முகம்மதியலா" வின்படி, எல்லா ஆண்பெண் வாரிஸ்களுக்கும் முழுச்சொத்துப்பாத்தியதையும் உண்டு. (பி. ஆர். ஐயர்.)

ஒரு ஹிந்து, செக்ஷன் 457-என்படி, தன்னுடைய சோர (வைப்பாட்டி முதலிய அநாமதேயப் பெண்களுக்குப் பிறந்த) புத்திரர்களையும் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கையில், அவ்வித சோர புத்திரிகளைக் காப்பற்ற இந்து சட்டத்தில் யாதொரு ஏற்பாடுங் கிடையாது. ஆனுல், கி. பி. கோ. 488-வது செக்ஷன்படி, தகப்பனிடமிருந்து ஜீவனும்சம்பெற அவர்களுக்குப் பாத்தியதையுண்டு. (செ-458).

ஓர் ஆண் வாரிஸ், அவனுக்குக் கிடைத்த சொத்துக்களுக்குச் சர்வ பாத்தியதைகளும் உள்ளவனுய் ஆகிவிடுவது போல் (செ-141) பொதுவாக எந்த சந்தர்ப்பத்திலும் ஸ்திரீகள், தாம் பாரதீனப்படுத்த

பாத்தியதையுள்ள எந்த சொத்துகளையும் காணியாட்சியாகப் பெறுவதற்கில்லை (செ—323-ஏ.)

மேலும், மரண சாசனத்தில் பிரத்தியேகமாகக் குறிக்கப்பட்டிருந்தால் அன்றி, ஒரு ஸ்திரீ வாரிஸாக மாட்டாள் (செ-50.)

மேலும், ஒரு இந்து தன்னுடைய சொத்தைத் தன் மனைவி மக்களுக்குக் கிடைக்காத படி செய்வதையோ, தன் சொத்தை வேறு யாருக்கோ கொடுத்து விடுவதையோ தடுக்க இந்து சட்டம் இல்லை. (செ-306-2 வி.)

> "ஸ்திரீகள் சுயமாக எந்தவித சொத்துக்களையும் வைத்துக்கொண்டிருப்பது முடியாது ஆதலின், அவர்கள் மைனர்களைப் போலவேனும், சித்த சுவாதீனமில்லாத பித்தர்களைப் போலவேனுமே கருதப்படுவார்கள்"

என்று 333 ஏ "ஹிந்துலா" கூறுகின்றது.

விவாக வயது சம்பந்தமாக மனு மஹாராஜ் 9—94 ல்,

> "30-வயதுள்ள புருஷன் தனக்குப் பிரியமுள்ள அழகிய 12-வயதுள்ள பெண்ணையும், 24-வயதுள்ள புருஷன் 8-வயதுள்ள பெண்ணையும் விவாகம் செய்துகொள்ளக் கடவர்........."

என்று கூறியதின் பயனாக, இளம் விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. சாரதா சட்டமும் மனு மஹாராஜாவின் சட்டத்திற்குமுன் தலையெடுக்க முடியவில்லை.

மேலும், ஸ்திரீகளின் தன்மைகளை விவரிக்குங்கால்,

> "...........மாதர்களுக்கு மனசுத்தி கிடையாது. ஆதலின், பொய்யைப் போல் அபரிசுத்த முள்ளவர்களாயிருக்கிறார்கள். மாதர்கள் பெரும்பாலும் விபசார முள்ளவர்கள் என்றே அநேக சுருதிகளும் சாஸ்திரங்களும் சொல்லிக்கொண்டு வருகின்றன"

என்று மனு நூல் 9 :– 17, 118, 19-களில் கூறப்பட்டிருக்கின்றது.

ஸ்வீகாரம் :—

"புருஷன் பிரத்தியேகமாக அதிகாரங் கொடுத்தா லன்றி, ஒரு ஹிந்து மனைவியோ விதவையோ ஸ்வீ காரம் செய்துகொள்ளல் இயலாது"

செ–367

"ஹிந்து சட்டப்பிரகாரம் தாய் ஆட்சேபித்த போதி லும், தன் மகனை ஸ்வீகாரத்தில் கொடுத்து விடத் தகப்பனுக்கு உரிமையுண்டு"

டாக்டர் கௌர் செ–571

தற்கால நீதி ஸ்தலங்களுக்கு, குழந்தையின் நன் மையை உத்தேசித்து அது பால் மறக்கும் வரையும் அதனைத் தாயிடம் ஒப்புவிக்க அதிகார முண்டானு லும், இந்துச் சட்டப்படி குழந்தை பால் குடிச் சிசு வானலும், தகப்பனே கார்டியன் ஸ்தானத்திற்கு முதலான பாத்தியதை உள்ளவன்.

(செ–430).

இதனல், கொடூரகுணமுள்ள தகப்பன் குழந்தையின் க்ஷேமத் தைக் கருதாது, மனைவியின் பேரிலுள்ள க்ஷாத்திரத்தால், தாயின் மார்பிலிருந்து, இளஞ்சிசுவைப் பிடுங்கிக்கொள்ள இடமுண்டு. (கண வனல் விவாக விலக்கு கொடுபட்டிருப்பினும் இஸ்லாம் சட்டம் குழ ந்தைக்குக் கார்டியன் தாயையே ஏற்படுத்தி இருக்கின்றது. மேலும், ஆண்குழந்தை ஏழுவயதடையும் வரைக்கும், பெண் குழந்தைகள் புஷ்பவதி அடையும் வரைக்கோ அல்லது 15-வயதை அடையும் வரைக்கோ தாய்க்கே கார்டியனுக இருக்கும் பாத்தியதை இஸ்லாம் மதத்தில் உண்டு. எது சிறந்தது?

மேலும், அடியிற் கண்ட கட்டளைகளை மனு மஹாராஜர் ஸ்திரீ கள் சம்பந்தமாக எழுதிவைத்துள்ளார் :—

"மாதர்களின் சுபாவமே, மனிதர்களுக்குச் சிருங்கார சேஷ்டைகளினால் தோஷத்தை உண்டுபண்ணும். ஆதலால் தெரிந்தவர்கள் அவர்களிடத்தில் அஜாக்கிரதையாய் இரார்கள்." (மனு 1–215.)

"வீட்டுக்கு வேண்டிய பாத்திர முதலியவற்றைக் கொள்ளுதற்காகக் கொடுத்த பொருளைக் காப்பாற்றுவது, செல விடுவது, பாத்திர முதலிய பொருளைச்சுத்தி செய்வது, வீடு விளக்குவது, தேவ பூஜை முதலியவற்றிற்கு உதவியான காரியஞ் செய்வது, அடுப்பங்கரைக் காரியம், வீட்டுப்பாத்திரம், படுக்கை முதலானவைகளைப் பார்ப்பது இவை முதலிய அவசியமான காரியங்களை மனைவிக்குக் கற்பித்து அவளுடையமனம் வேறிடத்திற் செல்லாதபடி செய்க."

(மனு. 9–11.)

இந்த போதனையால் ஸ்திரீகள் விபசாரத்தில் இயற்கையாக நோக்க முள்ளவர்களென்றும், அதற்கு இடங்கொடாதிருக்க மேற்கூறிய பல இழிந்த காரியங்களால் அவர்களுக்கு, "அவர்களுடைய மனம் வேறிடத்தில் செல்லாதபடி செய்க" என்று ஏற்படுகின்றது. இக்கருத்து, மேலே காட்டிய சூத்திரத்திற்கு (நிபந்தனைகளுக்கு) உண்டென்பதை,

"மாதர்கள் பெரும்பாலும் விபசார தோஷ முள்ளவர்களென்று அநேகசுருதிகளிலும் சாத்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதற்குத் திருஷ்டாந்தமாக, அந்த விபசாரத்துக்குச் சுருதியில் சொல்லிய பிராயச்சித்தத்தைக் கேளுங்கள்"

என்றும், மனு அத்–9. சு—19 ல் சொல்லியிருப்பதிலிருந்து தெளிவாக விளங்கும்.

இக்கருத்து உண்டென்பதை,

"ஒருவன் தன்னுடைய தாய்க்கு மானச விபசாரம் நேரிட்டதாக அறிந்து அதற்குப் பிராயச்சித்தம் செய்கின்றான். என் தாயானவள் கற்பின்றி அயலான் வீட்டுக்குப் போய் அங்கு பர புருஷனைப் பார்த்து யாதாவது மனதினால் ஆசைப்பட்டிருந்தால், அந்த ஆசையினால் உண்டான ரேதஸை (விந்துவை), என் பிதா தனது ரேதசினால் பரிசுத்தம் செய்யக் கடவன். இதுவே மாதர்கள் நிலையில்லா மனமுடையார் என்கிறதற்குத் திருஷ்டாந்தம்"

என்றும் 9-அத் 20-ம் சு. வலியுறுத்திக் கொண்டு நிற்கின்றது. ஸ்திரீ ஜாதியினர் இயற்கையாக பரபுருஷ இச்சை கொள்ளும் வேசிகள் என்ற நம்பிக்கையை அடியிற் குறிப்பிட்டுள்ள மனுவின் தர்ம நீதிகள்? உறுதிப்படுத்திக்கொண்டே போகின்றன. அவையாவன :—

"மாதர்கள் கற்பு நிலையின்மையும், நிலையாமனமும், நம்பிக்கை யின்மையும் இயற்கையாக உடையர் ஆதலால், கணவனால் காக்கப்பட்டிருப்பினும் அவர்களை விரோதிக்கிறார்கள்" (மனு. 9–15).

"மாதர்களுக்கு இந்தச் சுபாவம் பிரமன் சிருஷ்டித்த போதே உண்டான தென்றறிந்து, ஆடவர்கள் அவர்கள் கெடாமல் நடப்பதற்காக மேலான முயற்சி செய்ய வேண்டும்." (சு—16.)

"படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், கோபம், பொய், துரோக சிந்தை இவைகளை மாதர் பொருட்டே மனுவானவர் கற்பித்தார்" (சு—17.)

"மாதர்களுக்கு ஜாதகர்மம் முதலியவை மந்திரத்தோடு கிடையா. இவர்களுக்கு மனச்சுத்தியும் கிடையாது. பாவத்தைப் போக்குகிற மந்திரோபதேசமும்

இல்லை. ஆகையால் பொய்யைப்போல் அபரிசுத்தர் களா யிருக்கிறார்கள்." (௬—18.)

இதுவரை எடுத்துக்காட்டிய ஆதாரங்கள் வெகு சிலவே. எண்ணத்தொலையாத ஆதாரங்கள் இன்னும் உண்டு. ஹிந்து மதம் ஸ்திரீகளை, பொய்யைப் போன்ற அசுத்தப் பிராணிகளாகவும், இயற்கையிலேயே—சுபாவமாக விபசார தோஷமுள்ளவர்களென்றும் கருதுகின்றது. ஆதலால், அவர்களை அடிமையினும் கீழாக, தட்டு முட்டு சாமான்களைப்போல் பாவிக்கும்படி கற்பிக்கின்றது.

இவை தான் நம் ஹிந்து சகோதரர்களின் அந்தஸ்து. இங்கு, தம் சமூக சகோதரிகளின் அந்தஸ்தைப்பற்றி ஒரு இந்துப்பெரியார் கூறுவதை அப்படியே எடுத்துச் சொல்லிவிட்டால் போதுமானதும் பொருத்தமானதுமாக இருக்கும்.

> "பழத்தைப் பார்த்து மரத்தைத் தெரிந்து கொள்வது போல, ஒரு ஜாதியாரின் நாகரீகத்தை அவர்களின் பழக்க வழக்கங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஹிந்துச்சட்டங்களில் எல்லா அம்சங்களிலும் ஆண்களின் உரிமை நன்றாகப் பாதுகாக்கப் பட்டிருக்கின்றது. ஆனால், ஸ்திரீகளின் உரிமைகளையும் பாதுகாக்க யாதொரு விதமான சட்டமும் இல்லாதது மிகவருந்தத்தக்க விஷயமேயாம்."

நம் இந்திய சகோதரிகள் பல நூற்றாண்டுகளாக மகா கொடுமையான சமூக அநீதிகளைப் பொறுத்து வந்திருக்கின்றனர். ஒரு தேசத்தையும் அதன் ஜனங்களையும் சிருஷ்டித்துள்ள நமது தாய்மார்கள், சகோதரிகள், புத்திரிகள் முதலியோர்களிடம் நாம் நடந்து கொள்ளும் முறை எவ்வளவு ஒவ்வாததாய் இருக்கிறதென்பதை யார் உணர்கின்றனர்? பண்டைய இந்து மதத்தின் பிரகாரம் ஸ்திரிகள் தட்டு முட்டுச் சாமான்கள் போலவோ அல்லது மனிதனை விட யுக்தியிலும் புத்தியிலும் மிகத் தாழ்ந்தவர்களாகவோ கருதப்படுகின்றனர். எனவே, ஹிந்து சாஸ்திரங்கள் அனைத்தும், ஸ்திரீகளின் கடமைகளைப் பற்றி வற்புறுத்திக் கூறுகின்றனவே அன்றி, அவர்களு

டைய உரிமைகளைப்பற்றி ஒரு சிறிதும் கூறவில்லை. இதனால் இந்து சமூக வாழ்க்கையில் ஸ்திரீகள் ஓர் முக்கிய நபர்களாக இல்லையென்று நாம் நினைக்க ஏதுவுண்டாகின்றது.

பண்டையரிஷிகள், இவ்வித விஷயங்களை எவ்வாறு எழுதியிருக்க முடியும் என்பது எமக்கு விளங்கவில்லை. ஹிந்து புத்தகங்களைப் பார்வையிடும் எவரும், அவைகளில் ஆண்களுக்கொரு சட்டமும் பெண்களுக்கொரு சட்டமும் இருப்பதைக் கண்டு ஆச்சயரிம் அடைவர்.

> "மனித ஜாதியின் பாதிக்கு மேற்பட்ட ஒரு பகுதிக்கே சாந்தி இல்லாத போது, உலகத்திலுள்ள ஜீவப் பிராணிகளெல்லாம் சாந்தியடைய வேண்டு மென்று அவர்கள் கூறுகிறார்கள்"

தொட்டிலிலே கிடந்தது முதல் கட்டையிலே கிடத்துமட்டும், பெண் ஜன்மத்துக்குத் தொடர்ந்தாற் போல் கஷ்டங்களே தான் காணப்படுகின்றன. உண்ணுதல், அருந்துதல், நடத்தல், துயிலல், குளித்தல், பூஜை செய்தல், வெளியில் விளையாடுதல் முதலியன போன்ற தினசரி வாழ்க்கையின் அற்பவிஷயங்களும், பெண்கள் எப்பொழுதும் ஆண்களின் அதிகாரத்துக்கு உட்பட்டு நடக்கும் வண்ணமாகவே நிர்ணயிக்கப்பட்டிருக்க, ஆடவர்கள் மட்டும் தெய்வ அம்சங்களைப் பெற்று, தெய்வங்களைப் போன்று பூஜிக்கப்படவேண்டியவாகிறார்கள்.

ஆனல், இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் என்ன வென்றால், நமக்குள் இவ்வளவு ஊழல்கள் நிலைபெற்றிருந்தும், நம்முடைய பிரசங்கத் தலைவர்களும், பத்திரிகாசிரியர்களும், அன்னிய நாட்டினர் நமது சமூகக் கேடுதல்களை அறிந்து கொள்ளா வண்ணம், இத்தேசத்தின் போது ஜனங்களின் நிலைமையையும், ஏழை ஸ்திரீகளின் நிலைமையையும் மறைத்துவிட முயற்சித்து வருவதேயாகும். எல்லா இந்திய விஷயங்களையும் அபாரமாகப் புகழ்வதும், மேல் நாட்டு விஷயங்கள் எல்லா வற்றையும் (உள் நாட்டு இதர சமூகத்தினர்களின் பழக்க வழக்கங்களையும்—எழுதுவோர்) அடியோடு இழித்துக் கூறுவதுமே இந்தியர்களின் (இந்துக்களின்) வழக்கமாகிவிட்டன என்பதே யாகும்.

ஸ்திரீகள் சம்பந்தமான இவ்வித அநியாயங்கள், சாதாரண மனிதனும் வெறுக்கத்தக்கனவாக இருக்க, பண்டைய மகரிஷிகள் மட்டும் ஏன் இவைகளை சகித்து வந்தனரென்று அறிய நியாயத்தை விரும்பும் எவரும் ஆவல் கொள்வர்.

ஆரிய சமூகத்தின் எந்தச் சாதுவோ அல்லது சந்நியாசியோ மேலே கூறப்பட்டுள்ள விஷயங்களைப்பற்றி தகுந்த சமாதானம் கூறவோ அல்லது அவைகளில் பிழையிருப்பின் அவற்றை எடுத்துக்காட்டவோ முன் வருவாரா? ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்கும் பாதுகாப்புக்கும் நமது முன்னோர்களே யாதொரு வழியும் செய்யாதிருக்க, தற்கால அல்லது வருங்கால ஹிந்துக்கள் மட்டும் ஸ்திரீகளை நன்ருக நடத்திவருவார்கள் என்று எப்படி நம்ப முடியும்? ஒரு ஸ்திரீயின் அதிர்ஷ்டத்தால் அவளுக்கு வாய்க்கும் கணவன் நற்குணமுடையவன் ஆனுல், மேற்கூறப்பட்ட தீமைகளால் அதிகம் பாதிக்கப்படமாட்டாள் ஆனுல், புருஷன் நல்லவனுக அமையாவிடின் அவள் கதி அதோகதியேயாகும். அவள் தன் தற்காப்புக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடவேண்டிய ஆயுதங்களெல்லாம் ஆண்கள் வசமே சிக்கி யிருக்கின்றன. அவளுடைய கைகள் கூட ஆண்களால் செய்யப்பட்ட விலங்குகளால் பிணிக்கப்பட்டிருக்கின்றன. டக்டர் கௌர் தமது "ஹிந்து கோட்" டில் கூறுவது போல்,

> "ஹிந்துக்களின் மதக்கோள்கைகளை எளியனவாக்கி, இச்சட்டங்களை ஒழுங்குபடுத்த ஒரு புதிய அவதாரம் தோன்றினுல் அன்றி, இவர்களுக்குக் கதி மோட்சம் இல்லை"

இந்த விஷயத்தைப் படிக்கும் இரக்க குணமுள்ள அறிஞர்கள், ஹிந்து ஸ்திரீகளின் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்துக்குமான சீர்திருத்தங்களைச் செய்யும் முயற்சியில் உதவி செய்ய முன் வருவார்களென்றே நம்புகின்ருேம்.

# 2. கிறிஸ்து மதம்.

உலத்தின்கண் எம்மூலேயிலும் பரவியது கிறிஸ்துவ மதம். கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையே மற்ற சமூகத்தினரை விட அதிகமானது. இந்து மதம் எப்படிப் புராதீனமானதோ அப்படியே கிறிஸ்துவ மதமும் புராதீனமும் உலகமக்களிடை அதிகமாகப் பரப்பப்படுவது மாகும். இம்மதத்தில் ஸ்திரீகள் அந்தஸ்து என்னவென்பதைக்கட்டாயம் கவனிக்கவேண்டியதே. இந்து மதம் பெண்களின் அந்தஸ்தைப்பற்றி எப்படி சாஸ்திரோக்தமாக ஆராயப்பட்டதோ அப்படியே, கிறிஸ்து மதப்பெண்களின் அந்தஸ்தையும், அவர்களின் வேத புத்தகங்களைக் கொண்டும், கிறிஸ்துமத ஸ்தாபகர்களின் கட்டளைகளைக் கொண்டும் ஆராய்வோம்.

கிறிஸ்துநாதரே கிறிஸ்து மதத்தை ஸ்தாபித்தவர். இவருடைய தாயாரின் பெயர் மரியம்மாள் ஆகும். இவருக்குப் பரிசுத்த ஆவியின் மூலமாகக் கர்ப்பம் தரித்ததாகவும், இவரை இயேசு கிறிஸ்துவின் தகப்பனர் தொடாமலே கர்ப்பவதியானதாகவும், இவர்களின் வேத புத்தகங்கள் கூறுகின்றன. இப்படியே முஸ்லீம்கள் உள்பட நம்புகின்றனர். புருஷச் சேர்க்கையின்றி, பிள்ளை யுண்டாவதென்பது, சயன்ஸ் சாஸ்திரப்படி முடியாதென்பது சயன்டிஸ்ட்டுகளின் வாதம். ஆனல், தெய்வ சக்தியில் நம்பிக்கை உள்ளவர்கள், இயற்கைக்கு விரோதமாகப் போகும் ஒவ்வொன்றையும் மறுக்க மாட்டார்கள்.

புருஷ சம்பந்தமின்றி, பரிசுத்த ஆவியின் மூலமாக, மேரியம்மாள் இயேசுவைப் பெற்ற தெய்வீகத்தைக் கொண்டு, மரித்தாயை கிறிஸ்தவர்கள் தெய்வம் போல் கொண்டாடுகின்றனர்.

ஆனல், கிறிஸ்து மதமானது பெண் இனத்தை எப்படி மதிக்கின்றது? ஸ்திரீ ஜாதிக்கு எவ்வித அந்தஸ்தை ஏற்படுத்தி யிருக்கின்றது? என்பதை ஆராய்ந்தால் விந்தையாக இருக்கின்றது. வாசகர்கள், பொதுவாகத்தப்பபிப்பிராயத்துடன் இருக்கின்றார்கள்

என்பதே எம் துணிபு. ஏனென்றால், நவீன காலத்தில் வெள்ளையர்களின்—அதிலும், பெண்களின் நடை உடை பாவனைகளைக் கண்டு, கிறிஸ்து மதம் ஸ்திரீஜாதிக்கு சகல உரிமைகளையும் கொடுத்திருப்பதாகத் தப்பாகக் கொள்ளுகின்றனர். வெள்ளையர்களை ஒட்டி, நம்தேய கிறிஸ்துவ சகோதரிகளும் நடந்து கொள்வதைக் கண்டு, கிறிஸ்து மதத்தில் தாராளக் கொள்கைகள் அதிகம் என்றும், ஸ்திரீ ஜாதியினருக்கு மனிதர்களுக் குண்டான சகல சமத்துவமும் அந்தஸ்தும் உள்ளதென்றும் நினைக்கின்றோம். இது எவ்வளவு தூரம் உண்மை யென்பதை ஆராய்வோம்.

•

கிறிஸ்து நாதர் பிரமச்சாரியாக இருந்தவர். பைபிள் பிரகாரம் இயேசுகிறிஸ்துவின் பிரசாரமெல்லாம் சில வருஷங்களில் முடிந்து விட்டது. அவர் தன் 30-ம் வயதில் கொல்லப்பட்டார். பிரமச்சாரியாகவே இருந்து, இளம் வயதிலேயே உலகை விட்டு விட்ட இம் மகானுக்கு, ஸ்திரீ ஜாதிக்கு வேண்டிய சட்ட திட்டங்களைப் பூர்த்தியாகச் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை, மேலும், சம்பூரண சட்ட திட்டங்கள் செய்ய இவர், உலக விவகாரங்களிலாவது இல்லறத்திலாவது ஈடுபடாததினால், இவருக்குச் சந்தர்ப்பமும் அநுபவமும் இல்லாமற் போயிற்று. இவருடைய சொற்ப ஆட்சியில், இவர் ஸ்திரீரத்தினங்களுக்கென்று செய்து காட்டியது, அச்சாதியினரின் அந்தஸ்தை அப்பொழுது இருந்ததை விட உயர்த்தும் முறையில் இல்லாமல், தாழ்த்தும் முறையில் செய்து காட்டியதே விசனிக்கத் தக்கது. குருநாதரின் நோக்கத்தை உணர்ந்த இவருடைய சிஷ்யர்களும், இவருக்குப் பின் வந்த மதத்தலைவர்களும், போப்புமார்களும், ஸ்திரீ ஜாதியினரை, ஹிந்துமத சட்ட நிபுணர்களும், ரிஷிகளும் மதித்ததற்குப் பதின் மடங்கு கேவலமாகவே மதித்திருக்கின்றனர். கிறிஸ்துமத ஆராய்ச்சியில் தேர்ந்தவரும், வெள்ளைக் கிறிஸ்துவ நாட்டுப் பழக்க வழக்கங்களில் நேரில் கண்டு அநுபவம் பெற்றவரும், ஆங்கில கிறிஸ்துவநாட்டையே தன் தாய் நாடாகக் கொண்டவருமாகிய ஒரு சட்ட நிபுணர், "ஸ்திரீகளின் அந்தஸ்தைப்பற்றி" எழுதும் பொழுது,

"ஸ்திரீ இனங்களைப் பெருமைப் படுத்துவதென்பது எல்லா உயர்தரப் பிராணிகளிடத்துமே காணப்படக்கூடிய ஒரு நேர்த்தியான அனுபவமாய் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், கிறிஸ்துவ நாடுகளில் பெண்பாலார் நடத்திவைக்கப்படும் கேவல நிலைமையைப்பற்றி எத்துணைக் கெத்துணை குறைவாய்க் கூறுகிறேனோ, அத்துணைக் கத்துணை நல்லதென்றே நினைக்கிறேன்."

என்று கூறுகின்றார். அடியிற் குறிப்பிட்டுள்ளவைகளைத் தன் கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டி விளக்கி யிருக்கின்றார்.

பண்டைக் காலங்களில் மேலோரும் கீழோரும், அறிஞரும் அறிஞரல்லாதாரும், மரித்தாயைத் தெய்வமென்று கொண்டாடி வந்த போதும், கிறிஸ்துமதமானது ஸ்திரீஜாதியை மகா கொடியதென்றே தீர்மானித் திருந்தது. பாதிரிமார்களுக்குப்பின் பாதிரிமார்களாய், பெண்மணிகளின் தாழ்மையைப்பற்றியும், அவர்களுடைய தீய சிந்தனையைப் பற்றியும், அவர்களுடைய அக்கிரமத்தைப் பற்றியும், கணக்கு வழக்கில்லாமல் எழுதிக்கொண்டே வந்திருக்கின்றார்கள்.

தர்த்துல்லியான் என்னும் கிறிஸ்துவ மகான் தாம் எழுதிய ஒரு புத்தகத்தில் பெண்களைப் பற்றி விவரிக்கும் பொழுது,

"பைசாசங்களின் வெளிவாயில்"

என்றும்,

"தடுக்கப்பட்ட விருக்ஷத்தின் முத்திரையை உடைத்தவள். ஆண்டவன் ஆணையை மீறி நடந்தவள்"

என்றும்,

"ஆண்டவனுடைய பிரதி பிம்பமாகிய மனிதனை வெகு சுலபமாக நாசமாக்கியவள்"

என்றும் கடிந்து கூறி, ஸ்திரீ ஜாதியினரை விழித்து,

"நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு ஏவாள் (ஆதித்தாய்) என்பதை நீங்கள் அறிய மாட்டீர்களா? கடவுளு

டைய சாபமும் தண்டனையும் இக்காலத்திலும் உங்கள் (பெண்) சமூகத்தினருக்கு இருந்தே வருகின்றது. கட்டாயம் உங்கள் குற்றம், உங்கள் தலையில், உயிருடன் இருக்கத்தான் வேண்டும்''

என்று இவ்வாறெல்லாம் தன் மனமாறக் கையோடிய வரையில் எழுதிப் போயிருக்கின்றார்.

இதனால் விளங்குவதென்ன? ஸ்திரீ ஜாதியினர் என்றென்றும் பாபிகள் என்றும், பிசாசு குணம் படைத்தவர்கள் என்றும், அருவருக்கத் தக்கவர்கள் என்றும் விளங்குகின்றது.

பெர்னார்ட் அப்போஸ்தலர்,

"பிசாசின் கருவி ஸ்திரீ" என்றும்,

அப். பொனு வென்ச்சர்,

"ஸ்திரீ எப்பொழுதும், கொட்டத் தயாராயுள்ள ஒரு தேள்" என்றும்,

"இவள் பூதத்தின் ஈட்டியாவாள்" என்றும்,

அப். ஸெய்ன்ட் ஸிப்ரியன்,

"ஸ்திரீயானவள் நம்முடைய ஆத்துமாவை அடிமைகொள்ள பிசாசு பிரயோகிக்கும் கருவி"

என்றும்,

ஸெயின்ட் ஜெரோம்,

"ஸ்திரீ பைசாசத்தின் வெளி வாயில், தேளின் விஷம், அழிவு அநியாயத்திற்கு வழிகாட்டி"

என்றும் கூறிப் போயிருக்கின்றார்கள். இவ்வளவு தானா!

ஸெயின்ட் ஜான் கிரிஸாஷ்டம் என்பவர்,

"ஸ்திரீ மூலமாகவே பிசாசு ஜய மடைந்தான். அவளாலேயே ஸ்வர்க்கம் இழக்கவேண்டியாயிற்று. சகல கொடிய ஜந்துக்களிலும் ஸ்திரீயே மகா ஆபத்தான பிராணி"

என்றும் எழுதியிருக்கின்றார்.

"ஸ்திரீ பொய்யின் மகள்"

"நரக வாயில் காப்பவள்"

"சமாதனத்தின் விரோதி"

"இவளால் ஆதாம் ஸ்வர்க்கத்தை இழந்தார்"

என்றும் எழுதுகின்றார்.

மாபெரிய ஸெயின் கிரகரி (தி. கிரேட்) போப்பானவர்,

"ஸ்திரீ கொடிய விரியன் பாம்பின் விஷத்தை யுடையவள்" என்றும்,

"மஹா கொடிய கவிகற்பித பறவை நாகத்தின் பொறுமையைப் படைத்தவள்"

என்றும் சொல்லிவைத்திருக்கின்றார்.

மயிற்கூச் செடுக்காது, தங்களைப்பற்றி மேற் சொல்லப்பட்ட பெரிய பாதிரிகளும், போப் மார்களும், மதத் தலைவர்களும் சொல்லிப் போயுள்ள அபிப்பிராயங்களைச் சற்று, அறிவு படைத்த எந்தக் கிறிஸ்துவ சகோதரியும் உணர முடியுமா?

மிகப் பெரிய கிறிஸ்துவ சந்நியாசி யென்று கணிக்கப்பட்டு பூஜிக்கப்பட்டுவரும் கிறை ஸாஷ்டம் என்னும், மஹான்:—

"ஸ்திரீகள் அத்தியாவசியமான ஒரு தொல்லையா கவே அமைந்திருக்கிறார்கள். இயற்கையாய்த் தோன்றி யிருக்கும் காமக் கருவியாகவும், அத்தியாவசிய மான துரதிர்ஷ்டமாகவும், வீட்டுக்கு வேண்டிய நரகமாகவும், மரணத்தை உண்டாக்கக்கூடிய மோகமாகவும், வர்ணம் தீட்டப் பெற்ற தீமையாகவுமே காணப்படுகிறார்கள்"

என்று எழுதிவைத் திருக்கின்றார்.

கிறிஸ்து மதத்தில் மிகமிகக் கேவலமான வேலைகளையல்லாமல், மற்றெவ்விதமான மத கைங்கரியத்தையும் பெண்மணிகள் செய்யக் கூடாதென்றே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அதாவது, அவர்களை மனித சமூகத்தினின்றும் ஒதுக்கியே வைக்கப்பட்டிருந்தார்கள் என்றால் மிகையாகாது. ஸ்திரீகள் பகிரங்க ஸ்தலங்களில் வரவொட்டாமலும், விருந்துகளுக்கும் வேறு விசேஷங்களுக்கும் போகவொட்டாமலும் தடுக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் வீடுகளுக்குள்ளேயே மௌனமாயிருந்து கொண்டு, தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படியும் படியாயும், நெய்தல், பின்னல், சமைத்தல் ஆகிய தொழில்களையே கவனிக்கும்படியாயும் கட்டளை யிடப்பட்டிருந்தார்கள். அந்த ஸ்திரீகள் எப்பொழுதேனும் வெளியில் செல்லவேண்டுமாயின், உச்சி முதல் உள்ளங்கால் வரையில் மூடப்பட்டே அனுப்பப்படுவார்கள். இப்படித்தான் புராதன காலத்துக் கிறிஸ்துவப் பெண்கள் நடத்தப் பட்டு வந்தார்கள்.

பிற்காலத்தில் ஐரோப்பா முழுதும் கிறிஸ்துவ ஆதிக்கம் ஒழிந்து, புதிய சமூக ஆசாரம் வெளிவரத் தலைப்பட்ட பின், கிறிஸ்து மதமானது சில மடாலயங்களை ஏற்படுத்திக்கொண்டு, சிற்சில வகையில் ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்தத்துணிந்து வந்தது. அவர்கள் அவ்வாறு செய்து வைத்த சிறிது முன்னேற்றமானது, ஸ்திரீகளை ஒவ்வொரு நாளும் புருஷர்கள் அபகரித்துக் கொண்டுபோய்க் கொண்டிருந்த ஒரு காலத்துக்குமட்டுமே தான் உரியதாய்க் காணப் பட்டது. அக்காலத்திய ஒழுக்கக் கேடுகளும், அத்துணைப் பெரிய

பந்தோபஸ்துக் கெல்லாம் மூலகாரணமாய் விளங்கி வந்தன. ஆனல், கிறிஸ்துவ மடாலயங்களும், எப்பொழுதும் பரிசுத்தத்துடன் விளங்கியதில்லை. இன்னும், ஸ்திரீ புருஷர்களுக் கிடையில், பிரமசரியத்தை ஏற்படுத்திவிடுவது, அவர்களுடைய கற்புக்கு மூலகாரணமாய் விளக்கிவிட மாட்டாது. கிறிஸ்து மதம் உச்ச ஸ்தானத்தில் இருந்து வந்த காலத்திலும், அவர்களுடைய மடங்களுக்குள் நிகழ்ந்து வந்த அக்கிரமங்களெல்லாம் அதிஅலங்காரத்துடன் பற்பல கிரந்த கர்த்தாக்களாலும் நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன. இத்தீய ஒழுக்கங்களெல்லாம் ஸ்திரீ ஜாதியை மத ஆதாரங்கொண்டு அடிமைப் படுத்தி வைத்தமையாலேயே சர்வ சாதாரணமாக நடந்துவர ஹேதுவாயிருந்தது. பிற்காலத்தில் புரொட்டஸ்டாண்ட் மதம் உற்பத்தியான போதும், ஸ்திரீகளின் அந்தஸ்தும் முன்னேற்ற மடைந்துவிட்டன வென்று கூறுவதற்கில்லை. இயேசுவோ ஸ்திரீகளை மனிதத்தன்மையுடன் நடத்தி வந்தார். ஆனல், அவருடைய சிஷ்யர்களோ, அவர்களை மிகக் கொடுமையுடன் நடத்தத் தலைப்பட்டுவிட்டார்கள்.

மேலே குறிப்பிட்டவை யெல்லாம், மாபெரும் ஸெயிண்டுகளான கிறிஸ்துவ மதபோதகர்களும், போப்புகளும், கிறிஸ்துவ ரிஷிகளும் எழுதியவையே யாகும். ஆனல், இவர்கள் எல்லாம், ஸேயிண்ட் பால் என்னும் அப்போஸ்தலருக்கு அடுத்தப்படியிலுள்ளவர்களே! பால் என்பவரே கிறிஸ்து மதத்தை நிலைநாட்டியவர். கிறிஸ்து, பெயரளவிலேயே மத ஸ்தாபகராவர். ஆனல், பால் என்பவரே கிறிஸ்து மதம் என்னும் ஒன்றையும், மடாலயங்களையும் ஏற்படுத்தி, கிறிஸ்து மதம் உலகெங்கும் பரவும்படி செய்த பெரியார். இவருடைய, ஸ்திரீகளைப் பொருத்த அபிப்பிராயங்களை இங்கு முக்கியமாய் எடுத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

பால் அப்போஸ்தலர், இல்லறமாகிய விவாக பந்தத்தையே வெறுத்தவராகக் காணப்படுகின்ருர். அவர் கூறுவதிலிருந்து, அதாவது,

" விவாகம் செய்து கொள்ளுபவர்கள் பாபம் செய்த குற்றத்திற்கு ஆளாகாவிடினும், அவர்கள் தொந்திரவுக்கு ஆளாவார்கள் "

என்பதிலிருந்து, விவாகம் செய்து கொள்ளும் எண்ணத்தை இழிவானதாகக் கருதுவதாகின்றது. மேலும், அவருடைய மதத்தின் மூலக்கொள்கையே,

" பாபம் ஸ்திரீயின் மூலமாக ஆரம்பித்தது. அவள் காரணம் பற்றியே நாம் எல்லோரும் இறக்கின்றோம்"

என்ற நம்பிக்கையில் நிலைத்திருக்கின்றது. மேலும், அடியிற்கண்ட விதமாயும் சட்டம் இயற்றியிருக்கின்றார்.

கிறிஸ்துவ பைபிளின் புதிய ஆகமத்தில் கலாஸியன்ஸ் 111, 18 ல்:—

" மனைவிமார்களே! உங்கள் புருஷர்களுக்கு அடிமைப்பட்டிருப்பீர்களாக "

என்றும்,

1. கார்னித்தியன்ஸ். 14–34. 35 ல்:—

" உம் ஸ்திரீகள் கோவில்களில் மௌனம் சாதிப்பார்களாக. அவர்கள் பேச விடப்படவில்லை. ஆனால், அவர்கள் தாழ்மைத் தனத்திலேயே இருக்கும்படி ஏவப்பட்டிருக்கின்றனர். அப்படி சட்டமும் கூறுகின்றது. அவர்கள் ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டுமானால், வீட்டிலே தங்கள் புருஷர்களைக் கேட்கட்டும். ஏனென்றால், ஸ்திரீயானவள் கோயிலில் பேசுவது, அவளுக்கு அவமானமானதாகும்.,,

என்றும்,

1. டிமோத்தி (2) 11–12 13. 14 ல்:—

"ஸ்திரீ மௌனமாக இருந்து முழு அடிமைத் தனத்துடன் தெரிந்து கொள்ளட்டும். ஆனால், அவள் மௌனமாயிருப்பதை விடுத்து, ஒரு ஸ்திரீ கற்பிக்கவும், அதிகாரத்தை அடையவும், நான் இடங்கொடேன். ஏனென்றால், முதல் ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டார், அசன் பிறகு தான் ஏவாள். ஆதாம் ஏமாற்றப்படவில்லை. ஆனால், ஸ்திரீ ஏமாற்றப்பட்டமையால், அவளே அதிக்கிரமம் செய்தவள் ஆகின்றாள்"

என்றும் காண்கின்றோம்.

கிறிஸ்துவர்கள், "பெண்ணினால் பாபம் உண்டாயிற்றென்றும், அதனால் ஸ்வர்க்கத்தில் வைக்கப்பட்ட, ஆதித் தகப்பனாகிய ஆதாம், பூமிக்குத் தள்ளப்பட்டு இறைவனால் பெண் ஆண் இரு ஜாதியினரும் சபிக்கப்பட்டார்களென்றும், இந்த ஆதித்தாய் செய்த பாபத்தினால், சகல குழந்தைகளும் பாபத்திலே பிறந்து வளர்ந்து தண்டனைக்குள் ஆகி வந்தார்கள் என்றும், இந்தப் பாபத்தைப் போக்க தேவன் தன் ஏகபுத்திரனாகிய இயேசு நாதரை அனுப்பி, சகல மனுஷஜாதியின் பாபத்தையும் தான் ஏற்றுக்கொண்டு, தன்னைப் பாப நிவாரணத்திற்கென்று பலிகொடுத்து, தகப்பனின் கோபத்தைப் போக்கினாரென்றும்" கொள்கையுடைத்தாயிருப்பதால், எல்லா உலகங்களினுடைய கஷ்ட நிஷ்டூரங்களுக்கும் காரண பூதமாயிருந்த ஸ்திரீ ஜாதியை வாயில் வந்தவாறும், பேனா எழுதும் வகைக்கும் மனமாற ஏசி இகழ்ந்து வந்தார்கள். எந்தக் கிறிஸ்துவரும், மேலே குறிப்பிட்டுள்ள ஏசல் மாலையைப் பொய்யானதென்றும், கைச்சரக்கென்றும், கட்டுரையென்அப், சரித்திர ஆதார மற்றதென்றும் சொல்ல முன் வரமாட்டார்கள். பைபிள் வேதத்திலேயே, பெண்களுக்கு எவ்வித அந்தஸ்தையும் கொடாததோடு நில்லாமல், அவர்களை ஏசி, அவர்களை அடிமைத்தனத்திலேயே—மௌனத்திலேயே வைத்திருக்கும்படி கட்டளையிடப்பட்டிருப்பதை இவர்கள் மறுக்க முடியாது. தங்கள் பெண்சாதிகளை விரும்புங்கள் என்று பைபிளில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற விஷயம் உண்மையே. இயற்கையிலேயே பெண் இனமானது, ஆண் இனத்தால் விரும்பத்தக்க

விதமாய் இறைவன் படைத்துள்ளான். இது எல்லா உயர்தரப் பிராணிகளிடத்துமே காணப்படக் கூடிய ஒருவகை நேர்த்தியான அநுபவமாய் இருந்து வருகின்றது. சந்தோஷமா யிருப்பதற்காகத் தன் பெண்சாதியை எவரும் அன்பாய் நடத்தாமல் முடியாது. உங்கள் பெண்சாதிகளிடம் அன்பாயிருங்கள், அவர்களைக் காதலியுங்கள் என்பதினாலேயே பெண்களின் அந்தஸ்து உயர்ந்து போய் விடாது—, உயர்த்துவதாக மாட்டாது. மேலே குறிப்பிட்டுள்ள வேத வாக்கியங்களிலிருந்து, ஸ்திரீகளை அடிமையாகவே அடக்கி நடத்தும்படி ஏவுவது விளங்கும்.

இயேசு கிறிஸ்துவானவர், பரிசுத்தத்தில் புருஷ சம்பந்தமின்றி, பரிசுத்த ஆவியினால், தெய்வ அசாதாரண கிருபைபெற்று, உலகத்திலே சிறந்த மகான்களில் ஒருவராகவும், தீர்க்க தரிசியாகவும் புகழ்பெறப் பெற்று வளர்த்த தன் தாயை உதாசினமாக நடத்தியதை ஆதாரமாகக் கொண்டே, அவருடைய சிஷ்ய கோடிகள் தங்கள் தாய்மார்களையும், சகோதரிகளையும், புத்திரிகளையும், மனைவிகளையும் தட்டுமுட்டு சாமான்களைப் போல் பாவித்து, அவர்களின் பேரில் அபாண்டமான பழிகளைச் சுமத்தி விட்டு, அதை வேத புத்தகங்களிலும் ஏற்றி விட்டார்கள்.

இயேசுநாதரின் பரிசுத்தத்தாயும் சகோதரர்களும், இயேசுநாதரைப் பார்த்துப் பேச ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் விஷயத்தை இயேசு நாதர் அறிந்து, தன்னைப்பெற்றுப் புகழ்பெற வளர்த்த தாயின் பாதத்தை முத்தமிட்டுத் தழுவி மரியாதை செய்திருப்பாரானால், அவருக்குப்பின் அவர்களுடைய சிஷ்யர்களும் அப்படியே ஸ்திரீகளைக் கௌரவப்படுத்தி யிருப்பார்கள். ஆனால் அந்தோ! இயேசுவானவர் அப்படிச் செய்யாமல், அதற்கு நேர் மாறாக, கிஞ்சிற்று மரியாதையும் இலக்ஷியமுமின்றி அவமானப் படும்படியாகவும், பெற்ற தாயின் மனம் ஒடிந்து முறியும்படியாகவும்,

"என்னுடைய அன்னை யார்?"

என்று கூறி வாளாவிருந்துவிட்டார் என்று மத்தேயு—13—48 ல் கூறப்பட்டிருக்கின்றது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'

என்பது எங்கே? துர் அதிர்ஷ்டவசமாக இயேசுவானவர், தான் தன் பிரசாரங்களை ஆரம்பித்துச் சில வருஷங்களுக்குள் இளம்பிராயத்திலேயே இறந்து விட்டார். இல்லையேல், அவரும் இல்லறம் நடத்தி, அப்பொழுது யூதர்களிடையில் ஸ்திரீகளுக்கிருந்த இழிந்த அந்தஸ்தை உயர்த்தப்பாடுபட்டு உலகுக்கே ஒரு முன்மாதிரியும் வழிகாட்டியுமாக விளங்கியிருப்பார்.

பொதுவாக நோக்குமிடத்து, இயேசுவானவர், ஸ்திரீ ஜாதியினரிடம் நல்லவிதமாகவே நடந்து கொண்டு தான் இருந்திருப்பதாக, அவருடைய சரித்திரத்திலிருந்து தெரிகின்றது. ஆனால், அதை நல்ல முறையில் உயர்த்த இயேசுவுக்கு முடியாமலும் இருந்திருக்கின்றது. ஏனென்றால், அவர்,

> "நான் சட்டங்களையும் தீர்க்க தரிசிகளையும் அழிக்க
> வந்துள்ளேனென்று எண்ண வேண்டாம். ஆனால்,
> அவைகளை நிறைவேற்றவே"

என்று, ஒலிவமலை போதனையின் பொழுது கூறியதாக, மத்தேயு 5–17 முதலிய வேதவாக்கியங்களில் கூறப்பட்டிருக்கின்றது. முன், யூதர்கள் எவ்வளவு அந்தஸ்தை ஸ்திரீகளுக்குக் கொடுத்திருந்தனரோ, அல்லது பழய ஆகமங்களால் எவ்வளவு அந்தஸ்து அளிக்கப்பட்டிருந்ததோ, அதை உயர்த்திவிடவோ தாழ்த்திவிடவோ இயேசுவானவர் முயற்சித்திருக்க மாட்டார் என்று, முற் கூறிய அவருடைய அறிக்கையினால் விளங்குகின்றது.

இதே சந்தர்ப்பத்தில் பண்டையகால வேதமாகிய யூதர்களின் (மோஸே தீர்க்கதரிசி வர்க்கத்தாரின் அடியார்கள்) வேத புத்தகப் பிரகாரம் ஸ்திரீகளின் அந்தஸ்தையும் சற்று கவனிப்போம். இந்து தேசத்தில் ஹிந்து மதத்தில் எப்படி ஸ்திரீ ஜாதியினரை ஒரு விளையாட்டுச் சாமான் போலவும், புருஷ ஜாதியினரின் சிற்றின்பத்தின் பொருட்டு உண்டாக்கப்பட்ட அழகிய உயிர்ப்பிராணி போலும் கருதி நடத்தி வந்தார்களோ அப்படியே, பண்டை நாகரீகமும், வேதமும், மதமும் படைத்த பழய ஆகம அராபிய யூதர்கள் கருதி வந்த

தாக, அவர்களுடைய சரித்திரங்களும் வேதங்களும் கூறுகின்றன. பழய ஆகமமெனப்படும் பைபிள் வேதத்தின் முன்பாகத்தைப் படிக்கப் படிக்க, ஸ்திரீகளை ஒரு மாற்றுச் சாமானாகவே கருதியிருப்பது விளங்காமற் போகாது. இதற்கு ஆதாரமாக ஒரே ஒரு வேதவாக்கியத்தைக் குறிப்பிடுவோம். பழய ஆகம பைபிள் டெட்டெரானமி—25—அத்தியாயம், 5-ம் சுலோகத்தில்,

"சகோதரர்கள்கூடி வசித்து, அதில் ஒரு சகோதரன் சந்ததியின்றி இறந்தால், இறந்தவனுடைய விதவை அயலானை மணக்க மாட்டாள். ஆனால், இறந்தவனின் சகோதரன் அவளுடன் கூடி அவளைத் தன் மனைவியாக எடுத்துக் கொள்ளக் கடவன்"

என்று கட்டளை யிடப்பட்டதிலிருந்து, ஸ்திரீ ஜாதியினருக்கு எவ்வளவு சுதந்திரம் உண்டென்று விளக்கவில்லையா? ஒரு குடும்பத்தில் ஒரு பெண் உண்டானால், அவள் அக்குடும்பத் தலைவனாகிய ஆண் மகனால் ஆளப்படவேண்டும்; அவளையே இரு குடும்ப சச்சரவுகளைச சமன் செய்ய ஒரு கருவியாகவும், சில சமயங்களில் விரோதிகளை வெல்லவோ, தன் வயப்படுத்தவோ—தூண்டில் மீனுக்கு இரையாக உபயோகப்படுத்தியும் விடுவதுண்டு. இதற்கு உதாரணமாக, ஒரு சரித்திரக் குறிப்பைக் காட்டுவோம். பைபிளின் பழய வேதகாலத்து ஸால் என்னும் அரசர், தாவீது என்னும் வாலிபனை, பல காரணங்களைக் கொண்டு வெறுத்து வந்தார். தன் வெறுப்பை நிறைவேற்றுவதற்காக அவர் செய்த சூழ்ச்சி என்னவென்று எண்ணுகின்றீர்கள்! அந்தத் தாவீதை நாசப்படுத்தும் எண்ணத்துடனும், பல வகுப்பினருடன் தாவிதை விரோதிக்கச் செய்யும் துர்நோக்கத்துடனும், தன் மகளாகிய மைக்கேலை தாவீதுக்கு மனைவியாகக் கொடுத்தார். தன் மகளை மனப்பூர்வமாக தாவீதுக்குக் கொடுப்பதாகப் பகிரங்கப் படுத்திக் கொண்டு,

"நான் அவளை (என் மகளாகிய மைக்கேலை) அவனுக்கு (தாவீதுக்கு) கொடுப்பேன், அதனால் அவள் அவனுடைய (கருத்துக்கு) சுருக்காயிருக்கட்டும். பிலிஸ்டைன்கள் அவளுக்கு எதிரிகளாக மாறட்டும்"

என்ற எண்ணங்களுடன் கொடுப்பதாக ஏற்பாடு செய்தாராம். இவ்விஷயம், பைபிள் பழய வேதம் 'சாமுவே'லில்–18–அத்தியாயம், 21-ம் சுலோகத்தில் காண்பீர்கள்.

சகோதரிகளே! இப்படி, வேதாகமங்களும், சுருதி ஸ்மிருதிகளும், இன்னும் பற்பல வேத சட்ட திட்டங்களும், சாஸ்திரங்களும் கொட்டை எழுத்துக்களில் உங்களை ஒரு பிள்ளைபெறும் இயந்திரமாகவே பாவித்தும், சம அந்தஸ்துடைய மனிதப் பிறவியென்றும், மேலும் மேலும் கட்டளையிட்டுக்கொண்டே வந்திருப்பதை நீங்கள் இப்பொழுது வெள்ளையாகத் தெரிந்துகொண்டிருப்பீர்கள். பிள்ளைகளைப் பெறவும், பெற்ற பிள்ளைகளை போஷிக்கவும், கரிச்சட்டிகளைக் கழுவி—அடுப்பங் கரைகளில் அடங்கி புருஷனுக்கு இனிமையான தின்பண்டங்களைச் செய்யவும், அவனுடைய மிருக சுபாவத்தை அவன் இஷ்டப்பட்ட பொழுதெல்லாம் தணிக்கவும் மட்டுமே, உங்களை இறைவன் படைத்திருப்பதாக, வேதங்கள் பல திருப்பித் திருப்பி, எந்த விதத்திலும் இம்மியளவேனும் கௌரவத்திற்கு இடங் கொடாதபடி கூறுகின்றன.

உங்களை, எல்லாக் காலங்களிலும், பல மத போதகர்களாலும், பொதுவாக ஆண் ஜாதியினரால் புத்தி யற்றவர்களென்றும், பகுத்தறிவு படைக்கப் படாதவர்களென்றுமே கருதி வந்திருக்கின்றனர். இங்கு நான், மத போதகர்களையும் வேதங்களையுமே ஆதாரமாகக் கொண்டேன். பல கவிவாணர்களும் அரசர்களும் மகான்களும் பெரியோர்களென இன்றைக்கும் கொண்டாடப்படும் ஏனைய மகாத்துமாக்களும் ஸ்திரீகளை மிகவும் கேவலமாகவேதான் வர்ணித்திருக்கிறார்கள். உங்களுடைய அங்க அடையாளங்களின் அழகுகளை வெகு நேர்த்தியாக வர்ணிப்பார்கள். உடனே, உலகத்தில் உள்ள கொடிய சிங்கம் புலி கரடி முதலிய மூர்க்க ஜந்துக்களை நம்பினாலும்,

"பெண்களை நம்பாதே"

என்று தான், கூறியும் எழுதியும் இருக்கின்றனர். அவைகளையெல்லாம் அப்படியே உங்களுக்குத் தெரிவிப்பதானால் அது பல

புத்தகங்களாக ஆகிவிடும். அவையெல்லாம் அவசியமில்லை. அவர்கள் என் செய்வார்கள் பாவம்! அவர்களுக்கு வழிகாட்டிகளாகிய மத ஸ்தாபகர்களும், அவர்களால் தெய்வவாக்கென்று சொல்லிப்போன வேத புத்தகங்களுமே யல்லவா அவர்களின் கூற்றுக்கு ஆதாரம். நீங்கள் நொந்து கொள்ள வேண்டியது எதை யென்பதை நீங்களே வெள்ளையாகத் தெரிந்துகொண்டிருப்பீர்கள்!

சகோதரிகளே! மனிதன் எப்பொழுதும் உங்கள் விஷயத்தில் கபடமாகவே நடந்து வருகின்றான். அவன், அழகிய பதங்களால்,

"கண்ணே'—'கண்மணியே'—'கட்டழகியே'—
'காதலியே'—'என்னுயிரே"

என்றழைப்பதெல்லாம் பாசாங்கே தவிர உண்மையல்ல. தனக்கு அவசியமென்று தோன்றும் பொழுதும்—வெள்ளையாகச் சொல்வதற்கு மன்னிக்கவும்—தன் காம விகாரத்தைத் தீர்த்துக் கொள்ளவேண்டிய சந்தர்ப்பத்தின்பொழுதுமே தான், இனிமையான—உள்ளம் பூரிக்கும் விதமான பதங்களைக் கொண்டு அழைப்பான். தன் காரியம் கைகூடி விட்ட மறு நிமிஷமே அவன் மனம் கல்மனமாக மாறி மனு மகாராஜரின் ஏசல் மாலையும், பௌல் சாமியாரின் பகைமைப் பாட்டும் மனதிற்கு வந்துவிடுகின்றன. ஏறக்குறைய எல்லா மதங்களும், உங்களை ஒரு அசுத்தப் பொருளாகவே மதித்துத் தள்ளி ஒதுக்கி வைத்திருக்கின்றன. ஜப்பான் தேசத்திலும், இதர தேசங்களே போல் முற்காலத்தில் ஸ்திரீகளை எந்த வைதீக காரியங்களிலும் நீக்கி வைத்திருந்தது மன்றி, கடவுளுக்கு நன்றி செலுத்தவும் அனுமதித்தது இல்லை. சீன தேசத்தில் கோவிலுக்குள் போகக் கூடாது. இந்தியாவிலோ சொல்லத் தேவையில்லை—முன்னரே வேண்டிய அளவு சொல்லியாயிற்று. "போப்பை" எப்படி அபரிசுத்தமாகக் கருதப்பட்டதோ அப்படி, ஸ்திரீகளையும் பல சாஸ்திரங்கள் கருதுகின்றன. அவை இன்னும் அமுலில் இல்லாமல் இல்லை. எப்படி, இந்து சாஸ்திரங்கள், ஒரு ஸ்திரீ, ஒரு தெய்வீக விக்கிரகத்தைத் தொட்டால் அவ்விக்கிரகத்தின் தெய்வத்தன்மை நீங்கி விடுவதாகவும், அந்த விக்கிரகம் அசுத்தப்பட்டுப் போவதாகவும், அதனால் அதை எறிந்துவிட வேண்டுமென்றும் கூறியிருக்கின்

றதோ அதைப் போலவே, இஸ்ரவேல் ஜாதியினரும் ஸ்திரீ ஜாதியினரை அசுத்தப் பொருளாகக் கருதி இருந்திருக்கின்றனர்.

பைபிள் பழய வேதம்—கிரானிக்கிள் 8-ம் அத்தியாயம், 11-ம் சுலோகத்தைப் பார்க்கவும். சாலமோன் பாரானின் குமாரத்தியைத் தன் மனைவியாகக் கொண்டு வந்து,

> "என் மனைவி (யே யானலும்) இஸ்ரவேலர்களின் அரசனுகிய தாவீதின் வீட்டில் வசிக்கக் கூடாது. ஏனென்றால், அவ்விடம் பரிசுத்தமானவை—தேவ பரிசுத்த ஆவி வந்த இடம்"

என்று சொல்லியிருந்தால், ஸ்திரீ ஜாதியை ஒரு அசுத்தப் பொருளாகவே கருதப்பட்டு வந்த தென்பது விளங்காமற் போகாது. புதிய பழய ஆகமங்களாலேயே ஸ்திரீகளுக்கும், அசரீரி வாக்குகளும் தெய்வ பிரசன்னங்களும் உண்டாயிருப்பது விளங்கும். உதாரணமாக, இயேசுவின் தயாராகிய மரியம்மாளை எடுத்துக் கொள்ளவும். இவர்களுக்கு தேவ தூதன் தூது வந்த விஷயம் பைபிளில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. மோசே தீர்க்கதரிசியின் தாய்க்கும் தேவ தூதன் தூது சென்றிருக்கின்றார். ஸ்திரீ ஜாதியினர் அசுத்தப் பிராணிகளானல் தெய்வச் செய்திகள் கிடைக்குமா? இப்படியிருக்க, முன் காலத்துக் கிறிஸ்துவர்களும், அவர்களுக்கு முன்னிருந்த இஸ்ரவேலரும் ஸ்திரீ ஜாதியினரை ஏன் அசுத்தப் பொருளாகக் கருதினர்கள் என்பதே விந்தை! நம் தேச இதிகாசங்களிலும் புராணங்களிலும் ஸ்திரீகள் தெய்வத்தன்மை உடையவர்களாயிருந்தும் அவர்களை மிக மிகக் கேவலப் பொருள்களாகவே கருதிவந்தது ஏன் என்பது தான் விளங்கவில்லை. இவை யெல்லாம் சுயநலம் மிகுந்த ஆண் ஜாதியினரின் கைவேலையா அல்லது தெய்வத்தின் ஆக்ஞை தானு என்றும் சந்தேகிக்க வேண்டியிருக்கின்றது. கருணைக் கடவுளான தயாமூர்த்தி, தன் சிருஷ்டியில், அழகிய ஸ்திரீ ரத்தினங்களை, புழுப் பூச்சிகளைப் போல், ஆண்களால் நடத்தப்படும் படியாக ஏவியிருப்பாரா? ஏவியிருப்பா ரென்று எவராவது இயம்பினல் இதைநம்பலாமா? இதை வாசகர்களுடைய பகுத்தறிவுக்கே விட்டு விடுகின்றோம். நீங்களே யோசித்துப் பாருங்கள்!

சகோதரிகளே! நீங்கள் எப்பொழுதும் அடிமைத்தனத்தில் அசுத்தப் பொருளாக மௌனமாக இருக்க முடியாது. மேல் நாட்டுப் பெண்களைக் கவனித்தீர்களா? அவர்கள் தங்கள் மதக் கோட்பாடுகளை உடைத்து, உதறித் தள்ளி விட்டார்கள். தங்கள் மதமாகிய கிறிஸ்து மதக் கோட்பாடுகளை முற்றிலும் மறந்து விட்டு, தம் அறிவின் வயப்பட்டு, சுதந்தரமாக நடக்க முன் வந்து விட்டார்கள். அவர்களுடைய கேள்வியெல்லாம், மதக் கோட்பாடுகள் இயற்கைக்கு ஏற்றதாகவும், மனித பகுத்தறிவுக்கு உட்பட்ட தாகவும், மனிதர்களால் நடந்து கொள்ளக் கூடியதாயும் இருக்கின்றனவா என்பது தான். ஸ்திரீ ரத்தினங்களைப்பற்றிய கட்டு திட்டங்களைப் பார்த்து அவர்கள் நடுங்கினார்கள். வேத புத்தகங்களை மரியாதையான இடங்களில் வைத்து விட்டு, தங்கள் பகுத்தறிவு பகர்கின்றபடி நடக்க ஆரம்பித்து விட்டார்கள். அடிமைத் தனத்திலிருந்து பலவந்தத்துடன் நீங்கின ஒரு பிராணியாகட்டும், சமூகமாகட்டும், ஒரு மூலையிலிருந்து அடுத்த மூலையின் கோடிவரைக்கும் முரண்டிக் கொண்டு ஓடுவது இயற்கையே. உதாரணமாக, நசுக்குண்டு கிடந்த ருஷ்ய தேசப் பிரஜைகள் இப்பொழுது, உலக மதங்களையும், சட்ட திட்டங்கள் நன்மைதிமை என்பவைகளையுங் கூடக் கவனியாமல் எல்லாவற்றையும் அழித்துவிட முயற்சிப்பதுடன் நிற்காமல், ஆஸ்திகத்திற்கே விரோதமாகக் கிளம்பி யிருப்பதாகப் படித்து வருகின்றோம். அதே போல், பலவருஷங்களாக அடிமையாயும் அசுத்தப்பொருளாகவும் கருதப்பட்டு வந்ததை விட்டு, சுயேச்சை அடைந்தவுடன் நம் வெள்ளைக்காரச் சகோதரிகள், தம் தம் பகுத்தறிவு பகர்கின்றபடி நடக்க, ஆரம்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. நடு நிலைமையே எப்பொழுதும் நிலை நிற்பது. அதையே நாமும் கைக்கொள்வோமாக.

# இஸ்லாம் மதம்.

இஸ்லாம் மதம், அரபிய நாட்டில் 1350-வருஷங்களுக்கு முன் தோன்றிய பள்ளிக்கூடப் படிப்பற்ற—ஒரு தற்குறிப் பேர்வழியாகிய—முகம்மது நபி என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். இவரால் உலகிற்குக் கொண்டுவரப்பட்ட வேத புத்தகத்திற்குத் தான் சகஜமாக 'குர் ஆன்' என்பது. இந்தப் புத்தகத்தை, தெய்வவெளிப்பாடென்று கொடுத்த அந்த முகம்மது நபி என்பவரைக் கடவுளுடைய அடியாரும் தூதரும் என்று நம்பிக்கொண்டு, ஏகேஸ்வரக் கொள்கையில் தடுமாற்றமின்றி நற்காரியங்களைச் செய்து வருபவர்களைத்தான் முஸ்லீம்கள் என்பது. இவர்களின் மதக் கோட்பாட்டிற்கு ஆதாரமாக உள்ளது "குர் ஆன்" என்னும் வேத புத்தகம். இரண்டாவதாக, இக் 'குர் ஆனை'க் கொடுத்த மேற்படி முகம்மது நபியாரின் நடை உடை பாவனை, நற்போதனை முதலியவைகளைச் சேகரித்து வைத்துள்ள "ஹதீஸ்" எனப்படும் கிரந்தம். "குர் ஆன்" என்பது தெய்வ வெளிப்பாடு. இது தேவ தூதரால் முகம்மது நபிக்கு வெளியிடப்பட்டது. இவ்வெளிப்பாடுகள் முகம்மது நபியின் ஜீவியகாலத்தில், மனிதப்பிறவிக்கு வழிகாட்டியாக இருக்கும் பொருட்டு, அவ்வப்பொழுது பல சந்தர்ப்பங்களில் வெளியாக்கப்பட்டது. வெளியான உடனே அதை முகம்மது நபியானவர் தன் தோழர்களில் எழுதப்படிக்கத் தெரிந்த பண்டிதர்களைக் கொண்டு எழுதிவைத்து வந்தார். இப்படி அவ்வப்பொழுது எழுதிவைத்தவைகளை யெல்லாம், அப்பொழுது ஒருங்கு சேர்த்து ஒரு புத்தகமாகச் செய்து விட்டார்கள். இதைத்தான் "குர்ஆன்" என்பது. இந்தக் "குர் ஆனி'ல், இந்த 1350-வருஷங்களாக எந்தவித மாறுதலும் ஏற்பட்டில்லை. 1350-வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் இன்றும் இருக்கின்றன. அவற்றுடன் இன்று லட்சக்கணக்காக அச்சிடப்படும் "குர் ஆனை'யும் ஒத்திட்டுப் பார்த்து, ஆராய்ச்சிக் காரர்களால் ஒரு புள்ளி அரைப் புள்ளிகூட மாற்ற

ப்படவில்லையென்று நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்து வருகின்றார்கள். சுமார் 40 கோடி "குர் ஆன்" புத்தகங்கள் உலகத்தின் பல தேசங்களிலும், மூலை முடுக்குகளிலும் பரவிக்கிடக்கின்றன. ஆனால், எத்தேசத்தில் பார்த்தாலும் ஒரு "குர் ஆன்" புத்தகத்திற்கும், மற்ற "குர் ஆன்" புத்தகத்திற்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் இருக்கின்றது. இப்புத்தகம் அரபிய பாஷையில் உள்ளது. நான் எடுத்துக் கூறப்போகும் ஆதாரங்கள் இப்பரிசுத்த வேத புத்தகத்திலிருந்தே யாகும்.

"ஹதீஸ்" என்பது முகம்மது நபியவர்களின் ஜீவிய காலத்து விரிந்த சரித்திரமாகும். இதில் நபிகள் நாயகத்தின் அனுப் பிரமாணமான செயல்களும், அவர்களுடைய நற்போதனைகளும் மலிந்து கிடக்கின்றன. இவ்வதீஸ் என்பதும், நபிகள் நாயகத்தின் ஜீவிய காலத்திற்குப் பிறகு, சில வருஷங்களுக்குள் நபிகள் நாயகத்தின் கூடவிருந்த அவர்களின் தோழர்களால் பார்க்கப்பட்டதையும், கேட்கப்பட்டதையும் நுணுக்கமாக வரைந்து புத்தக ரூபமாய் சேமிக்கப்பட்டு விட்டது. ஒரு முஸ்லீமுக்கு முக்கிய ஆதாரம் வேத வெளிப்பாடாகிய தலீல் ஆகும். குர் ஆனுக்கு தலீல் என்பார்கள். இவ்வெளிப்பாட்டின் உட்கருத்துக்களை விளங்கிக் கொள்ள அவசியமானல் ஹதீஸைத் தேடுவார்கள். ஹதீஸ் என்பது பலமனிதர்களால் பார்க்கப்பட்டதும் கேட்கப்பட்டதும் ஆகையால், அதில் சந்தேகம் ஜனிப்பது சகஜம். ஹதீஸில் ஏதாவது தலீலுக்கு மாறுபட்டதாய் இருக்குமானல் முஸ்லீம்கள் தலீலையே பின்பற்றுவார்கள். முகம்மதுநபி யவர்களின் கட்டளையும் அப்படியேயாகும். மனிதன் பிசகு செய்வது இயற்கை. இறைவன் கட்டளைகளில் மாறுதல் இராது. இவ்வளவு தூரம் இஸ்லாத்தின் வேதத்தைப் பற்றியும், அதைக் கொண்டுவந்து கொடுத்த மகானைப் பற்றியும் ஏன் சொல்ல நேரிட்டதென்றால், முஸ்லீம்கள் அல்லாத வாசகர்களுக்கு, குர் ஆன் என்றால் என்ன? ஹதீஸ் என்றால் என்ன? என்று விளக்கும் பொருட்டேயாம். நாம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு, "குர் ஆன்", "ஹதீஸ்" இவ்விரண்டிலிருந்து மட்டுமே ஆதாரங் காட்டப்படும். ஏனென்றால், ஒவ்வொரு மதமும் ஸ்திரீ ஜாதிக்கு எவ்வித அந்தஸ்தைக் கொடுத்திருக்கின்றதென்பதை அறிவிப்பதே இப்புத்தகத்தின்

நோக்கம். அறியாமையால் சுயமே ஏற்படுத்திக்கொண்ட தாழ்வையோ அல்லது நவீன காலத்து முன்னேற்றத்தால் ஒரு சமூகமோ ஒரு தேசமோ, ஒரு ராஜ்யமோ, ஒரு வகுப்போ ஏற்படுத்திக் கொண்ட உன்னத அந்தஸ்தைப் பற்றியோ இங்கு ஆராயவில்லை. மேலும், பழக்க வழக்கங்களைப் பற்றியும் இங்கு கவலைப்படவில்லை. மதத்தின் பேராலும், வேதத்தின் பேராலும் நம் சகோதரிகளுக்கு என்ன அந்தஸ்து உண்டென்பதைப் பற்றியே இங்கு ஆராயத் தொடங்கினோம்.

## குர் ஆன் வேதக்கட்டளை ஆராய்ச்சி—1.

"ஏ, மனிதர்காள்! உங்களை ஒரு தனிப்பட்ட நபரினின்றும் படைத்தவனும், அந்நபரினது மனைவியை அதே விதமான சத்தினின்றும் படைத்தவனும், இன்னும் அவ்விரண்டினின்றும் பல ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தவனுமாகிய உங்களுடைய நாயனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்;

மேனும், நீங்கள் ஒருவருக்கொருவர் உங்களுடைய பாத்தியதையை எவருடைய கட்டளையை—கருணையைக் கொண்டு கேட்கின்றீர்களோ, அப்படிப்பட்ட அல்லா (ஹ்) வுக்குரிய உங்களுடைய கடமையைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்.

மேலும், உதிர சம்பந்தமான உறவினரைக் குறித்தும் ஜாக்கிரதையா யிருங்கள்" ("குர் ஆன்" 4-1)

இந்த குர் ஆன் வாக்கியம் வெள்ளையாக இருப்பினும், அரபி பாஷையிலிருந்து மொழி பெயர்க்கும் பொழுது, அழகிய கருத்துக்களை யெல்லாம் அப்படியே வெளியாக்குவதற்கு ஏற்ற தமிழ்ப் பதங்கள் தமிழில் இல்லாததால், இவ்வாக்கியத்தின் உயர்ந்த கருத்துக்கள் வெளியாகாமல் இருக்கின்றன. ஆகவே, அதை வியாக்கியானப் படுத்தவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. குர் ஆனில் ஸ்திரீ தர்மத்தைப் பற்றிக் கூறும் பொருட்டு, அந்நிஸா—"ஸ்திரீ" என்றே ஒரு அத்தியாயத்திற்கு நாமமிடப்பட்டிருக்கின்றது.

இந்த "அந்நியா"—"ஸ்திரீ" அத்தியாயத்தின் முதல் வாக்கியமே மேலே குறிப்பிடப்பட்டது. இவ்வாக்கியத்தை வியாக்கியானம் செய்து விவரித்து, ஆங்கிலத்திலும் அரபி பாஷையிலும் பாண்டித்தியம் பெற்ற ஒரு சட்டநிபுணர் எழுதியுள்ளதை எளிதில் நேரான முறையில் அறிந்து கொள்ளும்படி அடியில் குறிப்பிடுகிறோம்.

"இத்திருவாக்கியமானது, ஸ்திரீகளின் அந்தஸ்தை உயர்த்தி, அவர்களை ஆடவருக்குச் சமமாகச்செய்த ஓர் உரிமைச்சட்டமாயிருக்கிறதென்று அதிக தைரியமாகக்கூறலாம். ஆனால், இத்திருவாக்கியமானது, அந்த அரபு நாட்டில் வெளியாக்கப்படுமுன் (1350-வருஷங்களுக்கு முன்) இவ்வுலக சரித்திரத்தில் பெண்களின் கதியானது எவ்வளவு மிலேச்சத்தனமா யிருந்துவந்ததென்று அறிந்துகொள்ளக் கூடியவர்களும், இந்தக் குர் ஆன் ஆயத்தானது எவருடைய மத்தியில் வெளியாக்கப்பட்டதோ அப்படிப்பட்ட அராபிகளிடத்தில் அக்காலத்தில் என்ன விதமான கொடிய பழக்க வழக்கங்கள் வழக்கத்தில் இருந்து வந்தனவென்று தெரிந்துகொள்ளக் கூடியவர்களும், இதைக்காட்டிலும் பெரியதும் உயர்ந்ததுமாகிய வேறெவ்விதமான விஷயத்தையும் நினைக்காமலிருக்கும்படி அவ்வளவு பெரிய உரிமையானது ஸ்திரீகளின் மேன்மைக்காகவும் யதேச்சைக்காகவும் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அவர்களின் அந்தஸ்தின் உன்னதமானது எவ்வளவு அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறதென்றும், அவர்களுடைய சௌகரியத்துக்காகவும் பாத்தியதைகளுக்காகவும் அவ்வளவு அதிகமான சிபாரிசு அளிக்கப்பட்டிருக்கிறதென்றும், இத்திருவாக்கியத்தின் ஒவ்வோர் எழுத்திலிருந்தும் மிகத்தெளிவாக விளங்கிக் கொள்வார்கள்.

இத்திருவாக்கியத்தில் காணப்படும் சட்டமானது எல்லா மனிதர்களுக்கும் பொதுவாகவே வெளியாக்கப்பட்டிருக்கிறதென்று முதல் முதலாக நீங்கள் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். ஏனெனின், ஆண்டவன் ஈண்டு எல்லா மனிதர்களையும் நோக்கித்தான் விளித்திருக்கிறான். பிறகு, இந்த எல்லா மனிதர்களும்—இவர்களுடைய ஒவ்வோர் ஆணும், ஒவ்வோர் பெண்ணும் ஒரே மூலத்திலிருந்துதான் உண்டுபண்ணப் பட்டிருக்கிறார்களென்றும் அறிவிக்கப்படுகிறார்கள்.

ஆண்கள் உண்டாக்கப்பட்ட சத்திலிருந்தே பெண்களும் உண்டு பண்ணப்பட்டிருக்கின்றார்கள். ஆதலின், ஸ்திரீகள் பலாட்டியத்தில் ஆண்களைக் காட்டிலும் சிறிது இளைத்திருப்பதனுலாவது, அல்லது ஆண்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய்ச் செய்துவந்த பயிற்சியின் காரணத்தாலும், பழக்கத்தின் காரணத்தாலும் சிலவித அம்சங்களில் பெண்களைக் காட்டிலும் மிகுந்திருப்பதனுலாவது, யாதொரு பெண்மணியும் தன்னுடைய பலஹீனத்தைக்கண்டு அவமானப்படத் தேவையில்லை. யாதோர் ஆண்மகனும் தன்னுடைய பலாட்டியத்தையும் முயற்சியையுங்கொண்டு பெருமை பாராட்டிக் கொள்ளவும் அவசியமில்லை. ஆண் பெண் இருபாலாரின் சத்தும் (நப்ஸும்) ஒன்றாகவே யிருக்கிறதென்று ஆண்டவனே கூறியிருக்கிறன். ஆதலின், இவ்விருபாலாருக்கிடையில் காணப்படும் மேன்மையும் தாழ்மையும் சிருஷ்டியிலேயே உண்டாயிருக்கக் காரணமில்லை. ஆண்களிடம் காணப்படும் ஆண்தன்மையும், பெண்களிடம் காணப்படும் பெண் தன்மையும், பிற்காலத்தில் ஏற்பட்ட அலக்ஷிய புத்தியாலோ, பயிற்சி யின்மையாலோ நேரிட்டிருக்கலாம். ஆனல் ஆண்டவனுடைய பார்வையில் இருவரும் ஒரேவிதமாகவே காணப்படுகின்றனர். தாங்கள் இவ்வாறு படைக்கப்பட்டிருக்கும் சமத்துவத் தன்மைக்காகத் தங்களுடைய நாயனை இவ்விரு பாலாரும் ஸ்தோத்தரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். இந்தத் திருவாக்கியத்தில், ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுப்படையாக உபயோகிக்கப்படக்கூடிய நப்ஸ் (சத்து) என்னும் பதம் ஆண்டவனல் உபயோகிக்கப்பட்டிருப்பதை நன்கு நோட்டமிட்டுப் பார்ப்பீர்களாக. இவ்வாயத்தில் குர் ஆன் ஆனது, ஆதாம் முதலில் படைக்கப்பட்டாரென்றும், பிறகுதான் ஏவாள் படைக்கப்பட்டாரென்றும், பொதுவாகச் சொல்லப்படும் ஒரு சாதாரண கதையை ஒத்துக்கொண்டதாக ஒன்றும் குறிப்பிட்டுக் கூறவில்லை. இவ்வாயத்தினல் மனித பாத்தியதைகளில் ஆணுக்குச் சமமாகவே—இல்லை, அவனைக் காட்டிலும் மேன்மைபடத்தக்க விதமாகவும் பெண்ணனவள் படைக்கப்பட்டிருக்கிறுள் என்னும் விஷயத்தைச் சொல்லத் துணியும்போது, குர் ஆன் ஷரீப் வேதமானது, பெண்ணுக்கு முன்னேதான் ஆண் படைக்கப்பட்டதென்னும் சித்தாந்தத்தை வற்புறுத்திக் கூறு

ால் மிக்க நிதானத்துடனும் அதிக புத்திசாலித்தனத்துடனும் (இப்படிப்பட்ட கோள்கையை) விலக்கியிருக்கிறது. இன்னும், அந்த ஒரே நப்ஸில் (சத்தில்) இருந்து அதன் துணைவியையும் உண்டுபண்ணியதாகக் கூறும்போதும், ஜவ்ஜ் என்னும் பதத்தை இவ்வேதமானது உபயோகித்திருப்பதையும் ஆழ்ந்து நோட்டமிடுவீர்களாக. இப்பதமும் கணவனேயாயினும் மனைவியேயாயினும் துணையாயிருப்பவரைக் குறிக்கும். ஆனால், நப்ஸ் என்னும் சொல்லானது, அரபி இலக்கணப்படி பெண்பாற்சொல் ஆனமையின், அதைப் பின்பற்றி வரும் ஜவ்ஜ் என்னும் சொல்லும், "ஜவ்ஜஹா" என்னும் சொல்லும், பெண்பாற் சொல்லாகவே உபயோகப்பட்டிருக்கின்றன. மேலும், உங்களில் இருந்தே, (அதாவது, உங்களைப் படைத்திருக்கும் அதே மாதிரியான) உங்களுக்காக ஆண்டவன் மனைவிகளைப் படைத்திருக்கிறான்"

என்பதாம். 16 : 72ல் உள்ள குர் ஆன் வாக்கியமாகும்.

"பிறகு குர் ஆன் ஷரீபானது, அந்த 4 : 1-வது ஆயத்தில், அந்த ஆதி ஜோடியிலிருந்து எல்லா ஆண்களும் பெண்களும் பரவச் செய்யப்பட்டார்கள் என்றும் கூறுகின்றது. இவ்வாறு மனித வர்க்கமுழுதும் தன்னுடைய அபிவிருத்திக்காக ஆண் பெண் ஆகிய இருபாலாரிடத்துமே சமமாகச் சார்ந்திருக்கிறதென்னும் விஷயமானது, மனிதர்கள் ஸ்திரீகளை உரிமையற்ற தாழ்ந்த பிராணிகளென்றும், அசுத்தமுள்ளவர்களென்றும் (வியபிசார தோஷமுள்ளவர்களென்றும்,) ஆடவரின் மோக தாபத்தையும், வம்சவிருத்தி வேண்டுமென்னும் அவர்களுடையை ஆசையையும் தனிப்பதற்காக வந்த ஒரு வெறும் யந்திரமென்றும் எண்ணி, அலட்சியமாக நடத்துவது கூடாதென்னும் எண்ணத்தை, எல்லோருடைய மனத்தின் கண்ணும் ஊன்றுவதற்காகவே, அதிக ஸ்பஷ்டமாக விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆண்களும் பெண்களும் ஒரேவிதமான மூலத்திலிருந்து தோன்றியிருக்கிறார்கள் என்பதை மட்டும் கூறியதோடு நில்லாமல், மனிதவர்க்கம் இவ்வுலகில் பரவுவதற்கு இவ்விரு தாத்தாரும் சமமாகவே வேண்டப்படுகிறார்களென்றும் இத்திரு வாக்கியமானது வற்புறுத்திக் கூறுகின்றது. ஆதலின், ஸ்திரீயை

அசுத்தமுள்ளவளென்போமாயின், புருஷனும் அவ்வாறே அசுத்த முள்ளவன் ஆகிறான். ஸ்திரீயானவள் ஒரு விக்கிரகத்தையேனும் ஒரு பலி பீடத்தையேனும் தொடக்கூடாதென்போமாயின், புருஷ னும் இவ்வாறே தொடாமலிருத்தல் வேண்டும். இன்னும் மோகத் தைத் தணிக்கும் ஓர் யந்திரமென்று கருதுவோமாயின், புருஷர்களை யும் இப்படித்தான் கருதும்படியான அவசியம் நேரும்.

"மேற்கூறியவாறு முஸ்லீம், ஆண் பெண்களின் சமத்து வத்தை விளக்கிக் காட்டிய பின்னர், குர் ஆன் ஷரீபானது பின் வருமாறு அவ்விருவருக்கும் கட்டளையிடுகின்றது. ஆண்டவ னுடைய அருளைக்கொண்டு ஆடவரும் பெண்டிரும் ஒருவர் உத வியை மற்றொருவர் நாடும்படியாகவும், ஒருவருடைய தயையை வேறொருவர் விரும்பும்படியாகவும், அவரவருடைய சுதந்தரங்களை ஒவ்வொருவரும் பரஸ்பரம் காப்பாற்றி வைக்கும்படியாகவும் அனுக்கிரகம் செய்து வைத்ததற்காக கடவுளுக்கு, ஸ்திரீ புருஷ ராகிய அவ்விருவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். இதைக்குறித்துப் பேசும் ஆயத்தின் பகுதியானது, ஆண் பெண் களுக்கிடையில், கணவன் மனைவியாகவோ, சகோதரியாகவோ, தாயும் பிள்ளையுமாகவோ, அல்லது வேறுவிதமான உறவின் முறை யாகவோ ஒழுகக்கூடிய, அன்னியோன்னிய அன்பையும் அபிமானத் தையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றது. ஆண்டவனே இப்படிப் பட்ட நேசத்தையும் விசுவாசத்தையும் நம்முடைய மனத்தின் கண் நிறப்பி வைத்திருக்கிறான். எனவே, அவனுடைய அருளைக் கொண்டுதான் நாம் நம்முடைய அன்பையும் அபிமானத்தையும் அபிவிருத்தி செய்து கொள்ளுகிறோம். இதனால் நாம் அவன்பால் சிர வணக்கத்தையும், பெரும் மரியாதையையும், முழு நன்றி பாராட் டலையும் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு குர் ஆன் கூறியிருப் பதனால், ஆண் பெண்களுக் கிடையில் விளையக்கூடிய பரஸ்பர அன் பும் அபிமானமும் இத்தன்மைத் தானவையென்று நன்கு தெரிந்து கொள்ளுகிறோம். நாம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அவ் விலைமதிக்க வொண்ணாத அன்பு என்பதன் ஆழமான பொருளையும், அரிய பெருமையையும் ஒருவாறு அறிந்துகொண்டால் அல்லாமல், நம்முடைய மனத்துக்குள் அப்படிப்பட்ட அபிமானத்தை நிரப்பி

வைத்திருக்கும் ஆண்டவனுடைய பெருமையை ஒருபோதும் உணர்ந்துகொள்ள முடியாது. எனவே, ஆடவரும் பெண்டிரும் தங்களுக்குள் பரஸ்பரம் உதிக்கக்கூடிய அன்பையும் அபிமானத்தையும் ஆழமாக அறிந்துகொண்டு, அவற்றை நமக்கெல்லாம் கொடுத்தருளிக் காத்து ரக்ஷிக்கும் ஆண்டவனுக்கும் நம்முடைய மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று குர் ஆன் வேதம் கட்டளையிடுகின்றது. இதனால் நாம் வெளிப்படையாகத் தெரிந்து கொள்வது யாதெனில், பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் மற்றும் சிற்சில மத சந்நியாசிகளும் நினைத்திருப்பதேபோல், ஸ்திரீ புருஷர்களுக்கிடையில் உண்டாகும் அன்னியோன்னிய அன்பும் அபிமானமும் பரிசுத்தக் குறைவான உணர்ச்சிகள் அல்ல என்றும், ஆனால் அதற்கு மாறாக நாம் ஆடவரும் பெண்டிரும் ஒருவரோடொருவர் ஒழுகிவர வேண்டிய ஒழுக்கக் கடமைகளை மட்டும் நன்குணர்ந்துகொண்டு, அவற்றின் பிரகாரம் நல்லெண்ணத்துடன் நடந்து வருவோமாயின், அப்படிப்பட்ட அன்பும் அபிமானமுமே நம்முடைய மனத்தூய்மையை இன்னும் நன்றாகப் பரிசுத்தம் செய்து, ஆண்டவனின் மீது அழகான நம்பிக்கையுங்கொண்டு, அவனுக்கே மிக மரியாதையுடன் சிரவணக்கம் புரிந்து, அதற்குரிய நன்றி பாராட்டலில் ஈடுபட்டிருக்கும்படியாகச் செய்துவிடுகிறதென்றும், செவ்வனே அறிந்துகொள்ள வேண்டுமென்பதுதான்.............”

மேற்கூறிய **4 : 1**-வது வாக்கியத்தில் உதிர சம்பந்தமான உறவினரைக் குறிக்குமிடத்தில் ‘அர்ஹாம்’ என்னும் பதமானது உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. இதன் நேர் பொருளானது, “கர்ப்பாசயங்கள்” அல்லது “கருக்கூடுமிடங்கள்” என்பதாகும். எனவே, இந்த “அர்ஹாம்” என்னும் அரபுப்பதமானது, மிக மிக ஆழமான கருத்துக்களையெல்லாம் தோற்றுவிக்கின்றது. ஆதலின், அந்த வாக்கியத்தின் இந்தப் பகுதியானது,

> “மேலும் கர்ப்பாசய சம்பந்த மானவர்களைக் குறித்தும் ஜாக்கிரதையாயிருங்கள்”

என்று பொருள்படுத்துகின்றது. இந்த "அர்ஹாம்" என்னும் சொல்லுக்குப் பற்பல விதமான பொருள்கள் சொல்வதுண்டு. ஆயினும், இதன் சார்பாக கவனிக்கவேண்டிய சிற்சில வகையான முக்கிய அம்சங்களுமுண்டு. முதலாவதாக, குர் ஆனுக்கு, முன் வேறெந்த மதபோதகர்களும், ஆசார சீர்திருத்தக்காரர்களும், சமூகத்தலைவர்களும், வேத விற்பன்னர்களும் மற்றெவரும், இவ் வேதத்தில் கூறியதே போல், கர்ப்பாசய சம்பந்தமான உறவுகளைக் கௌரவிக்கும்படியான, அத்தனை சிலாக்கியமுள்ள கட்டளையைக் கொடுத்துச் செல்லவில்லை. இவ்வாறிருக்கும்போது, நபிகள் திலகமாகிய முகமத் (ஸல்) அவர்கள், இவ்வளவு மதிப்பு வாய்ந்த கட்டளையைக்கொண்டு வந்திருப்பதே, அவர்களுடைய மகோன்னதமான உயர்வையும் ஊக்கத்தையும் காட்டுகின்றது. அவர்களுக்கு முன் பெண் குழந்தைகளோ உயிருடன் புதைக்கப்பட்டு வந்தன. ஸ்திரீ ஜாதிகளோ ஆடு மாடுகளைப்போல் கருதப்பட்டு வந்தார்கள். ஆனால், குர் ஆன் வெளிப்பட நேர்ந்த காலத்துக்குப்பின், மாதர்கள் மனிதப் பிராணிகளேபோல் ஆக்கப்பட்டதில் ஒன்றும் அதிசயமில்லை. அவர் அந்தஸ்தில் ஆடவருக்குச் சமமாக உயர்த்தப்பட்டதிலும் அத்தனை பெருமையில்லை. ஆனால், ஸ்திரீ ஜாதியினர் புருஷ ஜாதியினரால் கௌரவிக்கப்பட வேண்டுமென்றும், அன்னவரால் பெண்மணிகள் அன்புடன் பராமரிக்கப்பட வேண்டுமென்றும், எல்லாமனிதர்களுக்கு முன்னிலையிலும் இவ்வேதக்கட்டளையானது பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டதிலே தான், எல்லாவிதமான மகிமையும் பொதிந்திருக்கிறது.

இம்மட்டோடு இவ்வேதம் நிற்கவில்லை. ஆண்டவனுடைய விஷயத்தில் நாம் அபசாரம் செய்துவிடாமல் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று, அத் 4: 1-வது வாக்கியத்தில் காணப்படும் "தகவா" என்னும் சொல்லானது குறிப்பிடுகின்றதோ அதே சொல்தான், கர்ப்பாசயங்களின் சார்பாகவும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஆண்டவன் நமக்கு விதித்திருக்கும் கடமைகளை நிறைவேற்றுவதில், நாம் எவ்வளவு

> அச்சப்பாட்டுடனும் சர்வ ஜாக்கிரதையுடனும் மரியாதையுடனும் ஒழுகுதல் வேண்டுமோ அவ்வாறே, கர்ப்பாசயங்கள் சார்பான கடமைகளிலும் அதிக ஜாக்கிரதையுடனும், பயபக்தியுடனும், மிக மரியாதையுடனும் ஒழுகி வருதல் வேண்டும். அதாவது, ஆண்டவனுக்கு அடுத்தாற்போல் கர்ப்பாசயங்களை வைத்திருப்பதினால், ஸ்திரீகளுக்குண்டாகும் மேன்மையைக் காட்டிலும் மற்றோர் உயர்வு அன்னாருக்குக் கிட்டுதல் கூடுமா?

இதைக் காட்டிலும் வேறு என்ன உயர்பதவி அவர்களுக்கு அளிக்கப்பட்டிருத்தல் கூடும்? இக்காலத்திலேனும், இனிவரும் பிற்காலத்திலேனும் இதைக்காட்டிலும் மேலானபதவி அவர்களுக்கு என்ன இருத்தல் முடியும்? குர் ஆன் ஷரீபானது, ஒரே வாக்கியத்தில், கடவுளுக்கும் ஸ்திரீகளுக்கும் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றி ஒரேவிதமாகக் கூறியிருக்கிறது. என்னே ஆச்சரியம்!......"

"ஆண்டவனிடத்தில் காட்டும் ஜாக்கிரதையையே மாதர்களிடத்தும் காட்டுதல் வேண்டும். ஆண்டவன் எல்லா வஸ்துக்களின் சிருஷ்டி கர்த்தாவாயிருக்கின்றான். ஆனால், பெண்பிள்ளையோ ஒவ்வோர் ஆண்பிள்ளையையும் உலகத்தில் தோற்றுவிக்கக்கூடிய—உண்டாக்கக்கூடிய அன்னையாயிருக்கிறாள். ஆண்டவனின் சிருஷ்டியும் அன்னையின் கர்ப்பாசயத்தின் வழியேதான் வெளித்தோன்றுகின்றது. எப்படிப்பட்ட மன்னாதி மன்னர்களும் தீர்க்கதரிசிகளும் அங்கிருந்தே ஜனிக்கின்றனர். இக்காரணத்தினால் தான், ஆண்டவன், தன்பால் காட்டும் ஜாக்கிரதையே போன்ற சர்வ ஜாக்கிரதையைப் பெண்பாலரிடத்தும் அவசியம் காட்டுதல் வேண்டுமென்று சட்டம் பிறப்பித்துள்ளான். இதைக்காட்டிலும் மகோன்னத நிலைமை வேறென்ன இருக்கின்றது.

"இவ்வாக்கியத்தின் சார்பாகப் பேசும்போது, நாம் மற்றொரு விஷயத்தையும் மறந்துவிடுதல் கூடாது. இந்த 4 : 1 வாக்கியத்தில் "மாதர்கள்" என்று சொல்லாமல், "அர்ஹாம்" (கர்ப்பாசயங்கள்)

என்னும் பதத்தை ஆண்டவன் வேண்டுமென்றே உபயோகித்திருக்கிறான். இதனால் கொள்ளப்படும் கருத்து யாதெனில், ஸ்திரீகளெல்லோரும் கர்ப்பாசயத்துக்குரிய தாய்மார்களாய் இருத்தலினால், அன்னவரின் கௌரவத்தையும், கண்ணியத்தையும், மகாபரிசுத்தமுள்ள சிரேஷ்டமான விஷயங்களாகக் கருதவேண்டுமென்பதுதான். இந்த அரபிச் சொல்லானது, அவ்வளவு அர்த்தபுஷ்டியுள்ளதாகக் காணப்படுகின்றது.

> மாதர்களை வேறு காரணத்தின் நிமித்தம் மரியாதையுடன் நடத்தாமற் போயினும், அவர்கள் மனித கோடிகளின் (பெற்ற) தாயாராயிருந்துவரும் ஒரே காரணத்தின் நிமித்தமாகவேனும், அன்னாரை நம் சிரமேற்கொண்டு அன்புடன் ஆதரித்து வரவேண்டாமா?

தாயார் தம்முடைய மக்களை ஈனும் பொருட்டு அதற்கு முன்னும் பின்னும் எடுத்துக் கொள்ளும் சிரமத்துக்காகவும், பட்டுவரும் பாட்டுக்காக—பாடுகளுக்காக—சிரமங்களுக்காகவும் நாம் நம்முடைய அன்னைமாருக்கு என்னதான் நன்றி செய்தபோதிலும் போதிய கைம்மாறாகி விட்டதென்று யாரே கூறத் துணிவர்......"

விரிவை அஞ்சி குறுக்கி விட்டேன். "அந்நிஸா (ஸ்திரீ)" அத்தியாயத்தில் 1-வது வாக்கியமே, ஸ்திரீகளுக்கு எப்படிப்பட்ட மகோன்னத நிலையை இஸ்லாம் மார்க்கம் கொடுத்திருக்கின்றது என்பதை நிரூபிக்கப் போதுமானதாயிருப்பினும், அதை உறுதிப்படுத்த இன்னும் சில வாக்கியங்களைக் குறிப்பிடுவோம்.

ஸ்திரீகளைப் பாதித்து வந்த எல்லாக் கொடிய வழக்கங்களும், இஸ்லாத்தினால் தான் அடியோடு ஒழிக்கப்பட்டனவென்று மிக நிச்சயமாய்ச் சொல்லலாம். புருஷர்கள் ஸ்திரீகளைவிடத் தேக வலிமை பெற்றவர்களாயிருந்தும், பெரும் பெரும் காரியங்களைச் செய்யக் கூடியவர்களாயிருந்தும், ஸ்திரீகளைவிட அநேக இயற்கை மேம்பாடுகளைப் புருஷர்கள் உடையவர்களாயிருந்தும், மனிதவர்க்கத்தின் எல்லா உரிமைகளும், சகல பாத்தியதைகளும், ஆண்

பெண் இருதிறத்தினருக்கும் பொதுவென்றே இஸ்லாம் அதிக தைரியமாகப் போதித்தது—போதிக்கிறது.

> "அவர்கள்மீது (ஸ்திரீகளின் மேல்) புருஷர்களுக்கு என்னென்ன விதமான உரிமைகள் உண்டோ அவைகள் எல்லாம், ஸ்திரீகளுக்கும் நியாயமான முறையில் புருஷர்கள்மீது உண்டு. புருஷர்கள் சம்பாதிப்பதின் பிரயோஜனம் புருஷர்களுக்கு. ஸ்திரீகள் சம்பாதிப்பதின் பிரயோஜனம் ஸ்திரீகளுக்கு"
>
> (குர் ஆன் 4 : 3.)

என்று வெள்ளையாகச் சொல்லிவிட்டு, அதை ஓர் அழகான உவமானத்தால் ஸ்திரிபுருஷ சமத்துவநிலையை நன்கு உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது.

> "நீங்கள் அவர்களுக்கு (ஸ்திரீகளுக்கு) ஆடையாயிருக்கிறீர்கள். அவர்களும் உங்களுக்கு (புருஷர்களுக்கு) ஆடையாயிருக்கிறார்கள்.
>
> (குர் ஆன் 2-18.)

ஒருவனுடைய நிர்வாணத்தை (விகாரத்தை) யும் அங்கஹீனங்களையும், அவனுடைய உடுப்புகள் எப்படி மறைத்து நிற்கின்றனவோ அவ்வாறே, பரஸ்பரம் புருஷனும் மனைவியும், புருஷனுக்கு மனைவி உடுப்பாகவும், மனைவிக்குப் புருஷன் உடுப்பாகவும் இருந்துகொண்டு, இருவரிடையிலும் உள்ள மர்மங்களையும் விகாரங்களையும் மறைத்துக்கொள்ள வேண்டுமென்று குர் ஆன் போதிக்கின்றது. மேலும், நமது வஸ்திரங்கள் நமக்கு எப்படி சௌகரியங்களைக் கொடுக்கின்றனவோ அப்படியே, பரஸ்பரம் மனைவி புருஷர்கள் கலந்து சந்தோஷமடைய வேண்டுமென்றும் இவ்வத்தியாயம் கூறுகின்றது. மேலும், உடையானது கௌரவத்தையும் அழகையும் அந்தஸ்தையும் எப்படி அளிக்கின்றதோ அப்படியே, மனைவி புருஷனுக்கும், புருஷன் மனைவிக்குமாக கௌரவத்தையும் அழகையும் அந்தஸ்தையும் கொடுத்துக்கொள்ளக் கட்டளையிடுகின்றது. இதனால், மனைவியின்றி புருஷன் பூரணமாக முடியாதென்று விளங்கு

கின்றது. இருவரும் கலந்தாலே, சந்தோஷமும் மற்ற எதுவும் ஆகும் என்று இவ்வாக்கியம் கூறுகின்றது. இவ்வாக்கியம் எவ்வளவு அழகானதாயிருக்கின்றதென்பதைக் கவனித்துப் பாருங்கள்!

ஆண் பெண்களுக்கிடையில் இஸ்லாம், அவர்கள் செய்யவேண்டிய கடமைகளிலாகட்டும், அதற்காக அவர்களுக்கு அளிக்கப்படும் சன்மானங்களிலாகட்டும், கிஞ்சிற்றும் பக்ஷபாதத்தையோ வேறுபாட்டையோ காட்டவில்லை. இதற்காக,

> "ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும், நற்காரியங்களைச் செய்கின்றவர் எவரோ அவர், நன்னம்பிக்கை கொண்டவராயிருக்கின்ற அவர், (ஆணேயாயினும் பெண்ணேயாயினும்) எல்லோரும் சுவர்க்கத்துக்குள் நுழைவார்கள்." (குர் ஆன் 4.124.)

> சரியான காரியத்தைச் செய்யும் ஒருவர், ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும், நாம் அவரைச் சந்துஷ்டியான வாழ்க்கையின் பக்கம் துரிதப்படுத்துவோம்." (குர் ஆன்.)

> "நேரான காரியங்களைச் செய்பவரும், (அவர் ஆணே ஆயினும் பெண்ணே ஆயினும்) நன்னம்பிக்கை கொண்டவரும், அவர் ஆணேயாயினும் பெண்ணே ஆயினும்) எல்லோரும் சுவர்க்கத்துக்குள் நுழைவார்கள்."

> "நன்னம்பிக்கை கொண்ட ஆடவரும், நன்னம்பிக்கை கொண்ட பெண்டிருமாகிய அவர்களுடைய பிரகாசமானது, அவர்களுக்கு முன்னே செல்லும் போதும், அவர்களுடைய வலப்பக்கத்தில் சாந்தியும் சமாதானமும் செல்லும்போதும், அவர்களை நீர் காணக்கூடிய ஒருநாள், அந்நாளில் உங்களுக்கு சுபசோபனம் உண்டாகும். நீர்ச்சுனைகள் கீழே ஓடு

கின்ற உய்யானங்கள் கிடைக்கும், அங்கே என்றென்றும் நிலைத்திருப்பீர்கள்." (குர் ஆன்.)

சாந்தி நிகேதனமும், சந்துஷ்டி ஆசிரமமுமாகிய சுவர்க்கத்தில் நுழையும்படியான நற்காரியங்களைச் செய்து, சுவர்க்கசன்மானம் பெற்றவர்களை விழித்து, கடவுள், "நீங்களும் உங்கள் மனைவிமார்களும் சுவர்க்கத்துக்குள் நுழைந்து சந்தோஷமாயிருங்கள்" என்று கருணையுடன் கூறுகின்றான்.

மேலும், ஆண்டவன், விபரமாகவும் திருத்தமாகவும், ஆண் பெண் இருபாலாரின் சமத்துவத்தை, அடியிற்காணுமாறு குர் ஆன் 33 : 35ல் கூறுகின்றான்.

நிச்சயமாகவே (ஆண்டவனை) வழிபடுகின்ற ஆடவரும் பெண்டிரும், ஆண்டவனிடம் நம்பிக்கை கொண்டுள்ள ஆடவரும் பெண்டிரும், ஆண்டவனுக்குக் கீழ்ப்படிகின்ற ஆடவரும் பெண்டிரும், ஆண்டவனுக்கு உண்மையாளராகிய ஆடவரும் பெண்டிரும், பொறுமையைக் கடைப்பிடிக்கும் ஆடவரும் பெண்டிரும், பணிவுள்ள ஆடவரும் பெண்டிரும், இரப்போர்க்கு ஈயும் ஆடவரும் பெண்டிரும், நோன்பை நோற்கின்ற ஆடவரும் பெண்டிரும், தங்களுடைய மர்மஸ்தானங்களைக் காத்துக் கொள்ளுகின்ற ஆடவரும் பெண்டிரும், ஆண்டவனை அதிகம் நினைக்கின்ற ஆடவரும் பெண்டிரும் ஆகிய இவர்களுக்கெல்லாம் ஆண்டவன் மன்னிப்பையும், ஒரு மகிமைவாய்ந்த சன்மானத்தையும், தயார் செய்து வைத்திருக்கின்றான்."

# நபிகள் நாயகத்தின் உபதேச ஆராய்ச்சி—2.

இதுவரை இஸ்லாமிய வேதமாகிய குர் ஆனின் நேரான கட்டளைகளைப்பற்றி ஆராய்ந்தோம். இனி, குர் ஆனின் கட்டளைகளின் படி நடந்து, உலக மனிதஜாதிக்கே முன்மாதிரியான, மேற்படி வேத வழிபாட்டை வெளிப்படுத்திய முகம்மதுநபியாகிய, பாலைவனத்து— கல்வியறிவற்ற அம்மகானுடைய உபதேசங்களை ஆராய்வோம்:—

> ஸ்திரீகளின் உரிமை தெய்வீகமானவை; ஆதலின், அவர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்படுவேதில் கவனமாயிருங்கள்.''

முன்னர் குறிப்பிட்ட, குர் ஆனின் 'ஸ்திரீ' என்னும் 4-வது அத்தியாயத்தின் 1-வது வாக்கியத்துடன், இந்நாயக வாக்கியத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்! கடவுள் விவரித்துச் சொன்னதை, அவருடைய அடியாரும் தூதரும் படிப்பற்றிருந்தும், எவ்வளவு அழகாக பொன்னே போன்று கடவுளின் நோக்கத்தைச் சுருக்கமாகச் சொல்லி, விளக்கியிருக்கின்றார் என்பதைக் கவனியுங்கள்,

> ஸ்திரீகளே உங்கள் தாய்மார்களாகவும், குமாரத்திகளாகவும், மாமிமார்களாகவும், சிறிய தாய்மார் முதலானவர்களாகவும் இருப்பதால், அவர்களை நன்ருக நடத்தி வரும்படி, ஆண்டவன் கட்டளையிட்டிருக்கின்ருன்.''

என்று ஒவ்வொரு பாமரனின் மனத்திலும் உறுத்தும்படி போதித்திருக்கின்ருர்.

> குடும்பத்திலுள்ளவர்களிடத்துச் சிறப்பாக நடந்து கொள்ளுபவனே உங்களுள் மேலானவன்.''

> ஸ்திரீகள் மனிதஜாதியின் இரட்டைப்பிறப்பில் ஒரு பாதியாவார்.''

"தமது மனைவிகளை அடிக்கும் கணவர்கள், சரியான முறையில் நடப்பவர்கள் அல்லர். ஒரு ஸ்திரீயை நற்பாதையினின்றும் விலகும்படி செய்பவன், என்னைப் பின்பற்றுபவனல்லன்."

"தனது குடும்பத்தினரால், எவனுடைய நடவடிக்கைகள் மிகுதியும் விரும்பப்படுகின்றனவோ, அவனே முஸ்லீம்களுள் சிரேஷ்டமானவன்."

"எவனுடைய குணங்கள் சிறந்தவைகளோ, அவனே முஸ்லீம்களுள் சிறந்தவன்; அப்படிப்பட்டவர்களுள் சிறந்தவர்கள், தங்கள் மனைவியரிடம் மிக நேர்மையாக நடந்துகொள்ளுகிறவர்கள்."

"உங்கள் ஸ்திரீகள் மஸ்ஜிதுக்கு வருவதைத் தடுக்காதீர்கள்."

*(இப்பொழுது இந்தியாவில் முஸ்லீம் ஸ்திரீகள் மஸ்ஜீதென்னும் முஸ்லீம் கோயில்களுக்குப் போவதில்லை. ஏன் என்பதைப் பற்றி இப்பொழுது ஆராயவில்லை.)*

"பிச்சையளிப்பதைக் காட்டினும், தன் மனைவி கேட்கும் பணத்தைக் கொடுப்பதே மிகவும் முக்கியமானதாகும்.

*என்று எச்சரித்துவிட்டு,*

"ஒருமனிதன் மதப்போருக்காக (ஒரு தினாரும்), ஓர் அடிமையை விடுவிக்க மற்றொன்றும், தர்மத்திற்காக மூன்றாவதும், தன் மனைவிக்கு நான்காவது தினாரும் கொடுத்திருப்பதாக வைத்துக் கொண்டு பார்த்தால், நான்காவதாகக் கொடுத்ததே மற்றெல்லாவற்றினும் அதிக யோக்கியதை உள்ளதாகும்."

**என்று சொல்லி, புருஷன் மனைவியின் உரிமையை எப்படிக் காக்க வேண்டும் என்பதை, எவ்வளவு ஆணித்தரமாகக் கூறப்பட்டிருக்கிறதென்று கவனியுங்கள்!**

"மனிதன் ஒன்றையும்—அதிலும், நல்லதான ஒன்றையும் தன் மனைவியுடன் பகிர்ந்து கொள்ளாமல், தானே புசித்துவிடக் கூடாது."

"கணவனும் மனைவியும் சேர்ந்து, தங்கள் ஆகாரத்தைப் புசிக்கும்போது, ஆண்டவன் அவர்களை ஆசீர்வதிக்கின்றான்; தேவதூதர்கள் அவர்களுக்காகப் பிரார்த்தனை புரிகிறார்கள்."

மேலும் அவர் கூறியதாவது :—

"உங்களுடைய உபகாரத்தில், எனக்குப் பிரியமாயிருப்பன மூன்று வஸ்துக்களாயிருக்கின்றன; வாசனைத் திரவியங்களும், ஸ்திரீ ரத்தினங்களும் அவற்றுள் இரண்டாயிருக்கும்; ஆனால், என்னுடைய மனத்துக்கு மகிழ்ச்சியை அளிக்கக் கூடியது தொழுகையாயிருக்கிறது."

இந்த வாக்கியமும், குர் ஆனின் 4 : 1-வது வாக்கியத்தின் கருத்தையேகொண்டு விளங்குகின்றது. அங்கே ஆண்டவன், எப்படி தன் படைப்புகள், தனக்கு நன்றி செலுத்துவதில் ஜாக்கிரதையா யிருக்கச்சொல்லி, அவ்வெச்சரிக்கையுடன், கர்ப்பாசயங்களையுடைய ஸ்திரீ ஜாதியினரின் உரிமைகளைப்பற்றியும், ஆண் ஜாதியினரை எச்சரித்ததையும் ஒப்பு நோக்கின், அவ்வாண்டவனின் அடியாரும் தூதனுமாகிய அவ்வரபியமகான், அருளாளனும் அன்புடையோனுமாகிய ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவதற்கு இரண்டாவதாக, தான் பிரியப்படுவது ஸ்திரீரத்தினமென்று கூறிப் போயிருக்கின்றார்.

1350-வருஷங்களுக்கு முன், அதாவது, முகம்மது நபிகள் நாயகம் பிறந்த காலத்தே, அவருடைய நாடாகிய அராபியநாட்டிலும், ஏனைய இதர தேசங்களிலும், பெண் ஜாதியினரை ஆண் ஜாதியினர் எப்படி நடத்தி வந்தார்கள் என்பதை விவரிப்பதானால், அது ஒரு பெரிய நூலாக ஆகும். மிகவும் கேவலமான உயிர்ப்பிராணி

களில் ஒன்றேபோலும், தடைப்பழம் தட்டுமுட்டு சாமான்களும் போலும் கருதப்பட்டு வந்தார்களென்று நேரிற் பார்க்காவிட்டாலும், அக்காலச் சரித்திரங்களை ஆராயாவிட்டாலும் தைரியமாக நம்பலாம். எப்படியெனின், அக்காலத்தே புராதீனமாகவும், செல்வாக்குள்ள தாகவும், அதிகாரம் படைத்ததாகவும் உலகத்தில் விளங்கிய மதங்கள், பண்டைக்கால இந்துமதமும், இரண்டாவதாக மோசேயின் மதமும், இயேசு கிறிஸ்துவருடைய மதமுமேயாகும். இம்மதங்களோ, ஸ்திரீஜாதியினரை எப்படி நடத்தும்படி ஆண் ஜாதியினருக்கு ஆக்ஞையிட்டிருக்கின்றதென்பதை, முன் பக்கங்களில் ஆதாரங்களுடன் தெரிந்துகொண்டிருக்கின்றோம். பக்தரும், தம் மதத்தின் இழிவான கட்டளைகளைக் கண்டித்துக்கூற ஆரம்பிக்கையில் கூறியதுபோல், "பழத்தைப் பார்த்து மரத்தைத் தெரிந்துகொள்" ள வேண்டும். மதக்கட்டளைக்குச் சரியாக, இன்னும் மேலாக, ஆண் ஜாதியினர் பெண்ஜாதியினரை—இந்துக்கள்

> "பேய்யைப்போன்ற அசுத்தர்கள்போலும், விபசாரிகளைப்போலும், அடிமைகளைபோலும்,"

கிறிஸ்தவர்களும் யூதர்களும்,

> பிசாசைப்போலவும், படுபாபியைப்போலவும் ஒரு உயிருள்ள—ஆனல், யோக்கியதையற்ற பிராணியே போலும்"

தம்தம் மதக்கட்டளைகளின்படி நடத்தி வந்திருக்கின்றார்கள்.

இப்படித் தம் மனைவிமார்களையும், அன்னைமார்களையும், குமாரத்திகளையும், சகோதரிகளையும் நடத்தி வந்ததனுல் அவர்கள் குற்றமிழைப்பதாக நினைக்க இடமில்லை. ஏனென்றுல் தங்கள் தங்கள் வேதக்கட்டளைகளை நிறைவேற்றினர்களேயொழிய, அதற்கு விரோதமாக நடந்துகொள்ளவில்லை. அவர்களை நாமும் குற்றமிழைத்ததாகக் கூற வரவில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், பிறப்பதற்கு முன்னே தந்தையை இழந்து, பிறந்தவுடன் தாயை இழந்த அநாதையான—ஒட்டகம் மேய்த்து வளர்ந்த—அந்தப் பாலைவனத்து

ரிஷி, தன் ஆயுள் காலத்திலேயே, இனி எவரும் கவலைப்படா வண்ணம், அவ்வளவு உயர்ந்த நிலையைப் பெண்களுக்கு அளித்துவிட்டுப் போயிருக்கின்றார்.

அவர் பிறந்த காலத்தில் அவ்வராபிய சமூகத்தினர்—முகம்மது நபியவர்களின் சமூகத்தினர், பெண் பிள்ளைகள் பிறந்தவுடன் உயிருடன் புதைத்து வந்தார்கள். இயலாதுபோனால் அவர்களை அநாதைகளாக விட்டுவிடுவார்கள். பெண் குழந்தைப் பிறவியை ஒரு அபசகுனமாகவும், அவர்களால் இழிவும் அழிவும் உண்டாவதாகவும் கருதி, அவர்கள் அவ்விதம் பெண் சிசுஹத்தியை ஒரு சாதாரண செய்கையாகக் கொண்டிருந்தனர். இக்கொலைபாதகத் தொழிலிலிருந்து, அவ்வராபிய காட்டாள்களைச் சில வருஷங்களுக்குள் மாற்றி உன்னதநாகரீகம் படைத்த ஒரு மாபெரும் சமூகத்தினராகச் செய்து விட்டார்கள்.

> "எவரொருவருக்கு ஒரு பெண் குழந்தையிருந்து, அதை அவர் உயிருடன் புதைக்காமலும், திட்டாமலும், மற்றக் குழந்தைகளுடன் பக்ஷபாதம் பாராட்டாமலும் நடத்துகின்றாரோ அவரை ஆண்டவன் 'பிர்தௌஸ்' என்னும் சுவர்க்கத்துக்குள் புகுத்தி வைப்பான்."

என்று உபதேசித்துள்ளார்கள்.

மேலும், புருஷன் தன் மனைவிகளை அற்பகாரணங்களுக்கென்று—தங்களுக்குப் பரஸ்திரீகள்மீதுண்டான வாஞ்சையாலும், விவாக விலக்கு செய்து விடுவதும் அக்காலத்தில் வழக்கமாயிருந்தது. அப்படி விலக்கப்பட்டவளை அவளுடைய தந்தை ஏற்றுக் கொண்டு பராமரிப்பது கிடையாது. அதைக் கண்டனம் செய்து,

> "சற்குணங்களிலெல்லாம் மேலான நற்குணமொன்றை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டாமா? உம்முடைய மகளை அவளுடைய புருஷன் விவாக விலக்குச் சொல்லி உம்முடைய வீட்டுக்குத்

திருப்பி அனுப்பிவிடும்போது, அந்தக் குமாரிக்கு நீங்கள் நன்மைசெய்து உதவி புரிவதுதான் ''

என்று உபதேசித்து அவர்களை நல்வழிப்படுத்தி, காருண்ய முள்ளவர்களாக மாற்றியிருக்கின்றார்கள். மேலும்,

“மூன்று சகோதரிகளையாவது, அல்லது மூன்று புத்திரிகளையாவது, எவரொருவர் விசுவாசித்து, அவர்களுக்கு வேண்டிய நன்னடக்கைகளையும் கற்றுக்கொடுத்து, அவர்கள் பருவமடையுமட்டும் பக்ஷம் பாராட்டுகிறாரோ அவருக்கு, ஆண்டவன் சுவர்க்கானந்தத்தை சுகாநுபவமாகச் செய்துவைப்பானாக.''

என்றும்;

“விதவைகளுக்கும் ஏழைகளுக்கும் உண்டியளிப்போர், அல்லா(ஹ்)வின் பாதையில் அரிய தர்மம் செய்வோரையும், அல்லும்பகலும் அவனையே வணங்குவோரையும், அடிக்கடி அவனுக்காக நோற்போரையும் ஒத்திருக்கிறார் ''

என்றும்;

“ஒருவன் பெண் சிறுமிகளுக்கு உபகாரம் செய்வானாயின், அவனுக்கு அஃதொரு நரகத்தின் தீயைக் காக்கக்கூடிய திரையாயிருக்கிறது ''

என்றும்;

“பருவமடையும் காலம் வரையில், இரண்டு சிறுமிகளை வைத்து ஆதரிக்கிறவன் எவனோ அவன், மறுவுலக வாழ்க்கையில் என்னுடைய இரண்டு விரல்களைப்போல், என்னுடன் சேர்ந்திருப்பான் ''

என்றும் போதித்திருப்பதிலிருந்து, பெண்களின் உரிமையைப் பாதுகாக்க, இஸ்லாம் எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பதென்பது விளங்கும்.

"தன் மனைவியின் கெட்ட சுபாவத்தைப் பொறுத்துக்கொண்டிருப்பவன், தம்முடைய கஷ்டங்களைப் பொறுமையுடன் சகித்துவந்த ஜாபுப் அடைந்த பெருமையையே அடைவான்"

என்ற கட்டளையை, மனுதர்ம நூலில்உள்ள,

"சண்டையிடுபவளை உடனே தள்ளிவிட வேண்டும்"

என்ற கட்டளையுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். மேலும் கூறுவதாவது:—

"தன்னுடைய மனைவியையும் மக்களையும் கைவிட்டு விடுபவன், ஓடிப்போகும் அடிமையை ஒத்தவன்; அவன் அவர்களை மறுபடியும் சாரும்வரை, அவனுடைய தொழுகைகளும் நோன்புகளும் ஆண்டவனால் அங்கீகரிக்கப்படமாட்டா"

கடவுள் தன் வேதத்தில், தொழுகை, நோன்பு, நற்காரியம் முதலியவைகளின் பெருமையையும், அதற்குண்டான சன்மானங்களையும் பன்னிப் பன்னிச் சொல்லியிருந்தும், தன் மனைவிமக்களை விட்டுவிடுபவனுடைய நோன்பும், தொழுகையும் பயன்படாதென்றால், ஸ்திரீகளின் உரிமை எப்படி தெய்விகமாக்கப்பட்டிருக்கின்றன என்பது விளங்கும்.

தன் இறுதிநாளை எதிர்பார்த்துத் தன் சிஷ்யகோடிகளை விளித்துக் கூறிய அரிய இறுதிப்போதனைகளில்,

"கணவர்களாகிய உங்களுக்கும், உங்கள் மனைவியர்மீது உரிமைகள் உண்டு; மனைவிகளாகிய உங்களுக்கும், உங்கள் கணவர்மீது உரிமைகள் உண்டு"

என்று கூறியதோடு நில்லாது, பிரத்தியேகமாக ஆண்மக்களை விளித்து,

"கணவர்களே! உங்கள் மனைவியர்களிடம் அன்

புள்ளவர்களாக இருந்து, அவர்களைக் காப்பாற்றுங்கள். ஆண்டவனின் ஜவாப்தாரித்தன்த்தின் மீது, அவர்களை நீங்கள் மனைவிகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். அவர்களைச் சரிவர நடத்துவீர்களாக"

என்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றார்கள். பெண்களைக் குறித்துச் சொல்லப்பட்ட ஒவ்வொரு வாக்கியத்திலும், ஸ்திரீ உரிமையுடன் தெய்வீகத்தையும் கலந்திருப்பதை நோட்டமிட வேண்டும்.

நபிகள்நாயகம் இறக்குந் தருவாயில்,

"உங்கள் தொழுகைகளை விட்டுவிடாமல், உங்கள் மனைவியரையும் நன்றாக நடத்தி வாருங்கள்"

என்று கூறிப்போயிருக்கின்றார்கள்.

ஸ்திரீகளின் அந்தஸ்தையும், அவர்களைக் கௌரவமாக நடத்த வேண்டுமென்பதையும் சொல்லிப்போன, பல நாயக வாக்கியங்களுள் இன்னும் சிலவற்றை கீழே குறிப்பிடுவாம்.

"உங்களுடைய மனைவிகளைப் பக்ஷத்துடன் நடத்தி, அவர்களுக்குப் புத்தி புகட்டுங்கள்."

"ஒரு முஸ்லிமாயிருப்பவர் தம்முடைய மனைவியை வெறுப்பது கூடாது; அவள்பாலுள்ள ஒரு குண தோஷத்தைக்கண்டு நீர் அதிருப்தி அடைவதைக் காட்டிலும், அவளிடத்திலுள்ள மற்றொரு நற்குணத்தைக் கண்டு திருப்தியடைதல் வேண்டும்."

"ஒரு அடிமையை அடிப்பது போலவே, உம்முடைய மனைவியையும் அடிப்பீர்களோ? இவ்வாறு நீங்கள் ஒருபோதும் செய்வதாகாது."

"ஆண்டவன் முன்னும், அவனுடைய சிருஷ்டியின் முன்னும் உங்களுள் மிக நல்லவர்களாயிருப்பவர்

தம்முடைய குடும்பத்தினரிடத்தில் நல்லவிதமாய் நடந்துகொள்பவராயிருக்கிறார். இப்படிப் பார்க்குமளவில், நான் என்னுடைய குடும்பத்தினரிடத்தில் மிக நல்லவனாய் நடந்துகொண்டு வருகிறேன்."

இவைகளினால் இப்பெரியார் வெறும் வாய் வேதாந்தியே அன்றென்றும், சொல்லுவதை செய்துகாட்டும்—மனித ஜாதிக்கே முன்மாதிரியானவரென்றும் விளங்குகின்றது. இமாம் கஜ்ஜாலி என்பவர், வேத ஆராய்ச்சியில் சிறந்த மகான். ஒரு மகான், தன் மனைவியுடன் சமாதானமாக இருக்கவேண்டும் என்று கூறிவிட்டு;

"அவர் தன்னுடைய மூர்க்கத்தனத்தாலும் நன்றியின்மையாலும்-கணவனைக் கிலேசத்துக்குள்ளாக்கினும், அவன் அவற்றைப் பொறுமையுடன் சகித்துக்கொள்ள வேண்டும்; தன் மனைவி, வேடிக்கை விளையாட்டுக்களில் ஈடுபட்டிருப்பதற்கு விட்டுக்கொடுக்க வேண்டுமேயன்றி, அவைகளை நிறுத்த முயற்சித்தல் கூடாது. நபிகள் நாதரே ஒரு சமயம், தமது மனைவி ஆயிஷாவுடன் பந்தய ஓட்டங்கள் ஓடியிருக்கிறார்கள். முதன்முறை அவர் ஜெயிக்க, இரண்டாவது முறை அவர் மனைவியார் அவரைத் தோற்கடித்தார். மற்றொரு சமயம் வேடிக்கை காட்டும் சில நீகிரோவர்களைக் காண்பிப்பதற்காகத் தம் மனைவியைத் தங்கள் கைகளால் உயரத் தூக்கிப் பிடித்தார்கள். நபிகள்பிரான் தங்கள் மனைவிமார்களிடம் அன்பு காண்பிப்பதுபோல, தம் மனைவியர்களிடம் அன்பு காட்டக்கூடிய வேறு எவரையும் கண்டுபிடித்தல் அரிது"

என்று எழுதி வைத்திருக்கின்றார்கள்.

"உலகத்தில் முக்கியமாகத் தேடிப்பெற வேண்டியவை எவை" யென்று நபிகள்நாயகம் அவர்களை அவருடைய உயிர்த்தோழராகிய உமர் என்பார் கேட்டதற்கு அம்மகான்,

> ஆண்டவனைத் தியானம் செய்வதிலேயே ஈடுபட்ட நாவும், நன்றிமறவாத மனதும், நல்ல ஈமான் (உறுதி) கொண்ட மனைவியுமாம்"

என்று பதிலிறுத்தார்களாம். இன்னும் கூறியிருப்பதாவது :-

> "கற்புடைய மனைவியே மனிதனின் கற்பகத் தரு ஆவாள்"

> "நியாயமுள்ளதாக இருப்பதும், ஆண்டவனால் வெறுக்கப்படுவதும் விவாக விலக்கேயாகும்"

முன்கூறியவாறு தன் சுயநலங்கருதி, அற்ப காரியத்திற்கெல்லாம் அக்காலத்தில் தன் மனைவியை நீக்கி வந்ததைத் தடுக்கப்பட்டது.

ஆண்டவனாலும் அவனுடைய தூதராலும் விவாக விலக்கின் அவசியத்தை ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றது. சமாதானமாய் இருக்க முடியாதென்ற பல சோதனைகளுக்குப் பின்னும், திட்டமாகத் தெரிந்துபோன பிறகு, "பூனையையும் எலியையும் கூட்டி வைப்பது" போல்; விவாக விலக்கு ஏற்படுத்தியிராவிட்டால், விவாக விலக்கை ஆதரிக்காததினாலேயே யல்லவா எண்ணிறந்த இதரமத ஸ்திரீகள் விபசாரத்தில் ஈடுபட நேரிட்டிருக்கிறது. இவற்றை யெல்லாம் உத்தேசித்தே ஆண்டவன், புருஷனுக்குத் தன் மனைவியை இன்றியமையாத சமயத்தில் அவளுடைய பாத்தியதை களையெல்லாம் கொடுத்து நீக்கிவிட உரிமை கொடுத்தானோ அப்படியே மனைவிக்கும், தன் புருஷனைவிட்டு நீங்கிக்கொள்ள உரிமையை அளித்துள்ளான்.

(கிறிஸ்தவ மதச்சட்டப்படி விபசாரக்குற்றம் ருஜு ஆன தொழிய பரஸ்பரம் விவாக பந்தத்திலிருந்து விலகிக்கொள்ள முடியாது. இப்படி முடியாததைக் கண்டே வெள்ளைக்காரர்கள், மதக் கட்டளையை ஒதுக்கித்தள்ளி வைத்துவிட்டு, அதற்கு விரோதமாகத் தலைமயிர் வெட்டிக்கொள்வது போன்றதும் முக்கியமில்லை என்றதுமான கேவலமான காரணங்களுக்கென்று, விவாக விலக்குகளை நடத்தி வருகின்றனர். இதற்கே, நடு நிலைமையைத் தருவதென்ப

தாகும். "கொடுத்தால் பிண்ணாக்குக் கொடு. இல்லையேல், செக்கில் பேலுவேன்" என்று சாதாரணமாகக் கூறுவது வழக்கம். அது போலவே இருக்கின்றது மேல் நாட்டாரின் கூற்று.)

விவாக விலக்கை ஆண்டவன் வெறுப்பதாக ஏன் சொன்னான் எனின், ஆண்பாலர்கள் அடிக்கடி தங்கள் சுயநலங்கருதி, அற்பக் காரணங்களைப் பிரமாதப்படுத்தி, பெண்களை விலக்கும்படியான சுபாவத்தைக் கொண்டிருப்பதைத் தடுக்கவே, ஆண்டவன், அப்படித் தன் வெறுப்பைக் கடினமான முறையில் வெளியிட்டுள்ளான் எனலாம்.

"ஒரு பெண்பிள்ளையானவள் தினந்தோறும் ஐந்து வேளையும் தொழுதுகொண்டும், ரம்ஸான் மாதத்தில் நோன்பு நோற்றுக் கொண்டும், பதிவிரதா தர்மத்துடன் கணவனுக்கு மீறி நடவாமல் இருப்பாளாயின், அவளுக்கு இஷ்டமான எந்த வாயிலின் வழியாகவேனும் பிர்தௌஸ் என்னும் சுவர்க்கத்துக்குள் நுழையக்கடவள்."

ஹைதா என்பவரின் குமாரரான மூஆவி என்னும் அரபியானவர், யாரஸுலல்லா (ஹ்)! யான் என் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமை யாது? என்று கேட்க, நபிகள்:—

"நீர் புசிக்கும்போது உம் மனைவியையும் புசிக்கச் செய்யும்; நீர் உடுத்திக்கொள்ளும்போது அவளையும் உடுத்திக்கொள்ளச்செய்யும்; அவளுடைய கன்னத்தில் நீர் அறைவது கூடாது; அவளை வைதலும், மன வருத்தத்தால் விலக்கிவைப்பதும் தகாத காரியமாகும்."

என்று விடைபகர்ந்தார்கள்.

"உம்முடைய மனைவிக்கு நற்புத்தி போதியும்; அவள்பால் நற்குணம் இருக்குமாயின், அவள் உம்முடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, தன்னு

டைய அனுவசியமான வீண் பேச்சுகளை எல்லாம் விட்டு விடுவாள். ஓர் அடிமையை அடிப்பதுபோல் உம்முடைய மேலான மனைவியை அடிக்கவேண்டாம்.

இப்படியெல்லாம் உபதேசிக்கவும், அடிமைகளைப்போல் பாவிக்கப்பட்டும் வந்த அக்கால அரபிய ஸ்திரீகளுக்கெல்லாம் புத்தியிருண்டாகி, தங்கள் உரிமைகளைப் பாராட்ட ஆரம்பித்து விட்டார்கள். தங்கள் உரிமைகளைப் புதிதாகப் பதுங்கியிருந்த மனைவிகள் பாராட்டியதானது, அவர்களுடைய ஆண்களுக்கு ஒருவித அதிருப்தி தோன்றுவது இயற்கையே.

'நீங்கள் உங்கள் மனைவியரை அடிக்கவேண்டாம்.

என்று நபிகள் நாயகம் உத்தரவிட்டதைக் கேட்டதுமுதல்,

"எல்லாப்பெண்களும் தங்கள் கணவர்களின்மீது அதிகாரம் செலுத்த ஆரம்பித்து விட்டார்கள்"

என்று நபிகளின் நண்பர்களிற் சிறந்தவராகிய உமர், நபிகள் நாயகத்தைக் கேட்டார். இதைக்கேட்ட நபிகள்,

"நிச்சயமாக, அதிகமான ஸ்திரீகள், தங்களுடைய கணவர்களின் கொடுமையைப்பற்றி பிராது செய்து கொண்டு, என் குடும்பத்தாரிடம் வந்திருக்கிறார்கள்; தங்களுடைய மனைவியரைப் புடைக்கும் புருஷர்கள் நல்ல மனிதர்கள் அல்லர். ஒரு பெண்பிள்ளையை அலைந்து திரியும்படியாக விட்டுவிடுகிறவன் என்னுடைய மார்க்கத்தில் சேர்ந்தவன் ஆகான்."

என்று கூறியிருக்கின்றார்கள். மேலும்,

"ஒரு மனிதனுடைய புதையல்களுக்கு எல்லாம் மகா சிரேஷ்டமானது ஒரு சன்மார்க்க ஒழுக்கமுள்ள மனைவிதான்."

என்று கூறியுள்ளார். ஒரு சமயம் நபிகளிடம் ஒரு அரபி வந்து,

"யாரஸூலல்லா(ஹ்)! நிச்சயமாகவே யானொரு பெரும் பாவம் செய்துவிட்டேன். அதைப்போக்கிக் கொள்ள யாதேனுமொரு மார்க்கமுண்டா?"

என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் அந்த அரபியை நோக்கி,

"உன்னுடைய மாதா உயிருடனிருக்கின்றாரா?"

என்று வினவினார்கள். இல்லை என்று மறுமொழிகிடைத்தது.

"உன்னுடைய சிற்றன்னையேனும் உயிருடன் இருக்கின்றாரோ?"

என்று நபிகள்பெருமான் மறுபடியும் கேட்டார்கள். "ஆம்" என்று பதில் கிடைக்கவும்,

"அவ்வாறாயின் நன்று; உடனே சென்று உன் சிற்றன்னைக்கு வேண்டிய உதவிபுரி; உன்னுடைய பாபமானது மன்னிக்கப்படும்."

என்று நபிகள் நாயகம் அவர்கள் கட்டளையிட்டனுப்பினார்கள்.

தான் பிறக்குமுன் தகப்பன் இறந்து, தாயும் குழந்தையாக இருக்கையிலேயே இறந்து போனதினால், அநாதியான முகம்மதை மற்றோர் ஸ்திரீ பாலூட்டி வளர்த்துவந்தார். ஒரு சமயம் நபிகள் ஜஃரானா என்னுமிடத்தில் இறைச்சி பங்கிட்டுக்கொண்டிருக்கையில் ஒரு மாது வருவதைக்கண்டார். உடனே தன் வேலையை விட்டுவிட்டு, தன் ஆடையைவிரித்து அதன்மீது அம்மாதை உட்காரச்சொன்னார். அங்கு கூடியிருந்தவர்களுக்கு இது ஓர் விந்தையாயிருந்தது. முகம்மதுநபியான மகான், எவரும் அறியாத ஒரு ஸ்திரீக்கு, இவ்வளவு மகா மேலான மரியாதை கொடுப்பது நவீனமாகத்தோன்றிற்று. அம்மாது யாராக இருக்கக்கூடுமென்று ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டார்கள், கடைசியில் அம்மாது

கபிகளின் போஷகத்தாய் என்று தெரிந்தது. தெரிந்ததும், 'போஷகத் தாய்க்கு இவ்வளவு மரியாதையா' என்று தங்களுக்குள்ளேயே நினைத்துக்கொண்டார்கள். அப்படியானால் அக்காலத்தில் ஸ்திரீகளுக்கு எவ்வளவு அந்தஸ்து இருந்திருக்கிறதென்று பாருங்கள்! அக்கேவலமான மனப்போக்கையும், நிலைமையையும், கபிகள் தங்கள் ஜீவிய காலத்திலேயே முற்றிலும் மாற்றி இனி எக்காலத்திலும் எவரும் அதைப்பற்றிக் கவலைப்படா வண்ணம் உயர்த்திவைத்துப் போயிருக்கின்றார்கள் என்பது இதிலிருந்து விளங்குகின்றதைக் கவனியுங்கள்!

வாசகர்களே! சகோதரிகளே!! இதுவரையில் எடுத்துக்காட்டிய வேத ஆதாரங்களிலிருந்து, நீங்களே தீர்ப்புக் கூறிக்கொள்ளுங்கள். அதைப்பற்றி இங்கு இகழவோ புகழவோ உத்தேசமில்லை. அவரவர்களின் பகுத்தறிவும் ஆராய்ச்சி அறிவுமே போதுமானதாயிருக்கின்றது.

---


ரோஸ் மார்க் (ரிஜிஸ்டர்ட்)

**ராஜ ரசம்** (ரிஜிஸ்டர்ட்)

**சகல வியாதிகளையும் சம்ஹரிப்பது.**

1 புட்டி ரூ. 1—8—0. தபால் சார்ஜ் வேறு.

"ராஜ ரசம்" கம்பெனி,

பொன்மலை, திருச்சி.

# முஸ்லீம் பெண்களின் தற்கால நிலைமை.

முஸ்லீம் பெண்களின் தற்கால நிலைமையைப்பற்றி ஆராய்வதாக நாம் இப்புத்தகத்தை எழுத ஆரம்பிக்கும்போது நினைக்காவிடினும், கொஞ்சம் விவரிப்பது இச்சமயத்தில் அவசியமென்று தோன்றுவதால் சுருக்கி விளக்குகிறேன்.

இந்து மதம் புராதனமானது. அம்மதமானது ஸ்திரீகளை பொய்யைப்போன்ற அசுத்தர்களென்றும், விபசார தோஷம் உள்ளவர்களென்றும், அவர்களை அடிமைகளைப்போலும் மிருகங்களைப் போலும் நடத்தவேண்டுமென்றும் கட்டளையிட்டிருந்தும், அவ்வேதங்களும் சுருதி ஸ்மிருதி சாஸ்திரங்களும் இன்றும் உயிருடனிருந்தும், இந்துக்கள் அவைகளைக் கொஞ்சமும் மதியாது அவைகளுக்கு முற்றிலும் விரோதமாகத் தங்கள் ஸ்திரீ ஜாதியினருக்கு மிருக சுயேச்சையை மட்டுமென்றி அதிகாரத்தையும் கொடுத்து வருகின்றனர். ஆண் ஜாதியினர் கொடுக்காவிடினும், காலவேற்றுமையால் இந்து ஸ்திரீகள் அரசாங்க உதவியைக்கொண்டு தங்கள் அந்தஸ்துகளை உயர்த்திக்கொண்டே வருகின்றனர்.

கிறிஸ்து மதம் புராதனத்தில் இரண்டாவதானது. இம்மதம், ஸ்திரீ ஜாதியினரை விஷப்பாம்பினரென்றும், பிசாசுகளென்றும், சகல பாபங்களுக்கும் அஸ்திவாரமானவர்களென்றும் ,அசுத்தர்களென்றும், அவர்களை எப்பொழுதும் அடக்கியே வைத்திருக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கின்றது. ஆனால் இன்றைய தினம் மேல்நாட்டு ஸ்திரீகளின் அந்தஸ்தையும் சுயேச்சையையும் கண்டு நாம் பிரமித்து வருகின்றோம். ஆண் ஜாதியினருடன் ஒவ்வொரு விஷயத்திலும் போட்டி போடுகின்றார்கள். மேலும் அவர்களைத் தங்களுக்கு அடிமையாக்கிக்கொள்ளவும் மகாப்பிரயத்தனங்கள் செய்துவருகினறனர். அப்படியும் ஆண்கள் பெண்களுக்கு அடிமைகளாகப்போகும் ஓர் காலமும் வரப்போகின்றது என்ற தீர்க்க தரிசனமும் தைரியமாய்க் கூறலாம். இப்படி பெண்பாலர்கள் தங்கள் வேதக்கட்டளைகளைக் கேவலமாகக் கருதி, அவைகளைத்

தங்கள் கால் ஜோட்டின் அடி அட்டையாக வைத்துத் தேய்த்துக் கொண்டே அதற்கு நேர் விரோதமாகத் தங்கள் அந்தஸ்தை அளவுக்கு மிஞ்சி உயர்த்திக் கொண்டு விட்டனர். ஆண்கள் அவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு அஞ்சினாலும், அதைத்தடுக்க முடியாதர்களாக, அவர்களுடன் தாளம் போடுகின்றனர். ஸ்திரீ ஜாதிகளுக்கு இவர்கள் அடிமைகளைப் போல் நடந்து வருகிறார்கள் என்றால் மிகையாகாது. இவர்கள் அப்படி நடந்து கொள்ளாவிட்டால், இவர்களுக்கு அந்தஸ்தும் கௌரவமும் இல்லாமற் போகும் நிலையில் விஷயங்கள் வளர்ந்து வருகின்றன.

இன்றைக்கும் அமுலிலிருக்கும் தேசிய சட்டப் பிரகாரம் (மதச் சட்டமல்ல) ஐரோப்பிய ஸ்திரீகளின் உரிமை பாதுகாக்கப்பட்டில்லை. இச்சட்டங்கள், ஒன்றுக்கொன்று முரணாக இருந்து வருகின்றன. புருஷன் தன் ஜீவிய காலத்தில், தன் மனைவியைப் பல விதத்திலும் பராமரித்து வர சட்டப்படி கட்டுப்பட்டிருக்கின்றான். ஆனால், அவன் கோடீஸ்வரனாயினும் அவன் இறந்தவுடன் செல்வமாகப் பராமரிக்கப்பட்டு வந்த அவனுடைய மனைவியின் உரிமை முற்றிலும் மாறிவிடுகின்றது. அவளுக்குத் தன் போஷணைக்கு ஒரு தம்பிடி கூட இலலாமல் தவிக்கும்படி விட்டுவிட சட்டம் இடந்தருகின்றது. அவளுக்கு வேண்டிய உதவியெல்லாம் புருஷன் இல்லாமல் விதவையாயிருக்கும்பொழுது தான் அவசியமாக வேண்டியிருக்கின்றது. இப்பொழுதுதான் அவள் கைவிடப்படும்படி சட்டம் புருஷனுக்குச் சுதந்தரம் கொடுக்கின்றது. மனஸ்தாபங் காரணமாகவோ, பழிவாங்கும் நோக்கத்துடனே, புருஷன் தன் மரண சாசனத்தைக் கொண்டு தன் மனைவிக்குத் தன் சொத்திலிருந்து ஒரு அம்மன் காசு கூடக் கிடைக்காதபடி செய்துவிடலாம். கிறிஸ்துமதக் கட்டளைக்கு எதிரிடையாக நடந்துகொண்டு வந்தும், இன்னும்கூட தேசியச் சட்டங்கள் முஸ்லீம் ஸ்திரீகளுக்கு மதச் சட்ட பூர்வமாய் புருஷனிடமிருந்தும், தகப்பன் தாயிடமிருந்தும், சகோதரன் சகோதரிகளிடமிருந்தும், மற்ற இரத்தப் பற்றுள்ள பந்துக்களிடமிருந்தும் சொத்து உரிமை கொண்டாட சுதந்தரம் உண்டென்பதை முன்னமே அறிந்துகொண்டிருக்கின்றீர்கள்.

இப்படி, எவ்வளவு கேவலமான நிலைமையில், மதக்கட்டளைகளும், தேசியச் சட்டங்களும் கிறிஸ்தவ ஸ்திரீ ஜாதியினரை வைத்து வந்தாலும், கிறிஸ்தவ மேல் நாட்டு ஸ்திரீகள் அவைகளைப் பொருட்படுத்தாமல் இவ்வநாகரீகச் சட்டங்களுக்கெல்லாம் காரணபூதர்களாக இருந்து வந்த ஆண் ஜாதியினரையே தங்களுக்கு அடிமைகளாக்கிக்கொள்ள பகிரதப் பிரயத்தனப்பட்டு வெற்றி பெற்று வருகின்றார்கள்.

எவ்வித அந்தஸ்தும் உரிமையும், ஸ்திரீ ஜாதிகளுக்கு ஹிந்து, கிறிஸ்தவ, யூத மதங்கள் அளிக்கவில்லை. ஆனால், ஸ்திரீகளின் பேரில் ஆண்களுக்குள்ள ஆதிக்கத்தைப் பன்னிப் பன்னிக் கூறி, ஸ்திரீகளை எப்பொழுதும் காலடியில் வைத்து நசுக்கிக்கொண்டேயிருக்கும்படி கட்டளையிட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட மத ஸ்திரீகள் இப்பொழுது அவர்களைத் தங்கள் ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்து விட்டனர்— கொண்டு வந்துகொண்டிருக்கின்றனர்

> “அவர்கள்மீது (ஸ்திரீகளின்மீது) புருஷர்களுக்கு என்னென்ன விதமான உரிமைகள் உண்டோ, அவைகளெல்லாம் ஸ்திரீகளுக்கும் நியாயமான முறையில் புருஷர்கள்மீது உண்டு”

என்றும், இன்னும் பற்பல விதத்திலும், ஸ்திரீ ஜாதியினரின் உரிமையை இஸ்லாத்தின் வேதம் பாதுகாத்து வைத்திருக்கையில், முஸ்லீம் ஸ்திரீகளுக்கு முஸ்லீம் கொடுத்துள்ள அந்தஸ்தை நினைத்தால் வெட்கக்கேடு. விவரித்தால் முஸ்லீம்களுக்குள் மனஸ்தாபம். முஸ்லீம் ஆண்கள், தங்கள் பெண்களையெல்லாம் அடுப்பங்கரையில் சிறை வைத்து, ஒவ்வொரு நாளின் 24 மணி நேரமும் அவர்கள் கரித்துணியைப் பிடித்துக்கொண்டு உழைத்துக் கடுந்தண்டனையைப் பெற்றுத்தான் தீரவேண்டும். தலையை வெளியில் நீட்டிவிடக் கூடாது: வாயையும் சற்று அதிகமாய்த் திறந்துவிடக்கூடாது. இலவசமாய்க் கிடைக்கும் சூரிய ஒளியைப் பெறக்கூடாது: எங்கும் அலைந்து திரியும் நல்ல காற்றை அனுபவிக்கக்கூடாது: உலகக் கல்வியைப் பெற்று அறிவுள்ளவர்களாகத் திகழக்கூடாது; இறைவனின் இயற்கையையும், மனிதனின் சாமர்த்தியத்தையும் பார்த்து

இறைவனைப் புகழக்கூடாது; கிளிப்பிள்ளைகளைப் போலவே ஏதோ மதக்கிரந்தங்கள்—நூல்கள் எனப்படுவதை ஆடி ஆடிப் படித்துத் திருப்தி அடையவேண்டும் என்பனபோன்றவைகளை நிர்ப்பந்தித்து வரும் உரிமையாகும்.

தங்கள் வேதக்கட்டளைகளை நிராகரித்து, அதற்கு நேர்மாறாக நடக்கும் குற்றத்தை இழைக்க இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய மதத்தினர் எவ்விதம் துணிந்துவிட்டனரோ அதேபோல், முஸ்லீம்களும்தங்கள் வேதக்கட்டளைகளை முறித்துக் குற்றமிழைத்து வருகின்றனர். இதனால் நாம் எல்லோரும் குற்றவாளிகளாகின்றோம்.

---


# "ராஜ ரசம்"

[ரிஜிஸ்டர்ட்]

ரசங்களுக் கெல்லாம் ராஜன்!
வியாதிகளை விரட்டும் வில்விஜயன்!
எல்லா வியாதிக்கும் யமன்!
வைத்தியருக்கு நல் விருந்து!

பத்தியமில்லை! பயமில்லை!
கசப்பில்லை! கஷடமில்லை!
இனிய மணம்! ஏற்ற குணம்!
ஏழைகள் அன்பன்! யாவர்க்கும் நண்பன்!
ஒரே மருந்து! ஒப்பற்ற மருந்து!

1-புட்டி ரூ. 1–8–0. தபால் சார்ஜ் வேறு.

விலாசம் :—

"ராஜ ரசம்" கம்பெனி,
பொன்மலை, திருச்சி.

# வேண்டுகோளும் வியாக்யானமும்.

## பெண்களுக்கு

**சகோதரிகளே! இந்திய-பாரத குமாரிகளே!!** நீங்கள், உங்களுக்கு எது சரியென்று தோன்றுகின்றதோ அதைச் செய்ய முயற்சியுங்கள்!

> "உங்கள் உரிமை மிகவும் தெய்வீகமானது. அதை ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்".

என்று இறைவன் பொதுவாக ஹிந்து கிறிஸ்தவ முஸ்லிம் முதலிய எல்லா ஸ்திரீ ஜாதிக்கும் கூறியிருக்கின்றான். ஆண்கள் அதற்கு விரோதமாக உங்களை அடிமைப்படுத்தி வைத்து வருகின்றனர். நீங்கள் தேவ கட்டளையை ஆதாரமாகக் கொண்டு வெளி வாருங்கள்! உங்கள் அடைப்புகளை அழித்தெறியுங்கள்! உங்களுக்கு விரோதமாக எதிர்ப்புகள் செய்யும் ஆண் பிள்ளைகளைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்! அவர்கள் தேவ கட்டளையை அவமதிக்கின்றனர். அவர்களுக்கு இறைவன் கண்டிப்பாய்த் தோல்வியையே கொடுப்பான். நீங்கள் வேண்டுவதெல்லாம் தெய்வ ஆதாரத்தைக்கொண்டவைகளே! சில வேதங்கள் உங்களை அடிமைகளாகக் கருதும்படி ஏவுகின்றன. அவை தெய்வக்கட்டளைகளாக இருக்கமுடியும் என்று கூறப் பகுத்தறிவுள்ளவர்கள் முன்வரமாட்டார்கள். இறைவன், தன் படைப்பில் பாதிக்கு மேலான உங்களை, ஒருக்காலும் அசுத்தர்களாகவும், விபசார தோஷமுள்ளவர்களாகவும், பிசாசுகளாகவும், அறிவற்றவர்களாகவும், உறிமையற்றவர்களாகவும் எவ்வித அந்தஸ்தும் அற்றவர்களாகவும் படைத்திருப்பானென்று நினைக்கின்றீர்கள்? இல்லை! இல்லை!! இவையெல்லாம் மனிதன் சுயநலங் கருதிச் செய்து வைத்த பித்தலாட்டங்களாகும். நீங்கள் உங்கள் உரிமைகளுக்காகப் போர் புரியும் காலம் வந்துவிட்டது. ஆண் மகன் மனதார உங்களுக்கு உதவமாட்டான். உங்களுடைய பலத்தைக் கொண்டுதான் உங்களிடம் அவன் இணங்கு

வான். அப்பொழுது தான் அவன் அநியாயமாக அநுபவித்துவரும் உங்கள் உரிமைகளை யெல்லாம் உங்களுக்களிப்பான். அப்போது தான் நீங்கள் ஆண்களுக்கோர் ஆடையாகவும், ஆண்கள் உங்களுக்கோர் ஆடையாகவும் பரஸ்பரம் சம அந்தஸ்துடன் ஒருவருக்கொருவர் துணையாக இன்புற வாழக்கூடும்.

ஆனால், சகோதரிகளே! அடிமைவாழ்விலிருந்து பலவந்தமாய் விடுவித்துக்கொள்ளுபவர்கள், இயற்கையாகவே சகல சட்ட திட்ட ஆசாரங்களையெல்லாம் நல்லவைகளையும் முறித்துவிட்டு, எங்கோ போய், இறைவன் ஆணையை மீறிவிடுகின்றார்கள். உதாரணமாக, துருக்கி தேச ஸ்திரீகளை எடுத்துக்கொள்ளுங்கள். கொடூர ராஜ்யத்திலிருந்து நீங்கின ருஷ்யா தேசத்தினரைக் கவனியுங்கள்,-ஏன்? எப்பொழுதும் பார்க்கும் நம் மேல நாட்டு ஸ்திரீகளைப் பாருங்கள் இவர்களைப்போல் நீங்கள் ஆண்டவனின் ஆக்ஞையை ஆதாரமாகக் கொண்டு எப்படி வெற்றி பெறப் போகின்றீர்களோ அப்படியே, ஆண்டவனுடைய ஆக்ஞையை மீறாமல் உங்கள் உரிமையை அநுபவியுங்கள்.

ஆண்டவன்,

"பெண்களெல்லாம் ஆண்களுக்கு உடையைப்
போன்றும், பெண்களுக்கு ஆண்கள் உடையைப்
போன்றும் நடந்து கொள்ளுங்கள்."

என்று உபதேசித்துள்ளான் அல்லவா! இதனால், இருவரும் பரஸ்பரம் சம அந்தஸ்தைப் பெற்றவர்கள் என்று ஆகின்றதன்றோ! இதனால், பெண்கள் ஆண்களாகவோ, ஆண்கள் பெண்களாகவோ மாறிவிட முடியுமா? முடியாதல்லவா! ஆகவே, பெண்கள் பெண்களாகவே இருந்து, இறைவன் இயற்கையாக ஏற்படுத்தியுள்ள கடமைகளைச் செய்யவேண்டும். ஆண்கள், ஆண்டவனுடைய ஹத்து மீறாமல் தன் கடமையைச் செய்து வரவேண்டும்.

இறைவன், ஆண்களை ஒருவித காரியத்திற்காகவும், பெண்களை மற்றோர்வித காரியத்திற்காகவும் படைத்திருக்கின்றான் என்பதை, இயற்கையை உற்று நோக்கிக் கவனித்திருப்பவர்கள் அறி

வார்கள். உலக அபிவிருத்திக்கும், உலக இன்ப சுகத்திற்கும், ஆண் பெண் ஆகிய இரு ஜாதியினருக்கும் தனித் தனிக் கடமைகளை ஏற்படுத்தி யிருந்தாலும், இருவரும் ஒன்றுபட்டாலொழிய ஒரு கடமையும் நிறைவேறாது. இதை உத்தேசித்தே இறைவன், ஆண்களுக்கு ஸ்திரீகளின்பேரில் சிறிது ஆதிக்கத்தைக் கொடுத்து, அதே சமயத்தில் பெண்களுக்கும் அவர்களின் கணவர்மீது சிறிது—இல்லை, அதிக ஆதிக்கத்தைக் கொடுத்துள்ளான். பெண்களின்பேரில் புருஷன் ஆதிக்கம் பெற, புருஷன் பல கடமைகளைச் செய்யக் கடமைப் பட்டுள்ளான். சுருக்கச் சொல்லவேண்டுமாயின், புருஷன் பெண்ஜாதிக்கு வேண்டிய சகல சௌகரியகங்களையும் செய்து தரக் கடமைப்பட்டிருக்கின்றான். இப்படித் தன் தேக உழைப்பாலோ, மனோ சக்தியாலோ, எந்த முறையாலோ தன் பெண்ஜாதிக்குமட்டும் அல்ல, தன் குடும்பத்தின் பெண்களுக்கும், பிள்ளைகள் முதலானவர்களுக்கும் வேண்டியவைகளை யெல்லாம் சேகரித்துக் கொடுத்து, அவர்களைச் சந்துஷ்டியாக வைத்து வருவானானால் பெண்சாதி தன் கடமையைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றாள். அதாவது அவள் தன் இல்லற வாழ்வை ஒழுங்கான முறையில் நடத்தி வருவதேயாகும். அதை விடுத்து—தன் இல்லற வாழ்வை விடுத்து, ஆண்களுடன் போட்டி போட்டுக்கொண்டிருப்பதால் இல்லற வாழ்வு சாகரமாக (சமுத்திரமாக) முடிகின்றது. இதைத்தான் நாம் மேல்நாட்டுக் குடும்ப வாழ்க்கையிலிருந்து அறிந்து வருவது. இன்று விவாகம், ஒரு வாரத்தில் விவாக ரத்து. விவாக விலக்குக் கோர்ட்டுகள் ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களில் அதிகரித்துக் கொண்டே போகின்றன. ஏன்? ஆண் பெண் இருபாலாரும் தங்கள் தங்கள் எல்லையை மீறி, பரஸ்பரம் போட்டி போடுவதனாலேயே யல்லவா! இதற்கென்ன செய்வதென்று, சமூகச் சீர்கேட்டைப் பற்றிக் கவலைப்படும் பெரியார்கள் சதா ஆலோசிக்கின்றனர். பெண்களோ வாயுவேகமாகத் தங்கள் எல்லையை மீறி ஓடிக்கொண்டிருக்கின்றனர். எவ்வித சட்ட திட்டங்களுக்கும் இணங்குவதில்லை. எப்படி முடியுமோ என்று அஞ்சுகின்றனர். சீர்திருத்தக்காரர்கள் ஸ்திரீகள் தங்கள் கடமையில், முக்கியமாக இல்லற வாழ்க்கையைச் செய்ய மறுக்கின்றனர். குழந்தைகளைப் பெற்றால்தானே இல்லற

வாழ்வில் ஈடுபட நேரிடும் என்று குழந்தைப் பேற்றை விரும்புகின்றனரில்லை. நாளடைவில் விஷயம் இப்படி மாறிற்று. விவாகமென்று செய்துகொண்டால்தானே பிள்ளைப்பேறு உண்டாகின்றது, அதிலிருந்து இல்லற வாழ்க்கைத் தொந்திரவுகள் ஏற்படுகின்றனவென்று விவாகம் செய்ய மறுத்தனர். ஆனால், இயற்கையாகிய இன்பம் அனுபவிக்கும் உணர்ச்சியை இவர்கள் தடுப்பதற்கில்லாமல் அந்த இன்ப நுகர்ச்சியாகிய காம தாகத்தை எவ்விதத்திலாவது தணித்துக்கொள்வதென்று தீர்மானித்துக்கொண்டனர். கண்ட கண்டவர்களுடன் கலந்து, சமய உசிதம்போல் தங்கள் காம தாகத்தை நிவர்த்தித்துக்கொள்ளுகின்றனர். இதனால் சிசுஹத்தி அநாதைக் குழந்தைகள், கொடிய வியாதிகள் தினே தினே அதிகரித்து வருகின்றன. இந்த உண்மையை எவரும் மறுக்கமாட்டார்கள். இது உலகமறிந்த உண்மையும் இரகசியமுமாகும். இவ்விழிந்த செயல்களுக்கு மூல காரணம், ஸ்திரீ ஜாதியினரை மதப் பெயரால் ஆண் ஜாதியினர் அடக்கி வைத்திருந்தமையாகும். அதனால் அவர்கள் தங்களை விடுவித்துக்கொண்டவுடன், தங்கள் உரிமைகளைப் பெறும் ஆவேசத்தாலும், தங்கள் அந்தஸ்துகளை உயர்த்திக் கொள்ளும் ஆவலாலுமே, அவர்கள் (பெண்கள்) மதச்சட்டங்களையே உதைத்துத் தள்ளி, ஏனைய இதர சட்ட திட்டங்களையும் மதிக்க இஷ்டப்படாததாகும். இதனாலேயே கட்டுதிட்டமின்றி ஆண் பெண் இருபாலாரும் கலக்க ஆரம்பித்ததுமாகும். அதன் பயனாக விபசாரம் ஏற்படலாயிற்று. இதனால், மேலே கூறிய சிசுஹத்தி, தந்தையற்ற குழந்தைகள், தாயும் தந்தையுமற்ற அநாதைக் குழந்தைகள், தீராத தொத்து வியாதிகள், இல்லற இன்பம் இன்மை, நவீன விதக் கொலை களவுகள், விபரீதமான விபசார சாலைகள், விவாகரத்துக் கோர்ட்டுகள் முதலியனவெல்லாம் அதிகரித்துவருகின்றன.

சகோதரிகளே! நம் இந்திய குமாரிகளும், அம்மேல்நாட்டு ஸ்திரீகளின் சுயேச்சையே சரியானதென்று கருதி, அவர்களைப் பின்பற்றி, அவர்களுக்குண்டான இழிந்த பெயர்களைத் தங்களுக்கும் வருவித்துக்கொள்ளுகின்றனர். இனியும் நீங்கள் அப்படிச் செய்யாது சகல உரிமைகளையும் பெற்று, உங்களுடைய இல்லறக் கடமைகளை ஒழுங்காகச் செய்ய முயலுங்கள்! நீங்கள் உங்களுக்காக உழைத்து

உங்களுடைய சகல வசதிகளுக்கும் சௌகரியங்களுக்கும் ஏற்பாடு செய்யக்கூடிய, உங்கள் கணவர்களின் இஷ்டம்போல் வீட்டடங்கி, அவர்களுடைய சகல இல்லற சுகா சுகங்களில் பங்கெடுத்துக் கொண்டு, இல்லறத்தை நல்லறமாகச் செய்வது உங்கள் கடமையாகும்! நீங்களின்றி ஆண்கள் ஒருநாளாவது இல்லறம் நடத்த முடியுமா! அல்லது ஆணின் துணையின்றி நீங்கள் தான் இல்லறமாகட்டும் வேறெதுவாகட்டும் கௌரவமான முறையில் செய்ய முடியுமா? முக்காலும் முடியாது. முடியவே முடியாது. ஏனென்றால், கடவுளின் சிருஷ்டியே அப்படிப்பட்டது. அதனாலேயே இறைவனும், பரஸ்பரம் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் உடையாக சிருஷ்டித்ததாகக் கூறி, அதை மனதில் இருத்திக்கொண்டு, இல்லறத்தை இன்பமாக நடத்தச் சொல்லி ஆக்ஞாபித்துள்ளான்.

## ஆண்களுக்கு

நம் ஆண்ஜாதியினர் கவனிக்கவேண்டியதையும் கவனிப்போம். ஆண்ஜாதியினராகிய நாம், இறைவனின் கட்டளைகளுக்கிணங்கி, ஸ்திரீ ஜாதியினருக்குக் கடவுளின் ஆணைப்படி நியாயமாகக் கொடுக்கவேண்டிய உரிமைகள் எல்லாவற்றையும் மனப்பூர்வமாய்க் கொடுத்து, அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அந்தஸ்துகளை அவர்களுக்கு அப்படியே கொடுத்து அவர்களுக்கு அவசியமான சுயேச்சையை அளித்து, இறைவனின் கோபத்தினின்று நம்மைக் காப்பாற்றிக்கொள்ளுவோமாக! நாம் எக்காலத்திலும் ஸ்திரீ சாதியினரை—அதுவும், இறைவனின் கட்டளையை நிராகரித்து, நம் ஆதிக்கத்தில் அடிப்பங்கரையிலேயே வைத்திருக்கலாமென்பது மடமை! காலக்கூற்றையாவது கவனித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்! சண்டமாருதம் அடித்துவருகின்றது! நாம் அதற்கு எதிரிடையாக வெகுகாலம் நிற்க முடியாது! சந்தோஷமாக சட்டப்படி, அவர்களுக்கு (பெண்களுக்கு) உள்ளதை, அவர்களுக்கு அளித்துவிட்டால், அவர்களும் (பெண்களும்) அந்த இறைவனின் சட்டத்திற் கிணங்கி, நம் ஆதிக்கத்தில் இருந்து, நமது சுக துக்கங்களில் மனப்பூர்வமாக நமக்குத் துணைபுரிந்து, இல்லற இன்பத்தை

அளிப்பார்கள்! பலவந்தமாக அவர்கள் தங்களுடைய உரிமைகளை நம் கையிலிருந்து பிடுங்கிக்கொள்ள நேரிட்டால், அந்தோ! நாம் அவர்களுக்கு அடிமையாகும் காலத்தை சீக்கிரமாக எதிர்பார்க்கலாம். "சம்சாரம் சாகர" மாகவே முடியும். "வெள்ளம் வரும் முன் அணை கோலிக்கொள்வது" அல்லவா அறிவு! துருக்கியர்களென்ன, ருஷ்யர்களென்ன, வெள்ளைக்காரர்கள்—மேல்நாட்டார்களென்ன, இவர்களுக்கேதாவது இல்லற இன்பம் இருக்கிறதென்று எண்ணுகின்றீர்களா? இல்லவே இல்லை! நமக்குப் பெண்களின் பேரில் சிறிய ஆதிக்கத்தை இறைவன் அளித்துள்ளான். அதே இறைவன் நம் பெண்ஜாதிமார்களுக்கும் நம் மேல் சிறிது ஆதிக்கத்தை அளித்துள்ளான். அவன்—இறைவன்—ஆண்டவன், அவர்களுக்கு—பெண்களுக்கு அளித்துள்ளதை நாம் அநியாயமாகக் கையாடல் செய்துகொண்டு, பரம்பரை பாத்தியமாக அநுபவித்து வருகின்றோம். இயற்கையாகவே ஸ்திரீஜாதியினர் சற்று பலஹீனர்கள் தான். அதனால் நாம் அவர்களின் உரிமையைப் பறித்துக் கொள்ளலானோம். இது ஆண்களாகிய நமக்கு அழகா? அல்ல! அல்ல!!

'அரசன் அன்று கொன்றால் இறைவன் நின்று கொல்லுவான்"

என்பது பழமொழியல்லவா!

இப்பொழுது மேல்நாட்டார், பெண்களுக்கு வால் பிடித்துத் திரிவதை நாம் பார்த்து வருகின்றோம். நாம் கண் விழித்துக் கொண்டு, நம் இல்லாளை, நம் ஆதிக்கத்திலேயே வைத்துக்கொள்ள வேண்டுமாயின், அவளுடைய சட்ட பூர்வமான உரிமைகளை அவளுக்கு நாமாகவே கொடுத்துவிட்டால், நம் மனைவிமார்களும் தங்கள் கடமைகளை இறைவனது ஆணைக்கு அஞ்சி நமக்குச் செய்வார்கள். அவர்கள் இயற்கையிலேயே சற்று பலஹீனர்கள் ஆதலால்—இறைவன் அவர்களை அப்படிச் சிருஷ்டித்திருப்பதால்—இறைவன் எல்லாமறிந்தவன் ஆதலால், நியாயமாகவே அவர்களுடைய உரிமைகளைத் தெய்வீகமாக்கினதோடு நில்லாது, (குர் ஆன் 4-வது அத்தியாயத்தின் 1-வது வாக்கியத்தை ஞாபகப்படுத்திக் கொள்க.) அவர்களுக்கு அதிக உரிமைகளைக் கொடுத்து அவர்களுக்குச் சகல வசதி

களையும்—சௌகரியங்களையும் செய்து தரும்படியாக, ஆண் ஜாதியின ருக்கு ஆக்ஞாபித்திருக்கின்றான், இதற்குப் பிரதியாக, பெண் ஜாதியினரின் கடமை சுலபமாக நிறைவேற்றக்கூடியதல்ல. நம் முடைய கடமைகளை நாம் அதிகக் கவலையின்றி, உயிர் நிலைக்கு ஆபத்தின்றி, பயமின்றி நிறைவேற்றக் கூடும். நம் மனைவிமார்க ளின் கடமையோ அப்படிப்பட்டதல்ல.

நம்முடைய தாயானவர், எவ்வித பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பார்த்து நம்மைப் பெற்றாரில்லை. தான் படும் "மசக்கை" யையும், கர்ப்ப நோயையும், பிரசவ வேதனையையும் விவரித்தால் ஒரு பெரிய நூலாகவன்றோ முடியும்! தாய்மார்கள் பிரசவ வேதனை யின்பொழுது,

> "ஆண்டவனே! இனி நான் என் புருஷனுடன் கல க்க மாட்டேன்! அறியாமல் இப்பாபத்தை இழைத் தேன்! அதற்காக நான் இதுவரை, இவ்வொன்பது மாதங்களாகவும், இப்பொழுது இச்சில மணி நேர மாகவும் பட்ட கஷ்டங்கள் போதும், போதும்! இறைவனே, குற்றம் பொறுப்பாயாக! என்னை இக் கஷ்டத்திலிருந்து உடனே விடுவிப்பாயாக!"

என்று, என்னென்னவோ கூறுவதையும், கூறுவதாகவும் கேள்விப் படுகிறோம் அல்லவா! "பிரசவமொன்று, ஒரு மறு பிறப்பை ஒக்கும்" என்பதை நாம் அறிந்த விஷயமே. நம் மனைவிமார்கள் பிரசவத்திற்கு அனுப்பப்படும்பொழுது நாம் மறுபடியும் ஒருவரை யொருவர் சந்திப்போமா என்று, பரஸ்பரம் கண்ணீர் விடுவதையும் (நாம்) அநுபவித்தே வருகின்றோம். பிரசவமான பிறகும், சில நாட் கள் வரையில், தாய்க்குப் பல ஆபத்துகள் எதிர்பாராவண்ணம் ஏற் படுவதும் சகஜமாக இருந்து வருவதை எவரும் அநுபவித்தே இரு க்க வேண்டும். எத்தனையோ மனைவிமார்களும், சகோதரிகளும், தாய் மார்களும் பிரசவத்தின் பொழுதும், பிரசவித்த பின்னும் அதன் ஆயாசங்களால் இறந்துபோயிருக்கின்றனரே! எண்ணிறந்தவர்கள் அன்றோ! இவ்வளவு கஷ்டப்பட்டும், தன் உயிரையே தியாகம் செய்தும், தன் குழந்தையை மடிமீது கண்டவுடன், பட்ட கஷ்டங்

களையெல்லாம் அடியோடு மறந்துவிடுகின்றார்கள் அன்றோ! இதற்கெல்லாம் நாம் அவர்களுக்கு என்ன பிரதி பிரயோஜனத்தைச் சமர்ப்பித்தாலும் ஈடாகுமா? ஆகாது ஆகாது! ஒருக்காலும் ஈடாகாது! இவ்வளவு பாடுபட்டு, ஈன்றெடுத்த குழந்தைக்காகத் தன் உயிரையும் கொடுத்துவிடத் துணிந்துவிடுகின்றார்கள். அன்றோ அக்குழந்தைக்காக அத்தாய் படும் கஷ்ட நிஷ்டூரங்களுக்காக நம் உயிரையே கொடுத்தபோதிலும் அது அவற்றிற்கெல்லாம் ஈடாகுமா? தன் உயிருக்காதாரமான இரத்தத்தைப் பாலாகப் பல மாதங்கள் கொடுத்து வந்ததனால் தானே, நாம் இம்மனித நிலையை அடைந்து வந்திருக்கின்றோம் என்பதை (நாம்) மறந்துவிடக் கூடுமா?

நமக்காகவும் உலக விர்த்திக்காகவும், அடிக்கடி ஸ்திரீகள், பத்துப் பத்து மாதம் படாத பாடுகள் பட்டு, பிள்ளைகளைப் பெற்று, தன் உயிருக்கே ஆதாரமான தன் உடலின் இரத்தத்தைப் பால் ரூபமாகக் கொடுத்து வருங்கால், நம் தாய்மார் எவ்வித வேலையும் செய்ய சக்தியற்றுப்போவது பிரத்தியட்சமல்லவா! இப்படி, பலஹீனம்—வலுவின்மை முதலியவைகளால் கஷ்டப்படும்பொழுது, அவர்களுக்குப் புருஷர்களின் உதவி இன்றியமையாத தன்றோ! இங்கே நம் கடமையை நாம் செய்யவேண்டியிருக்கிறது. இதுமட்டுமல்ல, "சரீர சம்பந்தமாகவும், அங்க சாஸ்திரப் பிரகாரமும், ஸ்திரீயானவள் மனிதனுக்குக் கீழ்ப்பட்டவள் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது அவளுடைய மூளையும் கனமும் குறைவு; இருதயமும் சிறிது. மனிதனும் ஸ்திரீயும் முதல் முதலாக உண்டாக்கப்பட்ட காலத்திலோ-உண்டான காலத்திலோ சகல அம்சங்களிலும் ஒத்து இருந்திருக்கலாம். ஆனால், மனிதன் ஸ்திரீயை நீண்டகாலமாக மிகைத்து வந்திருப்பதாலும், இருவரது வாழ்க்கை முறையில் வித்தியாசங்களிருப்பதாலும், மனிதன் ஸ்திரீயைவிட ஒருபடி மேலானவனாக இருக்கின்றான். அவன், அதிக ஊக்கமும், வலிமையும் வாய்ந்தவனாக இருக்கின்றான். அவனுடைய தேக வலிமையும், மனோ வலிமையும் ஸ்திரீயைக் காட்டிலும் அதிக காலம் நீடித்து நிற்கின்றன. அவனுடைய அறிவும் அதிகமாய் விருத்தியடைந்தது. சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், இப்னுருஷத், கஜ்ஜாலி, அலக்சாந்தர், நியூட்டன், சீசர், புத்தர், மூசா, இயேசு, முகம்மது நபி, உமர்,

ஹாபீஸ், நெப்போலியன், லெனின், கமால், முஸோலினி, ஜக்லூல், காந்தி, முகம்மதலி முதலிய உலகப்பிரசித்தி பெற்றவர்களெல்லாம் ஆண்பாலரே யாவர். ஆனால், மனிதர்களின் இவ்வாயிரக்கணக்கான வருட வாழ்க்கையில், ஸ்திரீகளும் அதிகமாகச் சில குணாதிசயங்களை விருத்தி செய்திருப்பினும், மனிதன் சில கெட்ட குணங்களையும் விருத்தி செய்து வந்திருக்கின்றான். அவன் ஸ்திரீயைவிட மூர்க்கனாகவும், காம இச்சையுள்ளவனாகவும் இருக்கின்றான். அவன், ஸ்திரீயினும் அதிகமான பிராணிகளை வதைத்து, மனித இரத்தத்தையும் சிந்தியிருக்கின்றான். அவன் ஸ்திரீகளைக்காட்டிலும் கெட்ட நடவடிக்கைகளும் துர் ஆச்சாரங்களும் நிறைந்தவனாக இருக்கின்றான். அவனுக்குக் குடியும் சூதாட்டமும் அதிகம். அவனுக்குக் கோபம் கிளம்பிவிட்டால் அதை அடக்க இயலாது. சிறிய விஷயங்களையும் பெரிதாக எண்ணிவிடுகின்றான்.

> இருபாலார்களின் சக்திகளையும், ஒவ்வொருவரும் நன்றாக அறிந்துகொண்டால்தான், சமூகம் ஒருமைப்பட்டு விருத்தியடையும். சில விஷயங்களில் ஸ்திரீகள் மனிதனின் மேன்மையையும், சில விஷயங்களில் மனிதர்கள் ஸ்திரீகளின் மேன்மையையும் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

என்று ஒரு அறிஞர் எழுதுகின்றார். இதனால் விளங்குவதென்ன? ஸ்திரீ புருஷர்களுக்கிடையில் அதிக வித்தியாசமில்லையென்றும், இருவரிடத்தும் விரும்பப்படாத இயற்கைக் குணாதிசயங்கள் உண்டென்றும், ஆகையால் சகஜமாக ஆண்கள் ஸ்திரீகளைவிட எல்லா விஷயங்களிலும் மேலானவர்களென்றும் கருதி, ஸ்திரீகளை இழிவாக நடத்தி வருவது அறிவின்மையான விஷயம் என்றும் விளங்குகின்றது. மேலும், பரஸ்பரமுள்ள உயர்வையும் தாழ்வையும் அறிந்துகொண்டால், கௌரவமான சமரச வாழ்வை நடத்தலாம் என்றும் தெரிந்துகொள்ளுகின்றோம்.

மனிதர்களே ஸ்திரீகளைக் காட்டிலும், தேக வலுவிலும் மனோவலுவிலும் சற்று மேம்பட்டவர்கள் என்று, சரீர சம்பந்தமாகவும்

அங்க சாஸ்திரப் பிரகாரமும் நிரூபிக்கப்பட்டிருக்கிறதென்று முன்னரே தெரிந்துகொண்டோம். இதன் பலனாகவே இறைவன்,

"புருஷர்கள் ஸ்திரீகளை ஆதரிக்கக்கூடியவர்களாயிருக்கிறார்கள்"

என்று கட்டளையிட்டு, அதற்கென்று,

"அவர்களுள் ஆடவரே அந்தஸ்தில் உயர்ந்தவர்களாயிருக்கிறார்கள்"

என்று உபதேசித்து, மனிதனுக்கு ஸ்திரீகள் சம்பந்தமாகப் பல கடமைகளைச் சொல்லியிருக்கின்றான். இதனால் தான், தன் மனைவி மக்களின் சகல சௌகரியங்களையும் வசதிகளையும் கவனிக்கவேண்டியதையும், குடும்பத்தைப் பராமரிக்க வேண்டியதையும் மனிதனின் கடமைகளுக்குள் வைக்கப்பட்டிருக்கின்றது.

இதை ஒப்பவே ஷாபன் ஹாயர் என்ற தத்துவ சாஸ்திரியார்,

"ஸ்திரீகளுக்குத் தந்திரந்தான் ஆதாரமேயொழிய, பலம் ஆதாரமன்று; ஆகவே, அவர்கள் சுபாவமாகவே தந்திரசாலிகளாயும், திருந்தாத முறையில் உண்மையல்லாதனவற்றைப் பேசும் இயல்புள்ளவராயுமிருக்கின்றனர்"

என்று கூறி, மேலும்

கடினமான மன உழைப்போ, தேக உழைப்போ செய்வதற்காக, ஸ்திரீகள் உண்டாக்கப்பட்டனரல்ல என்பது, அவள் தேக பான்மையைக் கவனித்தாலே நன்கு தெரியவரும். அவள் தனது வாழ்க்கையின் கடமைகளைத்தனது உழைப்பினாலன்று, கர்ப்பத்தில் சிசுவைச் சுமப்பது, பிரசவ வேதனையால் துன்பப்படுவது, குழந்தையை வளர்ப்பது, பொறுமையைக் கைக்கொண்டு உற்சாகமுட்டிவர வேண்டியது, கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது முதலிய கஷ்டங்

களினால் நிறைவேற்றுகின்றாள். மிக்க துக்கங்களும், சந்தோஷங்களும் அவள் அனுபவிக்கக்கூடியவள் அல்லள். அவள் அதிக பலத்தையும் உபயோகிக்க எதிர்பார்க்கப்படவில்லை"

என்று கூறியிருப்பதிலிருந்தும், நம்முடைய சொந்த அநுபவத்திலிருந்தும், நாம் ஸ்திரிகளைப் பராமரித்து, அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுடைய தற்கால கேவல நிலையிலிருந்து அவர்களின் அந்தஸ்தை உயர்த்தி, இறைவனின் சிருஷ்டியில பாதிக்குமேற்பட்ட சங்கியை (எண்ணிக்கை) யுடைய மனிதப் பிறவிக்கு, இதுவரை நாம் செய்து வந்த அநியாயத்தை இனியும் செய்யாமல், இறைவன் ஆணைப்படி நடந்துகொள்வோமாக.

நம் ஹிந்து கிறிஸ்தவ குமாரிகள் தங்கள் உரிமைகளை அடைய தங்கள் வேதக்கட்டளைகளையும், தங்கள் தேவ ஆக்ஞைகளையும், தங்கள் மத போதகர்களின் உத்திரவுகளையும் உதறித் தள்ளிவிட வேண்டிய அவசிய மேற்படுகின்றது. இஃதோர் தர்ம சங்கடமே. முஸ்லிம் சகோதரிகளோ, தங்கள் புருஷன்மார்களின் பண்டைக்கால அநியாயமான ஆதிக்கத்திலிருந்து தங்களை நீக்கிக்கொள்ள, அவர்களின் வேதமும் தேவனும் பக்கபலமாக இருக்கின்றது. ஆனதால் அவர்கள் தங்கள் கணவன்மார்களைப்பற்றி கவனிக்காமல், தெய்வ ஆஃஞைப்படித் தங்கள் உரிமைகளைப் பெறக்கூடும். ஆனால் நம் ஹிந்து கிறிஸ்தவ சகோதரிகள், தங்கள் வேதக்கட்டளைகளுக்கு விரோதமாகப் போனாலொழிய விமோசனமில்லை. அப்படிப் போனாலொழிய நம் பரத கண்டத்திற்கும் விமோசனமில்லை. ஒருக்காலுமில்லை. ஆனால் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ தங்கள் மத போதனைகளுக்கு விரோதமாகவே நடந்துகொண்டு தங்களை அடிமைத்தனத்தினின்று நீங்கிக்கொண்டு வருகின்றனர். இப்படி அவர்கள் தங்கள் மதத்திற்கு விரோதமாக நடந்துகொள்ளுவதை நவீன மனப்பான்மை கொண்ட ஆடவர்கள் நாகரீகம் என்று கொள்ளுவதும் நல்ல சகுனமே.

இது சம்பந்தமாய் நாம் நம் சகோதரிகளை, தங்கள் தங்கள் மதத்திற்கு விரோதமாக நடந்துகொள்ள ஏவுவதாக வாசகர்கள்

கொள்ளக்கூடாது. பகுத்தறிவுக்கும் நியாயத்திற்கும் விரோதமான எதையும் மதமென்று ஏற்றுக்கொள்ள எம்மைப் பொருத்த வரையிலும் யாம் ஒப்புக்கொள்ள முடியாது. அப்படியே ஒவ்வொரு வாசகர்களும் தங்கள் தங்கள் பகுத்தறிவை உபயோகித்து நீதியை வழங்குவதே நம் பாதகண்ட விடுதலைக்கு ஏற்றதாகும் என்போம்.

ஒன்றுமட்டும் நிச்சயம். முன்னர் எடுத்துக் காட்டிய மத வேத ஆதாரங்களைக் கைக்கொண்டால், நம் சகோதரிகளை அடிமைகளாகவும் பாபிகளாகவும் அசுத்தமானவர்களாகவும் விபசார தோஷமுள்ளவர்களாகவுமே தான் கருதி அப்படியே அவர்களை நடத்தி வர வேண்டும். அப்படி நடத்தும்வரை நமக்கு எப்பொழுதும் எத்தேசத்திலும், எச்சாதியாராலும் அவமானமேற்படுமே ஒழிய, நம் இந்திய நாட்டிற்கு விமோசனம் எப்பொழுதும் கிடைக்காது என்பது நிச்சயம். மிஸ் மேயோ போன்றவர்கள் எழுதும் எல்லாவற்றிற்கும் தலைகுனிய வேண்டியதே. நமக்கு இன்பமளித்து, நம் சுக துக்கங்களில் பங்கெடுத்துவரும் நம் உடன்பிறந்த சகோதரிகளுக்கு நாம் சுயேச்சை கொடுத்தால், அன்றே நமக்கு சுயேச்சை. அதற்குமுன் தெய்வாதீனமாய் நமக்கு சுயராஜ்யம் கிடைத்தாலும் அது ராம ராஜ்யமாகவோ மனு மஹாராஜனின் ராஜ்யமாகவோதான் முடியுமே ஒழிய, உண்மை சுயராஜ்யம் ஆக முடியாது. பூர்ண சுயராஜ்யம் வேண்டுமானால், எப்படி பெண்ணில்லாமல் ஒரு ஆண் பூரண மடைய முடியாதோ அப்படியே இந்திய-பாரத-குமாரிகளுக்கு சுயேச்சை இன்றி இந்தியாவிற்கு சுயேச்சை இல்லை என்று திட்டமாகக் கூறுவோம்.

நன்னோக்கமுள்ள தேசிய வாதிகள் இப்பொழுதே நம்மிந்திய குமாரிகளுக்கு அவசியமான சகல உரிமைகளையும் பத்திரமூலமாகக் கொடுத்துவிட்டு, அதை அமுலில் கொண்டுவரச் செய்யவேண்டும். இல்லையேல் சுயராஜ்யம் பெற்றபிறகு தேசியவாதிகளில் இப்போதைய மனோபாவனைப்படியே ராமராஜ்யத்தையோ மனு மஹாராஜனின் ராஜ்யத்தையோ பண்டைய இந்திய மத ராஜ்யத்தையோ நிலை நிறுத்தினால் நம் சகோதரிகளை மறுபடியும் மதவேதப்படி அடிமைகளாகவும் விபசார தோஷமுள்ளவர்களாகவும், செய்து மனுஷ்யன் தன்னை சர்வ ஸ்வதந்தரமுள்ளவனாக்கிக் கொண்டு, ஸ்திரீ ரத்தினங்

களைத் தட்டுமுட்டு சாமான்களைப் போலப் பாவிக்கப்போகின்றார்களோ என்ற பயமில்லாமலில்லை. மத வேத கட்டளை இப்படி இருக்கையில், அதன்படி ராஜ்யாதிகாரம் செலுத்தும்பொழுது யார் என்ன குறை கூற முடியும்?

நாம் நமது அநுபவத்தில் எந்தக்காரியத்திலும் புருஷன் பெண் சாதி இருவர்மனமும் ஒன்றுபட்டு-கோணாமல்-அபிப்பிராய பேதமில்லாமல் நடந்துவருவது எவ்வளவு சிக்கனமாயும் சிறப்பாயும் நடக்கின்றன. நாம் நம் கண்களால் பார்ப்பதுதானே! அப்படியிருக்க, அவர்களே வெளியில்-வெளிக்காரியங்களில், பேதபாவ-சமத்துவமின்றி நடந்துகொள்ளுகிற காரியங்களில், சிற்சில சமயங்களில் முரண்பாடேற்பட்டு தீமைகள் ஏற்படுகின்றனவல்லவா! வீட்டுக்குள் ஒற்றுமையோடு நடந்து கொள்ளுகிறவர்கள் வெளியில் சுயேச்சையாய் நடந்துகொள்வதாகக் காட்டிக் கொள்வது எதற்கு என்பதையே யோசிக்க வேண்டுகின்றோம். உள்ளும் புறமும் ஒன்றாயிலங்கவே வேண்டுகின்றோம். உள்ளும் புறமும் ஒன்றானால், உயர்வின் ஒளி உலகமெங்கும் வீசி உன்னதத்தை உண்டாக்காதா! உலகம் போற்றாதா!! உள்ளொளியை இருளடைந்ததாகவே வைத்திருப்பதாலன்றோ நாமும் நம் தேசமும் இருளடைந்திருக்கின்றோம். உள்ளும் புறமும் ஒன்றாக-சமத்துவமாக விளங்குவதாலன்றோ ஆமி சான்சன் போன்ற இளமாதர்கள் எவ்வுலகமும் போற்ற-எவரும் புகழ-இராஜாதி ராஜர்கள் மதிக்க விளங்குகிறார்கள்.

ஆனதால், ஸ்திரீகளின் சுயேச்சையை விரும்பும் அரசாங்கம் இருக்கும் பொழுதே, நம் இந்திய குமாரிகள் தங்களது நியாயமான உரிமைகளை எல்லாம் பெற்றுக்கொள்ள வேண்டும். நியாய புத்தியுள்ள ஆண் மக்கள் இவர்களுக்கு உதவி புரிவார்களாக. இறைவனும் அருள் பாலிப்பானாக.

நம் முஸ்லிம் சகோதரிகள், எப்படித் தங்கள் ஜெயிலறைகளிலிருந்து வெளியாகி, தங்களுக்கு இறைவனால் அளிக்கப்பெற்ற உரிமைகளையெல்லாம் பெறுவது என்பதை அறிய, வேறொரு புத்தகம் எழுதப்பெற்று வருவதை எதிர்பார்த்திருப்பார்களாக.